தென்னகத் தலைவன்

ஆசிரியர் : தினகரன்

மலர் 1	1—5—63	தி. மு. கழக வார ஏடு	விலை 16 காசு	இதழ் 27

கருத்துக் குருடர் பக்தவத்சலம்!

''பண்டித நேரு-தான் கொடுதத உறுதிமொழியைக் காபபாறறத தவறிவிட்டார்'' என்று மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பாவும், கேரள முதலமைச்சர் சங்கரும் கண்டித்துப் பேசியிருக்கிறர்கள். ஆனுல் நமது கல்வி மந்திரி பக்தவத்சலம் ''உறுதிமொழியை நேரு காப்பாற்றியிருக்கிறர்'' என்று பேசியுள்ளார்!

பாடை மொழி வருகிறது படையெடுத்து!

பண்டிதர்தான் அனுப்புகிறார் வாள் கொடுத்து!

பத்துலட்சம்' அழைக்கின்றார் பாக்கு வைத்து!

வீரத்தை வாதையாக அணிந்து வெற்றிக் கொடியை விண்ணிலே தவழ-விட்ட மறவரினத்திடம் விளையாட வந்திருக்கிறது இந்தி!

விவேகத்தின் விளை நிலமாய்—வித்தர்களின் பிறப்பிடமாய் விளங்கும் வியன்மிகு மொழியாம் முத்தமிழிடம், அவிவேகப் பாடையாம் இந்தி, அகிலத்தை அரசாற்றுகிறேன் பார், என்று எக்காளம் ஊதி வருகிறது!

மொழி வெறியர்களின் தர்பாரிலே இந்தி சொக்கட்டான் ஆடப்படுகிறது.

துரியோதனன் படையா வடபுலத்தாரும், பாண்டவர்களாக தென்புலத்தாரும் காட்சியளிக்கின்றனர்!

தேசிய மொழி என்ற தாயத்தைக் காட்டி இந்தி வெறியர்களது தர்பார், வெற்றிப் பறையறைந்து, தென்புலத்துத் தீரரை அடிமைப்படுத்திட பகீரதப் பிரயத்தனம் புரிகிறது!

துரியோதனர்களாகக் கொலுவீற்றிருக்கும் வடபுலத்தார்; நீதி நாடி நிற்கும் பாண்டவர்களை மொழிப் போரெனும் குருட்சேத்திரத்திலே வெற்றி பெற்றிடலாமென்று, சகுனியெனும் 'சாஸ்திரி'யின் சூழ்ச்சிக் கணைகளோடு மோதி வருகிறார்கள்!

இந்தி என்ற அரவக்கணை அரவமிட்டபடியே சீறி வருகிறது!

பாதுகாப்புச் சட்டமெனும் 'தீக்கணை கனலைக் கக்கி வலம் வருகிறது!

பிரிவினைத் தடுப்பு என்ற காற்றுக்கணை புயலுருவிலே புகுந்துவிட்டது!

பாண்டவரை வெல்லும் ஆற்றல் கவுரவர்கட்கு உண்டா? அல்லது பாசுபதக் கணையாம் மக்கள் சக்தியிடம் அடிபணிந்து அவமானப்படும் நிலையினை சகுனியின் அடிவருடிகள் பெறுவார்களா என்பதை காலம்தான் நீதி கூறி கணிக்க வேண்டும்.

பாரதம் என்ற 'அரக்கு மாளிகை'யிலே அபாயமாக வதியும் மக்களை, மொழியாதிக்கத்தின் பெயரால், விழிகளைப் பறிக்க சதி செய்து விட்டனர் வடவர்கள்!

திராவிட இனம் திண் தோள் தட்டி புறப்பட்டு விட்டது!

கேரள முதலமைச்சர் இநதித் திணிப்பை எதிர்த்து கேள்விக் கணை சொரிகிறார்!

ஆந்திரத் தலைவர்கள் இந்தியின் அற்ப ஆனவத்தைக் கண்டு ஆச்சரியப்படுகின்றனர்!

கர்நாடகமோ. கவசம் பூண்டு, கனல் ஈட்டிக் கொண்டு கடுகிப் பாயத் தயாராகிவிட்டது!

தமிழகம்தான் அவமானச் சின்னமாக, 'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற வேதாந்த மவுனத்திலே ஊமை வேடமிட்டிருக்கிறது!

வீடணர் பக்தவத்சலம் வழக்கம் போல 'துரோக அறிவுரை'யை நவின்று வருவதைப் பார்க்கிறோம்!

மொழிக் களத்திலே இந்தி வெறியர்களோடு பொருதிட, கிலி பிடித்த 'மீசை'களை 'அலி' போன்ற 'அவரங்களை' விலகியிருக்கச் செய்து விட்டு எலியென எதிர்க்கும் பகையோடு, நமக்கு வலியுள்ள வரையில் -புலியென மோதிடத் தயாராகி விட்டோம்.

தென்னவருக்கும் வடவருக்கும் நடைபெற விருக்கின்ற இந்தப் போர் **"மொழிப் போரல்ல, அரசியல் ஆதிக்கப் போர்", என்று அறிஞர் அண்ணா** அறைந்த கருத்து, எத்தகைய அடிப்படை உண்மை என்பதை மக்களறிவர்!

மயிலாசனம் அமைத்து, மகர தோரணம் கட்டி, அரியணை அலங்காரம் புனைந்து, நடை பாவாடை விரித்து, இந்தி லம்பாடியை வரவேற்கும் இழிகுணம் கொண்டவர்கள் 'நாங்குநேரி' பல்லவி பாடுகின்றனர்!

ஆனல் இந்தத் துரோகக்கச்சேரி, உலகில் வேறெங்கும் நடைபெறவில்லை.

அயர்லாந்து நாட்டிலே இது போன்ற ஒரு அரசியல் ஆதிக்கப் போர் மொழியின் பெயரால் அரும்பியது!

கடலலை போல் பொங்கியெழுந்தனர் ஐரிஷ் நாட்டு வீரர்களான சின்பின் இயக்கத்தவர்கள்.

கோடை இடிபோல், ஆங்கிலத்தை எதிர்த்து வீர முழக்கமிட்டனர்; தான்—பிரீன், டிவேலரா, மைக்கேல் காலின்ஸ் போன்ற அயர்லாந்து நாட்டுத் தலைவர்கள்.

ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஏற்கமாட்டோம், ஐரிஷ் மொழியே எமது அரியணை மொழி என்று சூருவளி வேகத்திலே மொழியாதிக்கச் சூழ்ச்சியினை அம்பலப்படுத்தினர் அவர்கள்.

உலக மொழியாம் ஆங்கிலத்திற்கே அந்த கதி என்றால், இலக்கண—இலக்கிய வளமேயில்லாத லம்பாடி மொழியாம் இந்திக்கு எந்நிலை இருக்க வேண்டும்?

என். வி. கலைமணி

(8-ம் பக்கம் பார்க்க)

இந்தியைத் திணித்தால் நாடு பிரியும்— பிரிட்டிஷ் பத்திரிகையின் எச்சரிக்கை!

ஆங்கிலம் அன்னிய ஆட்சியாளர்களால் புகுத்தப்பட்டது. அதன் இடத்தைத் தங்கள் நாட்டுமொழியே பெற வேண்டும் என்று இந்தியாவில் பல தேசியவாதிகளும் விரும்புவர். ஆனல் வட இந்தியாவில் சில குறிப்பிட்ட பகுதிகளில்தான் இந்தி பேசப்படுகிறது. எனவே இந்திமொழி பேசுபவர்களுடன் சரி நிலையில் தங்களால் போட்டியிட முடியாது என இந்தி பேசாத பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். வட நாடு, தென்னடு என்று வரலாற்று அடிப்படையில் இந்தியா இரு பிரிவிகளாக அமைந்திருக்கின்றது. இப்பொழுது மொழிச் சிக்கல் காரணமாக எழுந்துள்ள பிளவும் வட நாடு, தென்னடு என்ற அடிப்படையில் இருப்பது தீவினைப் பயனகும். ஏற்கனவே இவ்விநப் பிரிவு உள்ள இந்த நிலையில் இந்தியை ஆட்சிமொழியாகத் திணித்தால் இப்பிரிவு உணர்ச்சி மேலும் வளரவே செய்யும்.

—'கார்டியன்'

மோசடி மசோதா!



1975-ம் ஆண்டில் ஆட்சி மொழிபற்றி ஆராய பார்லிமெண்ட் கமிட்டி நியமிக்கப்படும் என்று மசோதாவில் அறிவித்திருப்பது வெளிவேஷமாகும். தென்னகமக்களுக்கு வேண்டுமென்றே செய்யப்பட்ட துரோகமாகும். தென்னக மக்களுக்கு திருப்தியளிக்கும் வகையில் மசோதாவைத் திருத்த முடியாது போனல் இந்தி வேண்டுமாஎன்பது குறித்து பொதுஜன வாக்கெடுப்பு நடததவேண்டும்.

இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்று பிரதம மந்திரி வாக்குறுதி கூறினர். அவருடைய நல்லெண்ணத்தில் எங்களுக்குச் சந்தேகம் கிடையாது. ஆனல் அவருடைய வாக்குறுதி கூனிக் குறுகிக் கரைந்து கருத்துவிட்டது பரிதாபத்திற்குரியதாகும். நேரு கொடுத்தது தெளிவான வாக்குறுதியாகும். அந்த வாக்குறுதியை இந்த மசோதா மூலம் அமுலாக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

ஆனல் ஆட்சிமொழி மசோதாவில் பிரதம மந்திரியின் வாக்குறுதி எங்கே இருக்கிறது? தென்னக மக்களை ஏமாற்றுவதாக இருக்கிறது இந்த மசோதா. பிரதமரின் வாக்குறுதியை அரசியல் சட்டத்தில் சேர்க்கவேண்டும். அல்லது இந்த மசோதாவில் சேர்க்கவேண்டும். அப்போதுதான் தேசத்தின் ஒற்றுமை காப்பாற்றப்படும். உள்துறை அமைச்சருக்கும் பிரதமருக்கும் இடையே சமரச ஏற்பாடு போல அமைந்துள்ளது இந்த மசோதா.

ஆட்சிமொழிப் பிரச்னையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்திக்கு ஆட்சிமொழி அந்தஸ்து கொடுக்கும் அரசியல் சட்ட ஷரத்தை மாற்ற வேண்டும். இந்தியை ஆட்சி மொழியாக நாங்கள் ஒரு போதும் ஏற்க முடியாது."

—பாராளுமன்றத்தில் கி. மனேகரன்

மலர் 1 | 1-5-63 | இதழ் 27

அடுத்த இதழில் - படிக்கத் தவறாதீர்கள்!

தினகரன் எழுதும்-

ண்டுக் காகித

துணைக்கண்டப் பிரதம

(ஓரங்க நாடகம்)

கண்ணதாசனுக்கு வ ல்

(வசன கவிதை)

சண்டியர் சம்ப

(அவரே பேசுவார்)

கூப்பிடு கூப்பிடு யார் பகைவர்?

மே, முதல் நாள் -

விலங்கொடித்து வெற்றி கண்ட தொழிலாளர் சமுதாயத்தின் திருநாள்.

ஓய்வின்றி இயந்திரம்போல் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் உழைப்புக்கு ஒரு வரம்பு கட்டிக்கொண்டு உரிமைக் குரலெழுப்பி வெற்றி கண்ட புனிதப் பெருநாள் மே, முதல் நாள்.

1884-ம் வருடம் மே, மாதம் 1-ம் தேதியன்று அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரத்தில் ஆலைத் தொழிலாளர்கள் தங்களின் 8 மணி நேரக் கோரிக்கையை வலியுறுத்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

8-மணி நேரக் கோரிக்கையை தங்கள் முதற்கோரிக்கையாக வைத்துப் போர் தொடுக்கப் பொங்கி எழுந்தனர்.

நீண்ட போராட்டத்திற்குப் பின் அவர்களுக்கு நீதியின் வாசல் திறக்கப்பட்டது நாள் ஒன்றுக்கு 8 மணி நேர உழைப்பு அமுலாகியது.

நியாயமான செயலுக்கு மிகத் தீவிரமாகப் போராடி வெற்றி கண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் மே, முதல் நாள்.

இன்று ஆலை அரசர்களாலும், பலதரப்பட்ட தொழில் நிறுவனங்களின் முதலைபோன்ற முதலாளிகளினாலும் கசக்கிப் பிழியப்படும் தொழிலாளர்களுக்கு வேண்டிய உரிமையை பெற்றுக்கொடுக்கவும்-தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் வெற்றிபெறப் போராடியும் வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

தொழிலாளர்களின் உரிமைக் குரல் ஓங்கி வெடித்து வெற்றி கண்ட நாளாகிய மே, முதல் நாளை ஆண்டு தோறும் தி. மு. கழகம் மிகச் சிறப்பாகக் கொண்டாடிவருகிறது.

மே. முதல் நாள் நமக்குச் சொல்வதெல்லாம், “வலிவான சக்திகள் சிதறிப் போகாமல் ஒன்று பட்டுப் போராடினால் எத்தனை பெரிய ஆதிக்கத்தையும் அதன்பிடிவாத நிலையிலிருந்து சர்வசாதாரணமாக இறக்கிவிடலாம்'' என்பதுதான்.

இந்திமொழி பேசாதோரின் கடுமையான கண்டனக் குரலுக்குச் செவிகொடுக்காமல் பிடிவாதமாக இந்தி மொழிக்கு வைரமுடி சூட்டுவிழா நடத்திவிட்டார்கள் இந்தி வெறியர்கள்.

“இந்தியுடன் ஆங்கிலமும் பயன்படுத்தப்படலாம்''-என்று கண் துடைப்புச் செய்திருக்கிறார்கள்.

“இந்தியுடன் ஆங்கிலமும் பயன்படுத்தப்பட வேண்டும்” - என்ற எதிர்க் கட்சிகளின் ஜனநாயகக் குரலைக்கூட அவர்கள் மதித்து ஏற்றுக் கொள்ளவில்லை.

தி. மு. கழத்தைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தி திணிக்கப்படுவதைக் கண்டித்து-இந்தி வெறியர்களுடன் தெளிவாக விவாதித்திருக்கிறார்கள்.

பண்டித நேரு அவர்களின் வாக்குறுதி குப்பைக் காகிதமாகி விட்டதை எடுத்துக் காட்டி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

அரை-குறை வளர்ச்சியோடு அரியாசனம் ஏறியிருக்கும் இந்தி எங்களுக்கு அந்நிய மொழிதான் - தேசிய ஒற்றுமை எனும் பிணைப்பின் மூலம் நாங்கள் அதை ஏற்றுக்கொள்வோம் என்று கனவுகாணாதீர்கள் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்.

நாலு கோடித் தமிழ் மறவர்களின் பக்கத்துணையோடு ஒலித்த-அந்தக் குரலைத் துச்சமாக ஒதுக்கிவிட்டு இந்தி வெறியர்கள் சட்டத்தை நடை வண்டி உருட்ட வைத்திருக்கிறார்கள்.

நியாயமான உணர்ச்சி மதிக்கப்படாததால் தி. மு. கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள்-பாராளுமன்றத்தைவிட்டு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.

நேருவின் வாக்குறுதி காப்பாற்றப்பட்டிருக்கிறதென்று லால்பகதூர் சாஸ்திரி மிக உருக்கமாகப் பேசியுள்ளார்.

நேரு தந்த வாக்குறுதியின் வாசகம் என்ன?

“இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும்வரை, ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கும். இந்தி, திணிக்கப் படமாட்டாது.''

இது அல்லவா பண்டிதரின் வாக்குறுதி - இது எங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது?

பண்டிதரே பாதை மாறி நடக்கத் தொடங்கிவிட்டபொழுது சாஸ்திரிகளின் வார்த்தைகளை வைத்துச் சர்ச்சை செய்து கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை.

இனி இதில் வெற்றி பெறப்போவது நாமா-அவர்களா என்ற முடிவான எல்லைக்கு வந்துவிட்டோம்.

போர் முகத்துக்கான அறிகுறிகள் ஆரம்பமாகிவிட்டன!

அதன் முதற்கட்டம் தான் சென்னைக் கடற்கரையில் 29-4-63 நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டம்.

வழி நடத்திச் செல்லும் தலைவர்கள் மிகத் தெளிவாகக் கூறிவிட்டார்கள்-“இந்தி ஏகாதிபத்தியத்தை முறியடிக்கவேண்டுமானால் மிகப் பெரிய தியாகம் செய்யாமல் நாம் வெற்றிபெற இயலாதென்று!”

“இந்தி மொழியைத் திணித்துவிட வடக்கே பத்துப் பிணம் விழுகிறதென்றால்-அதை எதிர்த்துத் தமிழகத்தில் நூறு பிணம் விழவேண்டும் அதற்கு நீங்கள் தயாரா''-என்று அண்ணா அவர்கள் மிக உருக்கமாகக் கேட்டார்கள்.

கொளுந்து மணலில் கூடியிருந்த கொள்கை மறவர் கூட்டம் பெரும் ஆரவாரத்துடன் விண்ணதிர “தயார் தயார்” என்று போர் முழக்கமிட்டது.

தயாராகிவிட்டது இங்கே படை!

தளராது இனி அவர்களின் வீர நடை!

கூப்பிடு! கூப்பிடு! யார் பகைவர் என்று குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்தி வெறியர்கள் இந்த உணர்ச்சிக் குரலை இலேசாக மதிப்பார்களானால்-அவர்கள் தங்கள் வரலாற்றில் மிகப் பெரிய தோல்வியை பொறித்துக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

இது வடக்கத்தியர்களுக்கும்-தென்புலத்துத் தீரர்களுக்கும் நடக்கும் நீண்டகாலப் போராகமட்டுமல்ல-கடைசிப்போராகவும் இருக்கும்.

இந்தி வெறியர்களே! இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ள உங்களுக்குத் துணிவிருக்குமானால்-இந்திச் சட்டத்திற்குக் கடிவாளம் மாட்டுங்கள் - கண் படுதாப் போடுங்கள் - லாயத்தை விட்டு வாருங்கள்-களத்திலே சந்திப்போம்.

அறைகூவலை ஏற்றுக்கொள்ளும் துணிச்சல் இருந்ததாக உங்களுக்கு வரலாறே இல்லாதபோது-நீங்கள் நேர் வழியில் போர் முனைக்கு வருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை.

நீங்கள் எந்த வழி வந்தாலும் அந்த வழி காத்திருப்போம்!

அண்ணன் வழி தான் நடப்போம்!
அறத்தின் வழி போர் தொடுப்போம்!
விழுப்புண் ஏற்போம்! வெற்றி பெறுவோம்! எங்கள்
தமிழின் மீதாணை! தாயின்மேல் ஆணை!

இந்தியைத் திணித்தால்-

நாடு சிதறுண்டு போகும்!

"தினமணி"யின் எச்சரிக்கை!

ஆட்சி மொழி மசோதாவில் ஹிந்தியின் எதிர்கால உபயோகத்தைப் பற்றிய ஷரத்துக்களுக்கு இரண்டு திருத்தங்களை உள்துறை மந்திரி ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி அறிவித்துள்ளார். அவற்ருல் விளையக்கூடிய நன்மை தீமைகளை மதிப்பிட இது தருணமல்ல. அது பெரும்பாலும் ஷரத்துகளின் அமைப்பையும் பொருளையுமே பொறுத்திருக்கும். ஆனல் பார்லிமெண்டில் நடந்த விவாதத்தில் கவனிக்காது விட்டுவிட்ட ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அதுதான் இப்பொழுது மத்திய அரசாங்கப் பணிகளில் ஹிந்தியின் உபயோகம் விஸ்தரிக்கப்பட்டு வரும் விதம். இதைப் பற்றிய முழு நிலவரத்தையும் அங்கத்தினர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இப்போதைய நடைமுறை எவ்வளவு அநீதி நிறைந்தது என்பதைத் தெளிந்தறிந்து தாமதமின்றி பரிகாரம் காணவேண்டும்.

உதாரணமாக ஸ்ரீமதி யசோதரா ரெட்டி என்ற காங்கிரஸ் எம். பி., விவாதத்தின் போது சுட்டிக் காட்டிய ஒரு அக்கிரம நிலை, இவ்விஷயமாக இழைக்கப்பட்டு வரும் அநீதிக்கு ஒரு உதாரணம். அவரது கணவர் மத்திய அரசாங்க ஊழியர்; ஹிந்தியில் போதிய தகுதியை அவர் பெறவில்லை என்று சொல்லி, வழக்கமாக வருஷவாரி கிடைக்க வேண்டிய சம்பள உயர்வை ஒரு அதிகாரி நிறுத்தி விட்டாராம். இது பிற மொழியினர் மீது ஹிந்தியைத் திணித்து, அதில் தகுதி பெருவிடில் தண்டனை விதிக்கும் ஏற்பாடு. இப்பொழுது நடைபெறுகின்ற விவாதத்தின் உணர்வுக்கும் கருத்துக்கும் இதைப் போன்ற நடைமுறைகள் முற்றிலும் எதிரிடையானவை. இதே மாதிரி இன்னும் எவ்வளவோ வெவ்வேறு வகைகளில் ஹிந்தியின் கட்டாயத் திணிப்பு நடந்து வருகிறது.

மற்ருெரு மன்னிக்க முடியாத, அவசியமில்லாத ஏற்பாடு. சமீபத்தில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளை ஹிந்தியிலும் எழுதலாம் என்று உத்தரவிடப்பட்டிருப்பது. இது பரவலாக எரிச்சலை ஊட்டுவதுடன், அநீதிகள் வரம்பின்றி வளருவதற்குத் தான் பயன்படும் என்பதை எடுத்துக் காட்டினேம். ஆங்கிலத்தில் எழுதப்பெறும் விடைகளின் தரம், ஹிந்தி விடைகளின் தரம் ஆகிய இரண்டும் ஒரு பொது அடிப்படையில் மதிப்பிடக் கூடியவை அல்ல. இதனல் தகுதி யற்ற ஹிந்திக்காரர்கள் நிறையப் பேர் தேறிவிட்டதாக அறிவிக்கக்கூடிய ஆபத்து உண்மையானது. நல்லாட்சிக்கு இது உலை வைத்துவிடும். அது மட்டுமல்ல. ஹிந்தியைப் போல மற்ற பிராந்திய மொழிகளிலும் விடை எழுதுவதற்கு உரிமை கோரப்படும் என்பதை எடுத்துக் காட்டினேம். அப்படிக் கோரிக்கைகள் கிளம்பியுள்ளன. அதற்கு இணங்க நேரிட்டால், தேசம் பதினன்காகச் சிதறுண்டு போவது தவிர்க்க முடியாததாகி விடும். எனவே ஹிந்திப் பரீட்சையைப் பற்றிய உத்திரவு தாமதமின்றி ரத்தாக வேண்டும்.

ஹிந்தியில் பரீட்சை, உத்தியோக விஷயத்தில் ஹிந்தி பேசாதவர்களை காய்தா செய்வது, அவர்களை நிர்ப்பந்திப்பது போன்ற அநீதிகள் ஏன் சாத்தியமாகின்றன என்பதை கவனிக்கவேண்டும். இதற்குக் காரணம் ஹிந்தி விஸ்தரிப்பைப் பற்றிய இப்போதைய நடைமுறையே.

யூனியன் சர்க்காரின் உள்துறை இலாகாவிலுள்ள ஹிந்தி "அபிமானிகளான" சில காரியதரிசிகள் தமது மனம்போன போக்கில் உத்திரவு பிறப்பித்து ஹிந்தியின் உபயோகத்தை விரிவாக்கி வருகிருர்கள். யூனியன் மந்திரி சபையின் கவனத்துக்கும் அங்கீகாரத்துக்கும் இது வருவதாகத் தெரியவில்லை. ஹிந்தியின் உபயோகத்தை என்னவாயினும் விஸ்தரித்துக் கொண்டே போவது என்று சங்கற்பித்துக் கொண்டுள்ள ஒரு சிலரின் இஷ்டப்படி காரியங்கள் நடைபெறுகின்றன. இந்நிலைமை தாமதமின்றி, அடியோடுமாறியாக வேண்டும்.

ஆரியக் கூத்தாடினலும் 'சம்பத்!'துக்கோனே - 'பெட்டி' காரியத்தில் கண்வைத்தீர் 'சம்பத்'துக்கோனே!

"எந்த வேளையிலும் தம்மைப் போலீசார் கைது செய்யக் கூடும் என்பதை எதிர்பார்த்திருந்த—த. தே. க. தலைவர் சம்பத் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டபோதும் அவர் ஒரு கைப் பெட்டியையும் கொண்டு சென்ருர். அப்பெட்டியில் இரண்டு சட்டை, இரண்டு வேட்டி, இரண்டு துண்டு, இரண்டு பனியன், ஒரு போர்வை ஆகியவற்றை அவர் வைத்திருந்தார்."

—'தமிழ் நாடு'
29-4-63

'சபாஷ் தலைவரே! நேருவுக்கு கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தின்போது கழகத் தலைவர்களையெல்லாம் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்து சிறையில் அடைத்தபொழுது 'குடிக்கதண்ணீர்கொடுக்கவில்லை. படுக்கவிரிப்புத்தரவில்லை. தூசிபடிந்ததரையில்படுத்திருந்தோம்'-என்று வெளியில்வந்ததும் அதைப்பெரிய தியாகமாக்கித்தாங்கள்மட்டும்பேசினீர்கள். அந்தப்பயம்தானே இப்பொழுது பெட்டி-படுக்கையுடன் மசாவாகக்கிளம்பி விட்டீர்கள்? ஒருவேளை வீட்டிற்கும் சிறைச்சாலைக்கும் வித்தியாசமில்லை என்பதைக்காட்ட இப்படிப் புறப்பட்டீர்களோ?"

"என்ன இருந்தாலும் ஐயாவின் வழி வழி இல்லையா? எந்த கூத்தை எப்படி நடத்தினலும் சொந்தக் காரியத்தில் சுறுசுறுப்பாய் இருப்பீர்கள்!"

"வாழ்க! போர்வை அரசியல்!"

ஐயா பெரியவரே!

பச்சைத் தமிழரா-

நாலு கோடியா-

எது பிரச்சினை ?

○

"காமராஜரை ஆதரியுங்கள் இந்தி ஒழிந்து விடும்!"

—பெரியார்

"சீனக்காரன் இந்தியா எல்லைக்குள் வராமல் இருக்கவேண்டுமா? காமராஜரை ஆதரியுங்கள்!"- இன்னும் கொஞ்சநாளில் இப்படியும் பேச ஆரம்பித்துவிடுவீர்கள் போலிருக்கிறது.

ஏனய்யா இப்படி கண்ணைமூடிக்கொண்டு ஆதரிக்கிறீர்கள்?

காமராஜரை ஆதரித்தால் இந்தி ஒழிந்துவிடுமா? அவரென்ன டெல்லி சர்க்காருடன் வாதாடும் வல்லமை பெற்றவரா? இதுவரை எதிர்த்துப் பேசியிருக்கிருர் என்று விரலை மடக்கமுடியுமா? மத்திய சர்க்கார் செய்யும் எல்லாத் தவறுகளுக்கும் பக்கமேளம் கொட்டுகிறவர் அல்லவா!

அவரை இத்தனை ஆண்டுகளாக ஆதரித்தோமே—கண்ட பலன் என்ன?

இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து மைசூர் முதலமைச்சர் நிசலிங்கப்பாவும்-கேரள முதலமைச்சர் சங்கரும் கண்டனம் தெரிவித்திருக்கும் பொழுது இவர் வாய்மூடி மௌனியாக நாங்குநேரித் தொகுதியில் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்துக் கொண்டு திரிகிருரே!

இந்தியைத் திணிக்காதீர்கள் என்று ஏன் ஓங்கிக் குரல் கொடுக்கவில்லை உங்கள் பச்சைத் தமிழர்?

இவரை ஆதரித்தால் இந்திமொழி படையெடுத்து வருமே தவிரபாடை ஏருது!

ஐயா நன்ருகச் சிந்தித்துப் பாருங்கள். ஒரு பச்சைத் தமிழருக்காக-நாலு கோடி மக்களின் எதிர்கால வாழ்க்கையைப் பலிபீடத்தில் ஏற்றலாமா?

நாங்கள் சொல்வது உங்களுக்கு வெறுப்பாக இருக்குமானல்-உங்கள் நம்பிக்கைக் குரிய ஒரே ஒரு ஜீவன் மணியம்மையைக் கூட்டிப் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டு கேளுங்கள்.

சம்பத்தா - கொக்கா?

'இதே கல்லறை மைதானத்தில் தி. மு. க.வில் இருந்தபோது, இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தின் முதற்கூட்டம் நடந்தது. இன்று நாம் இந்தி எதிர்ப்புக் கண்டனக் கூட்டம் நடத்துகிறோம். இதற்கும் அதற்கும் வித்தியாசம் உண்டு.'

"அன்று நடைபெறவேண்டிய போராட்டம் நடைபெறாததற்குக் காரணம் அந்தத் தலைவர்களின் போராட்டத்தரம் அப்படி. இன்று அப்படியல்ல."

"வெறும் வீரத்திற்குப்பட்டயம் கட்டிக்கொண்டு ஓய்ந்திருப்பவர்களுக்கு ஓய்வளிப்போம். அவர்களுக்கு அரசியலிலிருந்து நிரந்தர ஓய்வளிப்போம். அதிலே அவர்கள் சாகட்டும்."

"தி. மு. க.வுக்கு தாய்ப்பால்போல் இந்திப் பிரச்னை இருந்தது. எப்படி அது மறந்து போயிற்று? ஏன் குழப்பமடைகிறீர்கள்? சூட்டின் மகிமை தெரியாமல் அண்ணதுரை சும்மா இருக்கிறார். தம்பிகள் சமாளித்துக்கொள்வார்கள் என்கிறார். அவர்களிடம் மந்தப் போக்கு நீடிக்கிறது.

இந்தச் சொற்கோவைகள் த. தே. க.வின் பரபரப்புத் தலைவர் சம்பத் குமார ராமானுஜ தாசானுதாசரால் உதிர்க்கப்பட்டவை.

இந்தி மொழித் திணிப்பால் நாட்டுக்கு ஆபத்து வந்திருக்கிறது என்ன செய்யப் போகிறீர்கள்?

அடடா நல்ல சமயமல்லவா சூட்டின் சுவை தெரியாமல் சும்மா கெடக்கிறீர்களே? முண்டாவை ஏற்றிக்கொண்டு கோதாவில் இறங்க வேண்டாமா?

உங்களுக்கு வீரமில்லையா? சற்றே விலகி நில்லுங்கள் நான் குதித்துக் கிழித்து எரிக்கப் போகிறேன் - என்று தொடை தட்டுகிறார் வாத்தியார் பரபரப்பு.

யாரைப் பார்த்து இந்த சண்டியர்த்தனமான வார்த்தைகளைக் கொட்டுகிறார்?

வந்திருக்கும் பேராபத்தை உணராமல் வாய்க்கு ஒரு பூட்டை மாட்டிக்கொண்டு கிடக்கிறார்களே கம்யூனிஸ்டுகள் அந்தச் சோற்றுத் துருத்திகளைப் பார்த்தா? இல்லை!

உடல் மண்ணுக்கு - உயிர் தமிழுக்கு என்று பொழுதுபோக்கு அரசியல் நடத்தி வருகிறாரே ஆதித்தனார் அவரைப் பார்த்தா? இல்லை! - தி.மு. கழகத்தை நோக்கித் தொடை தட்டுகிறார். "ஏய் என்ன செய்யப் போகிறாய்" என்று எக்காளமிடுகிறார்.

உனக்குத் தைரியமில்லையென்றால் வழியை விட்டு ஒதுங்கிக்கொள் - 'கண்ணகி என்றால் அருகில் வா - மாதவி என்றால் கடந்து போ!" என்று அவலக்கூச்சலிடும் தெருக்கூத்துக் கோமாளியைப் போல்சதங்கைகட்டிக்கொண்டு குதிக்கிறார்சம்பத் குமாரர்.

யாரைப் பார்த்து யார் மீசை முறுக்குவது?

மீனுக்கு நீச்சல் சொல்லிக் கொடுக்கப் புறப்பட்டிருக்கிறதா சுண்டெலி?

சிங்கத்திற்கு கர்ஜனை கற்றுக் கொடுக்க வருகிறதா சிறுநரி?

புலியின் பாய்ச்சலுக்கு தவளையா தருவது இலக்கணம்?

இந்தி மொழியின் முரட்டுத்தனமான பேராதிக்கம் தென்னகத்தில் ராஜநடை போட இயலாமல் திக்கித் திணறிக் கொண்டிருக்கிற தென்றல் - அதைக் கட்டிப் போட்டுவைத்திருக்கும் வலுவான சங்கிலியாக தி. மு. கழகம் அமைந்திருக்கிறது. இதை வடபுலத்து நாயகர்களே உணர்வர்!

நோய் கொண்டவன் மருந்துவரை நாடுவது போல் இந்தி எழுந்து வருகிற தென்றல் - தமிழகத்து மக்கள் தி. மு. கழகத்தையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தித்திணிப்பென்னும் கவலை தரும் பெருநோய்க்குமக்கள் தி.மு. கழகத்தையே சரியான மருந்தாகத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறார்கள்.

இத்த சக்தியைக்குறைத்துக் காட்டிவிட்டு நீ, கூரையேறிக் கொள்ள எண்ணும் சாணக்கிய தந்திரம் ஒரு போதும் பலன் தராது.

இரண்டாண்டுகளாகியும் எழுந்து நடை போட முடியாமல் நலிந்து, மெலிந்து சீந்துவாரற்றுக் கிடக்கும் கட்சிக் குழந்தையைக் காப்பாற்ற இந்திப் போராட்டம் உனக்குப் புட்டிப் பாலாகப் பயன்படலாம்.

சங்கு - சவுண்டிகளை எதிர் பார்த்துக் கிடந்த உன் கூட்டத்தாருக்கு இந்திப் பிரச்னை டங்கு டமாரமாக இருக்கலாம்.

தினகரன்

பிரேத ஊர்வலத்திற்குப் பின் மயானத்தில் ஒப்பாரிப் பாட்டிசைக்கக் காத்துக் கிடந்த உன் வானம்பாடிகளுக்கும் — வானரங்களுக்கும் இந்தி மொழிப் போராட்டம் — ஒரு தேரோட்டமாக இருக்கலாம்.

ஆனால் தி. மு. கழகத்திற்கு இந்தித் திணிப்பு எதி வெடி கொளுத்திப் ே டும் வேடிக்கைப் பிரச்சினை அல்ல! விளம்பர விளையாட்டுக் களமல்ல!

பரிசு பெறுவதற்காக முந்திக் கொண்டு ஓடும் சடுகுடு விளையாட்டு மைதானமல்ல இந்திக் களம்!

இந்தியை எதிர்த்துக் கொடி தூக்குவதில், கொளுத்திக் காட்டுவதில் யார் முந்திக் கொண்டார்கள் என்பதல்ல பிரச்சினை.

ஜனநாயகம் ஒப்புக்கொள்ளப்பட்ட நாட்டில் களத்தில் குதிப்பதென்பது கடைசிக் கட்டமாக இருக்கவேண்டுமே தவிர எடுத்தேன் கவிழ்த்தேன் என்று 'ருத்ரதாண்டவம்' ஆடுவது மலிவான விளம்பரத்தைத் தருமே தவிர — வலுவான வெற்றியைத் தராது.

சட்டத்தைச் சந்திக்க வேண்டிய இடத்தில் சந்தித்து — பிரச்சினையை விளக்கவேண்டியவர்களிடத்தில் விளக்கி — விவாதித்து — பலன் கிடைக்கவில்லையென்றால் — எச்சரிக்கை செய்துவிட்டு - மக்கள் மன்றத்திற்கு வந்து அவர்களின் சக்தியை முறையாகத் திரட்டி - போர்ப்புயலென - பொங்குமாங்கடலென புறப்பட்டால் தான் - களத்தில் கண் சிவந்து நிற்கும் அரிமாக்களின் கர்ஜனை கேட்டு ஆதிபத்திய அரசு கோட்டைச் சுவர் மீதிலிருந்து இறங்கிவருமே தவிர, சோகை பிடித்தவர்களின் சூரத்தனத்திற்கெல்லாம் அரசு முழங்தாளிட்டுவிடாது.

(10-ம் பக்கம் பார்க்க)

த. தே. க.வின் காலித்தனம்

ஆபீஸ் பையன்: "சார், த. தே. க. 'அரை'ப் போர் வீரர்கள் விடுதலையாகி ஊர்வலமாப் போனுங்களே பாத்தீங்களா சார்?

ஆசிரியர்; "அதென்னடா அரைப் போர் வீரர்கள்?"

ஆபீஸ் பையன்: 'இப்போ மறியல் செய்தது அரைப் போர்தான் சார்! அதாவது பாதி! அடுத்த போராட்டம் சட்டத்தைக் கொளுத்துவது! அதையும் செஞ்சாத்தான் முழுப் போர் முடிவடையும்..."

ஆசிரியர்: 'டேய் குறும்பா விளக்கம் போதும் விஷயம் என்னடா?

ஆபீஸ்பையன்: த. தே. க. வீரர்கள் விடுதலையாகி வர்றப்போ நம்ம 'முரசொலி' அலுவலகத்தை நோக்கி போராட்டத்துக்குப் பயந்த கோழைகள் ஒழிக! தாய்மொழித் துரோகிகள் ஒழிக'ன்னு கூச்சல் போட்டாங்களே இது காலித்தனமில்லையா சார்?

ஆசிரியர்: ஏதோ அவுங்களுக்கு எரிச்சல் இதை ஏண்டா...

ஆபீஸ் பையன்: எனக்கு ஒரு சந்தேகம் சார்! அவுங்க அவ்வளவு வீரமாச் சத்தம் போட்டுக்கிட்டு வந்தாங்களே ஒரு வேளை ஈரோட்டுத் தண்ணீரைப் போட்டுக்கிட்டு வந்திருப்பாங்களோ?

ஆசிரியர்: போடா போக்கிரி போய் வேலையைப் பாரு!

தியாகம் செய்யாமல் எந்த வெற்றியும் கிடைக்காது!

கழகக் காளையரே களத்தில் குதிக்கத் தயாராய் இருங்கள்!

ஐந்து லட்சம் மக்களிடை அண்ணா, ராஜாஜி அறைகூவல்!

இந்தித் திணிப்பை எதிர்த்துக் கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தலைவர்களின் போர்முரசம்.

வாந்தி மொழி!

"இந்தியைக் கங்கணம் கட்டிக்கொண்டு புகுத்திவிட முனைந்திருக்கிறார்கள். இந்தி மொழி ஆட்சிமொழி ஆவதற்கு தகுதியுடையதா என்பதை இதமாகவும், ஆதாரங்கள் பல கூறியும் இந்திச் சட்டத்தை நிறைவேற்றினார்களா? என்றால் இல்லை. பாராளுமன்றத்தில் மெஜாரிட்டி பலத்தைக்கொண்டு, சட்டத்தைப் பாராளுமன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நாம் ஏன் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்க்கிறோம்? அது ஆட்சிமொழி ஆவதற்குரிய திராணி என்ன இருக்கிறது? அது புகுத்தப்படும் முறையை எண்ணி எதிர்க்கிறோம்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்திப் பிரச்னை தலைதூக்கிய போது, அதை எதிர்த்துப் பெரியார், செயின்ட் மேரீஸ் மண்டபத்திலே நடைபெற்ற கூட்டத்தில் ஒரு கதை சொன்னார்.

பெற்றோர் ஒருபுறமும், குழந்தை மறுபுறமும் இருந்தனர். குழந்தை வாந்தி எடுப்பது போன்ற சத்தம் கேட்டு, தகப்பன் மனைவியைக் கேட்டானாம்; "குழந்தை வாந்தி எடுக்கிறது, போய்ப் பார்"? என்று- அன்னையார் திரும்பி வந்து சொன்னாராம், "அவன் வாந்தி எடுக்கவில்லை; இந்தி படிக்கிறான்"- என்று. "அது அவனது உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது; வேண்டாம் - என்றானாம் தந்தை.

இது போல இந்தியைத் தீவிரமாக எதிர்த்த பெரியார், இரயில்வே நிலையங்களிலே உள்ள இந்தி எழுத்துக்களை அழிக்க தார்சட்டி ஏந்திய பெரியார்-யார் இந்தியைத் தீவிரமாக எதிர்க்க வேண்டுமோ அந்தப் பெரியார் இன்று இருக்கும் நிலை கண்டு உண்மையிலேயே வருந்துகிறோம். ராமா, ராமா என்று சொல்லவராவிட்டால், மராமரத்தைப் பார்த்து, மரா, மரா, என்று சொல்லுவதைப் போல், பெரியாரும் காமராஜர், காமராஜர் - என்று கூறுவது கண்டு உண்மையிலேயே, உள்ள வேதனையோடு சொல்லுகிறேன்.

என் நண்பர் ஒருவர் கேள்வி கேட்டார் "இந்திக்கும், வௌவாலுக்கும் என்ன வித்தியாசம்?"-என்று "வௌவால் ஓட்டிலே தொங்கும், இந்தி கோட்டிலே தொங்கும்" - என்றேன், வெறுத்து, ஒதுக்கி கூடையிலே போடவேண்டியகுப்பைமொழி.

இந்தி ஆட்சிமொழியாவதற்கு உரிய தகுதியை, புகுத்தப்படும் முறையை, கொடுமையை மறந்துவிடுங்கள். சட்டத்திலே உள்ள May என்ற வார்த்தையை மாற்றி Shall என்ற வார்த்தையை நேருவின் காலத்திலேயே ஒப்புக்கொள்ளாவிடில், நேருவிற்குப்பின் அதற்கு இந்திமொழி பேசுவோர் இடம்கொடுப்பார்களா?

இந்திமொழிப் பிரச்னையிலே தமிழக அரசு நடந்துகொள்ளும் முறை வேதனை தரத்தக்கதாக உள்ளது. 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாயப்பாடமாக்கப்படும் என்று கூறிவிட்டு, இந்தியை வரவேற்பது வேதனை தருகிறது.

மற்ற மாநில முதல் அமைச்சர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தை எதிர்க்கும்போது, காமராஜர் மௌனம் சாதிக்கின்றார்.

பாராளு மன்றத்திலே சட்டம் நிறைவேறினாலும், நீங்கள் தருகின்ற - மக்கள் மன்றம் தருகின்ற ஆதரவு அந்த ஆபத்தைத் தடுத்துவிட முடியும்."

—அப்துல் சமத்

அடிமையாகிவிடுவோம்!

"இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க எந்தவிதமான தியாகத்திற்கும் நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும்" இப்போது நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். தியாகம் செய்யாமல் எந்தக் காரியத்திலும் வெற்றிபெறமுடியாது. ஆனால் அந்தத் தியாகம் எந்தவிதமான தியாகம், எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதையெல்லாம்நாம் பின்னால் ஆலோசிக்கலாம்.

"இந்தத் தியாகம் ஒரு கட்சியினர்தான் செய்ய வேண்டும் என்றால், ஒரு கட்சியினர் ஆதிக்கம் பெறுவதற்காகச் செய்யப்படுவதாக மக்கள் ஐயம் கொள்வார்கள். பலரும் சேர்ந்து இந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும். இதைப்பற்றி நானும் திரு. அண்ணாதுரையும் சேர்ந்து பின்னால் பேசுவோம்."

திரு. அண்ணாதுரை சொல்வதை எல்லாம் நானும் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறேன். இந்தியை ஆட்சிமொழியாக்கினால் நாட்டில் ஒரு ஒற்றுமை ஏற்படுமா என்ற கேள்விக்கு ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்வதால் பரம விரோதிகளான தி. மு. க.வினருடன் நான் சேர்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். இந்தியைத் திணித்தால் நாட்டில்பிரிவினையை உண்டாக்கும். ஆங்கிலம் ஒன்றுதான் நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்தும் இந்த மசோதாவினால் பிரிந்து போனவர்கள் ஒன்று கூடியிருக்கிறார்கள்.

நேரு வாக்குறுதியளித்த போது நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அளித்தார்கள். நேரு வாக்குறுதியளித்தபோது நான்படித்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்து மிகவும் பாராட்டினேன். அரசியல் சட்டத்தையே திருத்தப் போகிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் இப்போது அந்த வாக்குறுதிக்கு வேறு பொருள் கொடுத்து ஆட்சிமொழி மசோதா கொண்டு வருகிறார்களே அது சுத்தத் தவறு. அரசியல் சட்டத்திற்கு திருத்தம்கொண்டு வருவார்கள் என்றுதான் அந்த வாக்குறுதிக்குப் பொருள் கொண்டது சரியானதாகும். தென்னகத்தில் உள்ள நாம் மட்டுமல்லாமல் வட நாட்டில் உள்ள இந்திக்காரர்கள் கூட அப்போது அதுதான் பொருள்கொண்டார்கள். ஆனால் திரு. அண்ணாதுரை சொன்னது போல் சனசங்கம், சோஷலிஸ்டுகள் போன்ற கட்சியினருக்கு அஞ்சியே நேரு தற்போதுகருத்தை மாற்றிக்கொண்டார்.

நேரு இல்லாவிட்டால் அங்கே உள்ளவர்களுக்கு வாழ்வில்லை. அதனால் பயந்து அப்போது இந்திக்காரர்கள் அந்த வாக்குறுதியை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தற்போது எதிர்க்கிறார்கள்.

நேரு தன் வாக்குறுதிப்படி நியாயமாக நடப்பதாக இருந்தால். காங்கிரசுக்காரர்களுக்கும், இந்திக்காரர்களுக்கும் அவர் என்ன சொல்ல வேண்டும். 'என்னுடைய வாக்குறுதியை நீங்கள் மறுப்பதாக இருந்தால் நான் பதவி விலகத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொல்வதாக இருந்தால் கூட தலைமையிலேயே கை வைக்க இந்திக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள்.

இன்னமும் காலம் கடந்து விடவில்லை. ஆட்சிமொழி மசோதா மாநிலங்கள் அவையில் வாதத்திற்குச் செல்ல இருக்கிறது. இப்போது கூட ஆட்சிமொழி மசோதாவை திரும்பப்பெற்று வாக்குறுதியை நிலைநாட்ட இந்திய அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்தால் வாக்குறுதியைக் காப்பாற்றியதாகக் கொள்ளமுடியும். இதில் தவறு ஒன்றும் இல்லை. நியாயம் என்றும் நிலைக்கும்.

உண்மையில் இந்தியை ஆட்சிமொழியாக்கினால் இந்தி பேசுகிறவர்கள் நம்மீது ஆட்சி செலுத்துவார்கள் என்ற நிலையை அடைவார்கள். இந்தியைத் திணித்தால் இந்தி ஆட்சியாளர்களுக்கு அதிகாரம், மேன்மை, ஆதிக்கம் ஆகியவை அதிகமாகும். நாம் அனைவரும் இந்தி பேசும் மக்களுக்கு அடிமையாகி விடுவோம்.

இந்தி ஆட்சிமொழியாகத் தகுதியில்லை என்பது நமது கடுமையான ஆட்சேபனை. இந்தக் காரியத்தில் நாம் அவசரப்படக் கூடாது. நியாயமாக கிளர்ச்சி செய்யவேண்டும். இந்தக்கோரிக்கை நியாயமானதால் நாம் உறுதியாக வெற்றிபெறுவோம்,

—ராஜாஜி

கடற்கரை இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் மக்களின் எழுச்சிக் குரல்!

"நான் உங்களைச் சில கேள்விகள் கேட்பேன் அதற்கு நீங்கள் உங்கள் எண்ணத்தை வெளிக்காட்டும் வகையில் பதில் சொல்ல வேண்டும். அதை நான் ராஜ்ய சபையில் எடுத்துரைப்பேன். இந்த மசோதாவைத் தென்னக மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று உறுதியாகக் கூறுவேன்!"

அண்ணா : "இந்தி ஆட்சி மொழியாக வருவதை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா?

மக்கள் : "இல்லை! இல்லை!"

அண்ணா : "ஆங்கிலம் நீடித்து இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறீர்களா?"

மக்கள் : "ஆம்! ஆம்!"

அண்ணா : "அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று நீங்கள் வற்புறுத்துகிறீர்களா?"

மக்கள் : "ஆம்! ஆம்!"

அண்ணா : இந்த நியாயத்திற்கு டெல்லி சர்க்கார் செவி சாய்க்காவிட்டால் போராட்டத்திற்கு நீங்கள் தயாரா?"

மக்கள் : "தயார்! தயார்!

'குமுதம்' பத்திரிகையே திருத்திக்கொள்!

"மிகத் தீவிரமான இந்தி எதிர்ப்பாளர் என்று கருதப்படவேண்டிய திரு. அண்ணாதுரையே புதுடெல்லியில் என்ன சொல்லியிருக்கிறார்?

"எதற்காக இந்தி மொழி வரவேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை; எப்போது எந்த வகையில் வர வேண்டும் என்பதில்தான் எங்களுக்கு ஆட்சேபம்' என்று சொல்லிவிட்டார்.

"குமுதம்" தலையங்கம்
2-4-63 இதழ்.

'குமுத'த்தில் தலையங்கம் தீட்டியுள்ள மகாப் பெரிய மேதைகளே! எந்தப் பத்திரிகையில் வந்த—யார் கொடுத்த செய்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு—தந்துக்குட்டி முள்றி பாணியில் செய்தியைக் கடித்துக் குதறியிருக்கிறீர்கள்?

டெல்லியில் ஏப்ரல் 22-ம் நாள் பத்திரிகை நிருபர்களிடம் அறிஞர் அண்ணா சொன்ன செய்தி இதுதான் -

"என் கட்சி "ஏன் இந்தி" என்றுதான் கேட்டிருக்கிறதே தவிர; எப்போது, எப்படி என்று கேட்டதே இல்லை!"

அண்ணா இப்படித்தான் சொல்லியிருக்கிறாரே தவிர நீங்கள் குழப்பியிருப்பது போல் "எப்போது - எந்த வகையில்" என்று அவர் குறிப்பிடவேயில்லை. ஆகையால்—பத்திரிகா தர்மத்தின் மீது நம்பிக்கை இருக்குமானால் அடுத்த இதழில் திருத்தம் வெளியிடுங்கள்.

நீண்ட காலப்போர்!

டெல்லியிலே, பாராளுமன்றத்தில் இந்தி ஆட்சிமொழிபற்றிய மசோதா நிறைவேற்றப்பட்டது கண்டு, உள்ளம் வெதும்பி சென்னை திரும்பிய நான்; பாராளுமன்றத்திலே உள்ள மெஜாரிடி பலத்தால் இந்தியைத் திணித்தாலும் நீங்கள் அதை எதிர்த்து இங்கே திரண்டிருக்கின்ற காட்சியைக் கண்டு. நீங்கள் சிந்தும் புன்னகையைப் பார்த்து, மறுபடியும் டெல்லி திரும்புகிறேன்.

பாராளு மன்றத்திலே நமது எண்ணிக்கை குறைவு. அவர்கள் இருநூற்று சொச்சம் பேர் இச்சட்டத்தை தீர்மானித்தனர். தீர்மானித்த சட்டம் முழுவதும் நிலைத்ததில்லை.

நாம் வீறுகொண்டெழுந்து, போர்க்குரல் எழுப்பி, போர்க்களம் சென்று, வென்று வா மகனே; என்று அனுப்பினால் ஆகாத இந்தச் சட்டம் அழிந்து போகும். நமது உறுதி பட்டுப் போய்விடவில்லை.

தி. மு. கழக ஆதரவாளர்களையும், தோழர்களையும், நண்பர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன் "போராட்டத்தில் கலந்துகொள்ள எப்பொழுதும் சித்தமாயிருங்கள்" எதைச் செய்தால் நல்லதோ அதைச் செய்வோம். 'போனால் வராது; பொழுது பட்டால் தாங்காது"— என்று மாலையில் விலை கூறும் சரக்கல்ல இது.

போராட்டம் நீண்ட காலப் போராட்டமாகி, பட்டி தொட்டிகளிளெல்லாம் உள்ள அறிவுச் செல்வங்கள் அறியட்டும். பத்துப் பேர் மட்டும் உணர்ந்தால் போதாது.

போர் கிளம்பு முன்; உங்களின் புன்னகை கண்டு, டெல்லியிலே போய், இந்தி மொழிச் சட்டத்தை தமிழக மக்கள் விரும்பவில்லை—என்று சொல்லுவேன். வாக்குறுதி என்னவாயிற்று உண்டா? இல்லையா?—என்று கேட்பேன்.

நேரு தனது வாக்குறுதிப்படி நிற்பாரா? நிற்பாரானால், சஞ்சலத்திற்கு இடமில்லாமல், சட்டத்தைத் திருத்தி, ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும்

—அண்ணா

ஈரோட்டுத் தண்ணி..!

த. தே. க. தம்பி: கவிஞர் சார், ஈரோட்டுத் தண்ணீரை இன்னொரு தரம் குடியின்னு ஒங்க பத்திரிகையிலே எழுதியிருக்கீங்களே அது எங்கே விக்கிது சார்'?

கவிஞர்: அதைக் குடித்த காரணத்தினாலேதான் நமது தலைவர் சம்பத் கோழைகள் அஞ்சும்படி வீரத்தோடு இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்துகிறார். அதை விடாமல் குடித்து வந்தால் வீரம் வளரும், விவேகம் பெருகும்...அதை நீயும் கொஞ்சம் குடி, வீரத்தின் தலைமகனாகி விடுவாய்!

த. தே. க. தம்பி: இப்போ நீங்க எங்கே போறீங்க கவிஞர் சார்?

கவிஞர்: பாண்டிச்சேரிக்கு!

த. தே. க. தம்பி: என்ன? ஈரோட்டுத்தண்ணி பாண்டிச்சேரியிலா விக்கிது? அட நாசமாப் போன வீரமே...!

பெரிய அளவில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வருகிறது.

எதற்கும் தயாராயிரு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாட்டின் பண்பாட்டை, கலாசாரத்தை, நாகரிகத்தை கல்லறைக்கு அனுப்பவேண்டுமெனில், முதலில் அந்நாட்டின் தாய் மொழியைக் கொலைபுரிய வேண்டுமென்பது, ஏகாதிபத்திய வாதிகளின் தாரக மந்திரமாகும்!

அந்தப் பணியை ஆங்கிலேயர்கள் அயர்லாந்திலே ஆற்றினார்கள்; வடவர்கள் தென்னவர்கள் மீது ஆற்றும் மொழியாதிக்கச் செயலைப் போல!

அயர் நாட்டு அலுவலகங்கள் முதல் சாலைகள் ஈறாக; ஒரே மொழிப் போர்க்களமாக இருந்தன.

எங்கு பார்த்தாலும் ஆங்கிலம் ஒழிக, ஐரிஷ் மொழி வாழ்க என்ற பேரொலியே முழுங்கப்பட்டன.

இந்தக் குரல் படைத்த அணிகட்குத் தலைமை வகித்தவர்தான் ஐரிஷ் விடுதலை வீரன் டிவேலரா என்பவர்.

அயர்லாந்தின் அண்ணாவான டிவேலரா, திராவிடத்தின் டிவேலராவான அறிஞர் அண்ணாவைப் போல, புயல் வேகத்தில் மொழிக் கிளர்ச்சியை உருவாக்கினார்!

ஒருநாள் பல லட்சம் மக்கள் கொண்ட மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே ஒரு வினாத்தாள் விரைந்தோடி வந்தது.

தென்திசைக்கு ஆபத்து! திரண்டெழுவீர் தோழர்களே!

'உனக்குச் சுதந்திரமானநாடு தேவையா? மொழிதேவையா?' என்ற கேள்வியைக் கொண்டதுதான் அந்தத் தாள்!

அந்த கேள்வியைப் படித்தார் டிவேலரா, எதிரிகள் செய்த சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று எனக் கருதிய அவர் மொழிப் பகையை மூட்டி நாட்டு விடுதலைக்கு முட்டுக்கட்டையிட நினைக்கும் மூடர்களுக்கு சவுக்கடி தருவதைப் போல, அவர் அதற்கு பதில் கூறும் போது, If I asked to choose between the language without freedom, the freedom without language, I shall certainly choose the former என்று குறிப்பிட்டார்.

"சுதந்திரமில்லாத மொழி தேவையா? மொழியில்லாத சுதந்திரம் தேவையா என்று என்னைக் கேட்டால், நான் முன்னதைத்தான் தீர்மானிப்பேன்" என்றார்!

நாட்டுக்குச் சுதந்திரம் அளித்துவிட்டு, மொழிக்கு சுதந்திரம் இல்லையென்றால், அந்த மொழியடிமையை நான் விரும்பமாட்டேன். சுதந்திரமான நாட்டைவிட, சுதந்திரமான மொழிதான் சிறந்தது என்ற கருத்தில் மொழியை முதலிடத்திலே வைத்து நாட்டை இரண்டாவதாகவே கருதினர்.

டிவேலராவினுடைய மொழியார்வம், பற்று, தமிழகத்திலே இருக்கும் அமைச்சர்கட்கு குறிப்பாக காமராசருக்கு இல்லையே! தமிழ் செய்த கொடுமையோ? என்று எண்ணி நாம் வேதனையுறுகிறோம்!

வடநாட்டிலே சேத் கோவிந்ததாஸ் போன்ற இந்தி வெறியர்கள், அவர்களது தாய் மொழிப் பற்றால், காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாடுகளையே மீறுவேன் என்கிறார்கள்?

தமிழகத்தின் காங்கிரஸ் அடிமைகளோ, அவமானச் சின்னங்களாக காட்சியளிக்கின்றனர்!

பண்டித நேரு, புருஷோத்தமதாஸ் தாண்டன், ராசேந்திர பிரசாத், லோகியா போன்றவர்களனைவரும் காமராசர்களாக இல்லை. வடநாடு புரிந்த வளம்—பலம்! தமிழகம் சோடைகளை—சொத்தைகளை ஈன்றதால், காமராசர்களை ஈன்றது! அவலம்! அவலம்!!

இந்தியை அரியணை மீது அமர்த்தி, அவர்கள் அழகு பார்த்திட விரும்பும் காரணம், தேசிய மொழி என்ற ஒரே ஒரு தகுதியை முன் வைத்துத்தான்!

"வட்டார மொழியாக வேண்டுமானால் இந்தி இருக்கலாமே தவிர, தேசிய மொழியாகும் தகுதி இந்திக்கு இல்லை" என்று சர். சி. பி. ராமசாமி அய்யரே கூறிவிட்டார். இவர் என்ன சாமான்யரா? உலக மொழிகளின் தகுதியை—தரத்தை உணர்ந்தவர்! வடமொழி வல்லுநர். அவரே இவ்வாறு அறைகிறார் என்றால் அடிமைகட்கு மான உணர்ச்சி வேண்டாமா? இனமான உணர்ச்சி இல்லையென்றாலும், தன்மான உணர்ச்சியாவது வர வேண்டாமா? இந்தி அரியணையிலே அமரத் தகுதி படைத்ததா என்று அறிந்திட!

இன்றைய நிதி அமைச்சராயிருக்கும் மொரார்ஜி தேசாய் 1958-ல் தமிழகத்திற்கு திடீரென்று வருகை தந்தார். வந்தவுடன் பத்திரிகைகள் அனைத்தும் அவர் மத்திய அரசு நிதியமைச் சராக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை வெளியிட்டன!

நிதியமைச்சராகி விட்டார் என்று அறிவிக்கப்பட்டதும் பத்திரிகை நிருபர்கள் அவரை சூழ்ந்து கொண்டு பல வினாக்களை விளித்தனர்.

மொரார்ஜி நிருபர்களுக்கு விடையளிக்கும் போது, அவருக்குள்ள இந்தி வெறியையும் எதிரொலித்துப் பேசினார்: அதன் விபரம்:—

"இந்தியா ஒரு நாடல்ல. பல தேசிய இனங்களைக் கொண்டது. கடந்த ஒரு நூற்றாண்டாக இந்தியா ஒரே நாடாக ஆக்கப்பட்டிருந்தது. அதற்கும் இப்போது பல ஆபத்துக்கள் சூழ்ந்திருக்கின்றன. இந்தியா, பழையபடி மீண்டும் சிதறுண்டு போகலாம். ஆனால், அப்படி சிதறுண்டு போவதை யாரும் விரும்பவில்லை"

"இந்தியா பல இனத்தவரைக் கொண்டிருந்தாலும், பல்வேறு கலாச்சாரங்கள் கொண்டதாக இருந்தாலும், இந்தியாவிற்கென்று ஒரு சில பொதுவான கலாச்சாரங்கள் உண்டு"

"இந்தியாவை ஒரே நாடாக இணைத்து வைத்திருக்க வேண்டுமானால், அது இந்து மதத்தின் மூலமாகத்தான் முடியும். இந்து மதம் என்ற அடிப்படையில், இந்தியாவை இணைப்பதற்கான வாய்ப்புகள் இருந்து வருகின்றன. பல ஆண்டு காலமாகவே, இந்திய மக்கள் தெற்கிலே உள்ள இராமேசுவரத்தையும், வடக்கிலே உள்ள காசியையும் தங்களது புண்ணிய ஸ்தலங்களாகக் கருதிவருகிறார்கள்"

'வானம்பாடி'யின் குரல் மாறலாம்

"தென்றல்திரை" கட்சி சார்பற்ற நாளேடாக எல்லாச் செய்திகளையும் தாங்கி பவனி வரும். பொதுமக்கள் ஆதரவு தர வேண்டுகிறேன்.

—கண்ணதாசன்

தமிழ்நாட்டுப் பொதுமக்கள் அனைவருக்கும் இப்படியா ஒரேயடியாய் காது செவிடாகிவிட வேண்டும். வானம்பாடியின் வேண்டுகோள் ஒருவர் செவியைக் கூடக் கிழிக்கவில்லை. பிறகு திருவாரூர் பிள்ளையார் ஒருவர் பத்திரிகையைத் தினத்தந்தி 'ஸ்டெயிலு'க்கு மாற்றினார். சனியன் அப்பொழுதாவது ஓடியிருக்க வேண்டாமா? நல்லவிழுக்காடு! இடுப்பொடிந்த நிலையில்-இந்திப் போராட்டம் வந்தது. வானம்பாடிக்கு மூளை குயித்தியாச வேலை செய்தது; இப்படி அறிவித்தார்—

"23-4-63 இதழிலிருந்து 'தென்றல் திரை" தமிழ் தேசியக் கட்சியின் நாளிதழாக வெளிவருகிறதென்பதை கட்சித் தோழர்களுக்கும் - பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்ளுகிறேன்."

—கண்ணதாசன்

ஊரெல்லாம் கூட்டியும் - விடிய விடிய ஊளையிட்டும் போராட்ட நாளன்று தலை 111-க்கு மேல் தேறாத அந்தக் கட்சியில் - நாளேடு மட்டும் அதற்கு மேல் எப்படி விற்பனையாகிவிடும். ஆகையால் விரைவில் கீழ்க்கண்டவாறு அறிக்கை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"அரசியல் அரிப்பைத் தீர்த்துக் கொள்ளவும் - நானும் இருக்கிறேன் என்று காட்டிக் கொள்வதற்காகவுமே தமிழ்த் தேசியக் கட்சி கடையழிந்த முறையில் நடத்தப்பட்டு வருவதால் இனி 'தென்றல் திரை' திரையுலகத் தீவிர ஏடாக கொஞ்ச நாட்களுக்கு வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

—கண்ணதாசன்

மூன்று தலைமுறை பொறுத்திருப்பீர்!

"ஹிந்துஸ்தானிகளே, நியாயமாய் நடந்துகொள்ளுங்கள். பிறப்பினால் கிடைத்த வசதியை சுயநலனுக்கு மாத்திரமே பயன்படுத்திக் கொள்ளாதீர்கள். பூரணப் பிரஜா உரிமையையும் அதைச் சார்ந்த கௌரவங்களையும் துய்க்கும் அருகதை உங்களையே சார்ந்தது என்று இருமாந்து போகாதீர்கள். அப்போதுதான் ஜனநாயகத்துக்கு நீங்கள் உண்மையாகப் பொருந்தியவர்களாவீர்கள்."

"ஆங்கில மொழி இப்போது அடைந்திருக்கும் சிறப்புக்குச் சமமாக ஹிந்திமொழி வளர்ந்து பரவுவதற்குக் குறைந்த பட்சம் மூன்று தலைமுறைகளாவது இதன் பயிற்சி மிகத் தீவிரமாக நடைபெற்று வரவேண்டும். இவ்வாறு நடைபெற்றாலொழிய மத்திய அரசாங்க அரசியல் மொழி எனும் உரிமையை ஹிந்திக்கு அளிக்கக் கோருவது நியாயமற்ற செயலாகும்.

—1957-ல் ராஜாஜி

வாலு போச்சு; கத்தி வந்தது!





கம்யூனிஸ்டுகளின் முகத்தில் காரித் துப்புங்கள்!

மேலே இருக்கும் சித்திரம் 'தமிழ்நாடு' இதழில் வெளிவந்தது.

பக்கத்தில் காணும் குரங்குச் சித்திரம் 'ஜனசக்தி' என்ற பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

சீன அபாயத்துற்குப் பின்—இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள இந்தி பேசப்படாத மாநிலங்களுக்கு வந்திருக்கும் பேராபத்து இந்தித் திணிப்பாகும்.

கம்யூனிஸ்ட் சீனன் எப்படி பட்டாளத்தைக் கொண்டு வந்து தன் ஆதிக்கத்தை விரிவுபடுத்த எண்ணினனே அதைப் போலவே—மொழித் திணிப்புமூலம் குறிப்பாகத் தென்மாநிலங்களை அடிமை கொள்ள எண்ணுகின்றனர் இந்தியத் துணைக்கண்ட இந்தி வெறியர்கள்.

மொழி வடிவத்தில் வரும் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தி. மு. கழகம் தீவிரமாகப் போராடி வருகிறது.

இந்தி மொழி முடிசூட்டிக் கொண்டுவிட்டால் நாம் வடக்கத்தியார்களுக்கு அடிமையாவதைத் தவிர வேறு வழியில்லை—

இதை உணர்ந்துதான் 'தமிழ்நாடு' இதழ்—"சீன அபாயம் என்ற வால் போய்விட்டது. இந்தி வெறி என்ற கத்தி வந்திருக்கிறது. இந்த வெறி நீடித்தால் வடக்கிலிருந்து—தெற்கு பிரிந்துவிடுவதைத் தவிர வேறு வழியில்லை" என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் கார்டூன் வெளியிட்டிருக்கிறது.

ஆனல் அடிமைத்தனத்திலேயே சதையை வளர்த்துக்கொண்ட கம்யூனிஸ்ட் துரோகிகளுக்கு தி. மு. கழகத்தின் இந்தி எதிர்ப்பு கேலிக்குரியதாகத் தென்படுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தைச் சீனக்காரனுக்குக் காட்டிக் கொடுத்துக் கைக்கூலி பெற்ற கம்யூனிஸ்டுகள் இந்தித் திணிப்பை வரவேற்பதின்மூலம் வடக்கத்தியார்களிடம் கைக்கூலி பெறத் துடித்துக்கொண்டிருக்கிறர்கள்.

இவர்கள்தான் வர இருக்கும் துணைத்தேர்தலில் காங்கிரசிற்கு ஆதரவாக ஓட்டுக் கேட்க வரப்போகிறர்களாம். "ஓ தமிழகத்து மக்களே விழிப்போடு இருங்கள். ஓட்டுக் கேட்கவரும் கம்யூனிஸ்டுகளின் முகத்தில் வெற்றிலைக் காவி படியக் காரித் துப்புங்கள். தாய்மார்கள் வெண்சாமரம் கொண்டு விரட்டி அடியுங்கள். தாய்மொழித் துரோகிகளுக்கு இதைவிட நல்ல பரிசு வேறு என்ன இருக்கிறது?"

"மத அடிப்படையில் இந்தியாவை ஒன்றுபடுத்த, மொழியும் ஒரு இன்றியமையாத திட்டம். இந்தியா இணைந்திருக்க ஒரு பொது மொழி தேவை. இந்தி மொழி மூலம்தான் அதனைச் செய்ய முடியும்."

"இந்து மதக் கலாச்சார அடிப்படையில் இந்தி மொழியைப் பொது மொழியாகக் கொண்ட ஒரு இணைப்பு ஏற்படாத வரையில் உள்ள பூர்வமான இணைப்பு ஏற்படுவது சிரமந்தான்"

இன்று இந்தி வேகமாகத் திணிக்கப்படுகிறது என்றல், அதற்குக் காரணம் 'இந்தி ஏகாதிபத்தியம்' சிதறுண்டு போகாமல் இருப்பதற்குத் தான் என்ற மொராஜியைப் போன்ற இந்தி வெறியர்களின் பயம்—பேராசை—ஏகாதிபத்தியக் கொள்கைகள் நமக்கு நன்கு புலப்படுகின்றன அல்லவா?

வட வெறியர்கள் ஆசைக்கு ஏற்றவாறு இந்தி, இந்திய தேசிய மொழியாகும் தகுதி பெற்றதா என்றல் இல்லை. **மொழிக் குழுவின் உறுப்பினராகவும், வங்கத்தைச் சேர்ந்தவருமான சுனித்குமார் சட்டர்ஜீ என்பவர், "இந்தி, இந்தியாவின் பொது மொழியாக ஒரு போதும் இருக்க முடியாது" என்ற தனது கருத்து மாறுபாட்டை அந்த மொழிக் குழு அறிக்கையிலே இணைத்துள்ளார்.**

அந்த அறிக்கையை அலட்சியப் படுத்துவானேன்? வடவர்கள் மொழிவெறியா அல்லது இந்தி ஏகாதிபத்திய சதியா? என்று இந்தி பேசாதோர் சார்பாக மக்கள் கேட்கமாட்டார்களா?

இந்தி வெறியர்களனைவரும் இந்த், இந்தி, இந்து இந்த மூன்றும் ஒன்றே என்று கூறுகிறர்கள், இதை சுனித்குமார் சட்டர்ஜி தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

இந்த், என்பதற்கு வடவர்கள் கொள்ளும் பொருள் இந்தியா என்பது. அதாவது இந்திய நாடு. இந்து மத நாடு, இந்தியாவின் மொழி இந்தி. இந்தியே இந்து மதத்தின் பொது மொழி என்பது இந்தி வெறியர்களது தேசிய மந்திரமாகும்.

எனவேதான், இந்து மதம், இந்தியா, இந்தி என்ற சூதுக் கோட்டைகளை திராவிடர் இயக்கமும், தி. மு. கழகமும் ஆதிநாள் தொட்டே எதிர்த்துப் போரரடி வருகிறது. மதப் பெயரை நீக்கி திராவிட இனம் என்ற இனப் பெயரால் தன்னை உலகுக்கு அறிமுகப்படுத்தி வாழ்கிறது.

இந்து மதக் கலாச்சார அடிப்படையில், இந்தி மொழியைப்பொதுமொழியாக மக்கள் ஏற்கவேண்டும் என்று இயம்புகிற மொரார்ஜி, அந்த மதத்திற்கு உண்மையிலேயே அத்தகைய சக்தி உண்டா என்பதை அறிந்தாரா?

ஒருமதம் எப்படிப் பலதிறப்பட்ட மக்களை ஒன்றுபடுத்த முடியும்?

அதற்கு அத்தகைய சக்தி அணுவளவேனும் உண்டா?

மத அடிப்படையில் விடுதலை பெற்ற பாகிஸ்தானின் இன்றைய நிலை என்ன?

(10-ம் பக்கம் பார்க்க)

எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி! எத்தனை பட்டாளம் கூட்டிவரும்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கட்சியின் கீழ் இணைந்திருக்க இயலுமா?

அவ்வாருனல், இந்து, பௌத்தம், கிறித்துவம், இசுலாமியம், யூத இனங்களைப் போன்று மத அடிப்படையிலன்ரே நாடுகளும் தேசிய இனங்களும் இருக்கவேண்டும்! தரணி இன்று அவ்வாறு இருக்கிறதா?

நூற்றுக்கணக்கான இனங்களும், நூற்றுக்கணக்கான நாடுகளுமன்ரே இன்று இருப்பதைக் காண்கிரேம்?

இந்தி பொது மொழியாக இருக்கவேண்டும் என்பதற்கு மொரார்ஜீ கூறும் மற்ரெரு காரணம் கலாச்சாரம்!

இந்தியாவிற்கென்று என்ன கலாச்சாரம் இருக்கிறது? பொதுவான பழக்க வழக்கங் என்ன வாழுகின்றன? உருவ ஒற்றுமை கூட இல்லையே!

ஐரோப்பிய மக்களனைவரையும் ஒரே வரிசையில் நிறுத்தி வைத்தால், எவரும் உருவத்தில் மாறுபடமாட்டார்கள். பண்பாடு, உணவு, பழக்க வழக்கம் எல்லாவற்றிலும் ஒரே தன்மையே ஏறக்குறைய நிலவும்.

முஸ்லீம், புத்தமத நாடுகளிலேவாழுகின்றவர்களுக்கும் கூடத்தான்பொதுவான கலாச்சாரம் இருக்கிறது. இவர்களனைவரும் ஒரே இனத்தவரா? ஒரு கட்சிக்கு உட்பட்ட மக்களாக வாழவில்லையே ஏன்?

எனவே, மக்களை ஒன்றுபடுத்தும் சக்தி ஒரு பொதுவான கலாச்சாரத்திற்கோ-மதத்திற்கோ இருக்கவில்லையன்ரே?

மக்களை ஜக்கியப்படுத்தும் சக்தி வெவ்வேறு காலத்தில் வேறுவேறு விதமாக இருந்திருக்கிறது,

ஒவ்வொரு தேசிய இனத்தவரும் தங்கள் நாட்டை தாங்களே கண்டு கொள்ள வேண்டும் என்கிற உணர்ச்சியால் உந்தப்பட்டு, அது செயல்படும்போதுதான் தேசிய எழுச்சி ஏற்படுகிறது.

இந்தி தேசிய எழுச்சி தோன்றி ஆங்கிலேயனை எதிர்க்கவில்லை. இந்துக்கள் என்ற பட்டம் ஒன்றுதான் தமிழக மக்களையும் இந்திய தேசிய எழுச்சிக்கு தூண்டுகோலாக இருக்கக் காரணமாக இருந்ததே தவிர, திராவிட இனத்திற்கும் வடவரினத்திற்கும் எந்தவகையிலே தேசிய ஒற்றுமை இருந்தது? இருக்கிறது என்பதை மொரார்ஜி சிந்தித்துப் பார்த்திருந்தால் இந்தி மொழி ஒன்றுதான் திராவிடருக்கும் பொதுவான மொழி என்று பேசியிருக்க மாட்டார்.

எனவே, மத அடிப்படையிலோ, கலாச்சார அடிப்படையிலோ, இந்த நாட்டிலுள்ள பலதேசிய இனச் சக்திகளை இந்திமொழி ஒன்றுபடுத்தும் யோக்யதை அணுவளவும் பெற்றிருக்கவில்லை என்பது வரையறுக்கப்பட்ட ஒன்ருகும்.

இதைத்தான் அறிஞர் அண்ணு, இந்தித் திணிப்பு ஒரு அரசியல் ஆதிக்கப்போர் என்ரூர். இதற்கு முடிவான பிரச்னை திராவிடநாடு பிரிவினை ஒன்றுதான் என்று தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டார்.

எது எப்படியாலும் இந்தி வெறியர்கள், இமயம் முதல் குமரிவரை இந்தி சாம்ராச்சியக் கொடியைப் பறக்கவிடத் தயாராகிவிட்டனர் என்பது மட்டும் உண்மையாகும்!

தமிழகத்து வீரர்களே, தன்மானத்தீரர்களே, தருக்கர்கள் செருக்கு தவிடு பொடியாக வழி என்ன?

அடிமை விலங்கு அகற்றப்பட, மொரார்ஜீ, பண்டித நேரு போன்ற மொழி வெறியர்களை புறமுதுகிடச் செய்ய வழி என்ன?

இனமான உணர்ச்சியைக் காக்க வழி என்ன?

மாற்ரூர் மருள, கற்ரூர் களிபெற, உற்ரூர் உவந்துபாராட்ட நாம் இந்தித் திணிப்பு சட்டத்தையும் இந்தி வெறியர்களையும் எதிர்த்து கல்லறை ஏகுவது ஒன்றுதான் மானவழியாகும்.

கோழை என்ருல் என்ன பொருள்?

சண்டியர் ராஜன்: என்ன கவிஞரே நம்ம தலைவர் சம்பத் அடிக்கடி தி. மு. கழகத் தோழர்களைப் பார்த்து கோழைகள், கோழைகள் என்கிருரே இதற்கு என்ன பொருள்?

கவிஞர்: மதுரை வக்கீலாக இருந்தும் உனக்கு இது கூடத் தெரியலியேய்யா! கோடம்பாக்கம் இந்தி எதிர்ப்பு மாநாட்டுப் பணம் ரூ. 30,000-யிரத்தை நம்ம தலைவர் சுருட்டிக்கிட்டு ஓடிவந்தாரே அப்பவே செவிட்டிலே நாலு அறை கொடுத்து அதை வாங்கியிருந்தா அவர்களை வீரர்கள் என்று நமது தலைவர் பாராட்டியிருப்பார். அவர்கள் தான் கூட்டம் கூட்டிச் சொன்னதோடு விட்டுவிட்டார்களே!

சண்டியர் ராஜன்: அதை அவர்களின் பெருந்தன்மையாகக் கருதவேண்டாமா?

கவிஞர்: பெருந்தன்மையா? ஈரோட்டார் குடும்பத்துக்கே அது இல்லை! நீ போய்யா போ!

சுய விளம்பரப் போராட்டம்! முந்திக்கொண்டவர் முடித்ததென்ன?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கோழைகள் ஒதுங்கிக்கொண்டார்கள் வீராதி வீரன் நான் மட்டும் களத்திற்கு வந்திருக்கிறேன் ஆதரவு தாரீர் என்று வில்லன் பாணியில் பேசுவதும்- தி. மு. கழகம் போராட்டம் நடத்திஞல் நான் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயார் என்று குரல் கொடுப்பதும்—என் போராட்டத்திற்கு எல்லாக் கட்சிக்காரர்களையும் மனமாச்சரியத்தை மறந்து தெளிவோடு அழைக்கிறேன் என்று ஐவருக்கும் கை கொடுத்த பாஞ்சாலியைப் போல் அறைகூவல் விடுவதும் அரசியலில் மென்மையான ஒரு இடத்தைப் பிடித்து விட நடத்தும் சாணக்கியன் நாடகமாகும்.

இந்தியை எதிர்த்து வெறுங்கையால் முழமிட்டதும்- வெற்ரூர்ப் பாட்டம் நடத்தியதும் போலித் தலைமையை புதுப்பித்துக் கொள்ளத் தானே தவிர அதில் இந்தித் திணிப்பை முறையாக எதிர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணம் துளியாவது உண்டா?

இந்தித் திணிப்பை எதிர்ப்பதுதான் த. தே. க. வின் இதயத் துடிப்பென்ருல் இந்தி எதிர்ப்பு மேடையில் தி. மு. கழகத் தோழர்களை கோழைகள் என்றும், தொடை நடுங்கிகள் என்றும், போராட்டத்திற்கு அஞ்சி பூனையெனப் பதுங்கிக் கொண்டார்கள் என்றும் திட்டித்தீர்ப்பதிலேயே மேடைச் சுகம் பெறுவானேன்?

'1959-ல் நடைபெற வேண்டிய போராட்டம் நடைபெருமல் போனதற்கு அப்பொழுதிருந்த அந்தத் தலைவர்களின் தரம்தான் காரணம்"—என்று எந்த முகத்தோடு, என்ன யோக்கிதையோடு இப்படி நாப்பறை கொட்டுகிருய்.

1959-ல் கோடம்பாக்கத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில்-"**இந்தமாநாட்டில் தனியாக ஒரு தீர்மானம் தேவையில்லை அண்ணு அவர்களின் பேச்சே தீர்மானம்**" என்று உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய நயவஞ்சகன் யார்? சம்பத் என்ற சந்தர்ப்பவாதியல்லவா?

கோடம்பாக்கம் மாநாட்டில்-"இந்தித் திணிப்புக்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் தமிழகம் வரும் ஜனதிபதிக்குக் கறுப்புக் கொடி காட்டுதல்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் அதைத் தொடர்ந்து "இந்தி திணிக்கப்பட மாட்டாது. உறுதிமொழி தருகிறேன்" என்று பண்டித நேரு அஞ்சல் எழுதியதும்—பண்டிதரின் உறுதிமொழிக்கு மரியாதை தரும் வகையில் கறுப்புக்கொடி நிகழ்ச்சியைக் கைவிட முடிவெடுத்ததும் உன் மாபெரும் சம்மதத்துடன் நடைபெற்ற நிகழ்ச்சிதானே!

இப்பொழுது யாரைப் பார்த்துச் சொல்லுகிருய்?" அப்பொழுது அந்தப் போராட்டம் நடைபெருமற் போனதற்கு அந்தத் தலைவர்களின் தரம் தான் காரணம் என்று!

தரத்தை-குணத்தை--தனித் தனியாகப் பிரித்து தராசிலே போட்டு நிறுப்போமாஞல்—ஈரோட்டுக் குடும்பத்தின் அரசியல் தரம்- பாதி ராத்திரியில் பச்சை நோட்டுத் தருபவனுக்குப் பல்லிளிக்கும் பட்டுப்பூச்சிகளின் தரத்தைவிட மிகக் கேவலமானதாக இருக்கும்!

அரசியலில் முடிசூட்டிக் கொண்டவருக்கெல்லாம் நாக்கு வியாபாரம் செய்வதையே 'காண்டிராக்ட்' எடுத்துக் கொண்டு ஜீவித்து வரும் பரம்பரை ஈரோட்டுப் பரம்பரை!

போராட்டம் என்பது தி. மு. கழகத்திற்கு வாழ்வுப் பிரச்சினை யல்ல. அது ஒரு இலட்சியம்! அந்த இலட்சியத்தில் வெற்றி காண சரியான பாதை அமைத்துக் கொண்டுதான் அது தன் பயணத்தைத் தொடங்கும்.

எந்தப் பிரச்சினையையும் திசை திருப்பிவிடுவதே ஈரோட்டுக் குடும்பத்தின் இத்யாதிகளில் ஒன்று!

த. தே. க. வின் ஜகதலப் பிரதாபன் அதற்கு விதிவிலக்கல்ல!

பெரியாரின் பிள்ளையா—சும்மாவா? சம்பத்தா.........?

கே. கடுமழை பெய்யும்
பேச்சில்,
கனன்றெரி தீயும் தோன்றும்
விடுதலை முழக்கம் காட்டி
வெடித்தெரி மலையாய்த்
தோன்றும்
அடுகள வேழம் போலும்
அழகிய தோற்றம் கொண்ட
உடுமலை நாராயணனை
உம்மிதழ் தருவ தெந்நாள்?

சத்தி—இளங்கோவன்
சத்தியமங்கலம்

ப. சிந்தனைக்கோர் சித்திரத்தை முகப்பில் தந்து, சின்னாட்கள் சென்ற பின்னர் அதை விடுத்து—முன் வந்தது போல் மாவட்டச் செயலர் தன்னை மறுபடியும் அறிமுகத்தில் நிறுத்தி வைப்போம். உறுமுகின்ற அரிமாவின் பார்வை கொண்ட, உயிர் நண்பர் உடுமலையார் அப்போதெங்கள் இதழ்தனிலே சிரித்திருப்பார்! மகிழ்ச்சி கொள்வீர்.

கே: சென்ற 1962-ம் வருட தேர்தலில் தமிழ் நாடு சட்ட சபைக்கு பொதுவுடமையர்கள் அதிக இடங்களில் வெற்றி பெற்று அவர்கள் மந்திரி சபை அமைத்திருந்தால் இன்றைய சூழ்நிலை எப்படியிருக்கும்.

—கு. ச. மகாலிங்கம்
சாப்டூர்

ப: சீனாவுக்கு ஊளவாளியாக இருந்தார்கள் சில கம்யூனிஸ்ட் அமைச்சர்கள் என்ற கெட்ட பெயர் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும்.

கே: என் நண்பர் ஒருவர் "கூடலரசன் முன்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர்" என்று கூறுகிறார். நான் இல்லையென்று மறுக்கிறேன் இதில் யார் கூற்றுச் சரி!

—இளம்பரிதி
நெல்லை

ப: கம்யூனிஸ்டுகள் ரகசியமாகச் செய்த கொலை, கொள்ளை, பித்தலாட்டம் ஆகியவைகளை நண்பர் கூடலரசன் மக்கள் மன்றத்தில் ஆதாரத்துடன் புட்டுப் புட்டு வைப்பதால்—சில கம்யூனிஸ்ட் நண்பர்களுக்கே இந்தச் சந்தேகம் வந்திருக்கிறது. கூடலரசன் எந்தக் காலத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்ததில்லை. ஆனால் அவர் எப்பொழுதும் கம்யூனிஸ்டுகளை கண்காணித்து வரும் சி. ஐ. டி. யாக இருந்திருக்கிறார். அதனால்தான் கூடலரசன் வாதங்களை ஓங்கி மறுக்க பாலதண்டாயுதம் போன்ற சதிகாரர்களுக்குவாய் வருவதில்லை.

கே: பிரிவினைத் தடைச் சட்டம்பற்றி பண்டித நேரு இது வரை எதுவும் பேசாதது ஏன்?

—இரா. கலையரசன்
பொய்யாமணி

ப: மக்களின் குருதியோடு கலந்து நிற்கும் பிரிவினை உணர்ச்சியை சட்டத்தால் தடை செய்துவிட முடியாது என்பது அவருக்குத் தெரியும். மேலும் பதவி வெறியர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்பதிலேயே அவர் குழம்பித் தவிக்கிறார். ஆகையால் அவருக்கு வேறெதைப் பற்றியும் சிந்திக்கவோ பேசவோ நிம்மதியான ஓய்வில்லை.

கே: இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தாமல் தி.மு. கழகம் கோழைத்தனமாக ஒதுங்கி நிற்பதாக சம்பத் குற்றம் சாட்டுகிறாரே உங்கள் பதில் என்ன?

—கஸ்தூரி—சண்முகம்
பொள்ளாச்சி

ப: எந்தப் போராட்டத்தையும் தி. மு. கழகம் சுய விளம்பரத்துக்காக அவசரப்பட்டுச் செய்யாது. த. தே. க. வைப் போல். தி. மு. கழகம் அனாதைக் கட்சியல்ல! இந்தித் திணிப்பு மசோதா எங்கு கொண்டுவரப் படுகிறதோ அந்தப் பாராளுமன்றத்தில் தி. மு. கழகத்தின் பிரதிநிதிகள் எண்மர் வீற்றிருக்கிறார்கள். அங்கே அவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து—வாதாட வேண்டிய வர்களிடத்தில் வாதாடுவார்கள்! அங்கே அவர்களின் குரல் மதிக்கப்படவில்லையென்றால் எச்சரிக்கை செய்து விட்டு—மக்களிடம் வந்து அதை—விளக்கி—ஆதரவு திரட்டி தி. மு. கழகம் முழு பலத்துடன் போராட்டம் நடத்தும். புலி பதுங்குவது படுத்துறங்குவதற்கு அல்ல—பாய்வதற்கு! புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக்கொண்டதைப் போல் த. தே. க. வின் போராட்டம் முடிந்திருக்கிறது. இந்த லட்சணத்தில் சம்பத் சண்டியர்க்கு சவாலும்—தொடை தட்டலும் ஒரு கேடா?

வணங்காமுடி பதில் தருகிறார்

கே: எங்கள் ஊரில் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் பாண்டிச்சேரி சுப்பையா பேசும் பொழுது கிருஷ்ண மேனனை உயர்த்தியும், ராஜாஜி, நமது அண்ணா கருணாநிதி போன்றவர்களைத் தாக்கியும், தி. மு. கழகத்தை மட்டமான முறையில் திட்டியும் பேசி முடித்தாரே தவிர சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே ஏன்?

—சி. துக்காராம்
குடியேற்றம்

ப: கூலி கொடுக்கும் எஜமானனைக் கண்டித்து அடிமைகள் பகிரங்கமாகப் பேச முடியாது தோழரே! கம்யூனிஸ்டுகள் சீனரின் கைக் கூலிகள்!

கே: கம்யூனிஸ்டுகள் - டாக்டர் சுப்பராயன் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கட்சிக் கொடியை பாதிக் கம்பத்தில் பறக்கவிட்டார்கள். முன்னாள் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் மரணத்திற்கு ஏன் அப்படிச் செய்யவில்லை.

து. வரதராஜன்,
காவேரிப்பாக்கம்.

ப: டாக்டர் சுப்பராயன் அவர்களின் பிள்ளை மோகன் குமார மங்கலம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர். பிள்ளையின் முகத்துக்காகக் கொடியை இறக்கினார்கள்! ராஜேந்திர பிரசாத்தின் பிள்ளை அரிவாள் சுத்தியின்கீழ் இல்லையே-கொடியைப் பாதியில் பறக்கவிட.

கே: தென்னாட்டுக் கோட்ஸே (சம்பத்) மறக்காது கையில் வைத்திருக்கும் பொருள் என்ன? அதன் கருத்தென்ன?

—சு. செல்வம்
பம்பாய்-10

ப: அவர் கையில் வைத்திருக்கும் பொருள் **"ஐஸ்புரூட்"** ஐஸ்புரூட்டின் வாழ்வு சில நிமிடங்களோடு சரி. அதைப் போலவேதான் அவர் கட்சிக்கு, அவர் கொள்கைக்கு, அவர் பேச்சுக்கு தமிழகத்தில் நீண்ட நாள் வாழ்வு இல்லை. விரைவில் கரைந்துவிடும் என்பதுதான் அதற்குப் பொருள்.

"பணம், பதவி என்னும் ஐஸ்புரூட்டைக் காட்டினால் கொள்கையைக்கூட மறந்து ஓடிவந்து விடுவார்"—அதற்கு இப்படியும் பொருள் வைத்துக் கொள்ளலாம் என்கிறான் நமது ஆபீஸ் பையன் நீங்கள் எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி.

கே: திரைப்படத்தில் டி. ஆர். பாப்பாவின் இசையே ஒலிக்கவில்லையே. எங்கே அவர்?

—எம். வேலாயுதம்
திருச்சி

ப: தற்பொழுது பவனிவரும் மன்னாதி மன்னர்களின் இசை ஒலிக்கு முன்னால்—பாப்பாவின் அழுகுரல் எந்தப்படாதிபதியின் காதிலும் விழவில்லை போலும்.

கே: திரைப்படத் தயாரிப்பு உலகம் அள்ளிக்கொடுக்கும் பாரி வள்ளலுக்குச் சமம் என்கிறேன் நான் உங்கள் கருத்தென்ன?

—கே. எம். சுவாமி
ஸ்ரீரெங்கம்

ப: பாப்பரானவர்களும்—இன்சால்வெண்ட் கொடுத்தவர்களும் அந்த உலகத்தில் அதிகம் சாமி. லட்சத்தை விட்டவர்களும் உண்டு—லட்சத்தைப் பெற்றவர்களும் உண்டு. குதிரை ரேசில் பணத்தைக் கட்டியவன் நிலைதான். வந்தாலும் வரும். 'அம்போ' என்று போனாலும் போகும்.

வீரகேசரி மாத்திரை

நித்திரையில் ஜீவசக்திகள் வெளியாவதைத் தடுத்து நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, ஜீவசக்தியை அதிகப்படுத்தி நீடித்து இருக்கவும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சிறந்த மாத்திரை. (அனுபவமுள்ளது—நற்சாக்ஷிகள் பெற்றது)

24—மாத்திரை ரூ. 6—00
50—மாத்திரை ரூ. 12—00

(தேவைக்கு எழுதவும்):—சித்த வைத்திய பண்டிட்
S. V. R. கண்டர். R. I. M. P.
அரிசிப்பாளையம். வீ பஜார். P-O (சேலம் - 9.)

கலைச்சோலை

பார்த்த படம் : சரோடி பிரதர்ஸ்

கலை அரசி

விஞ்ஞானத்தையே அடிப்படையாகக்கொண்டு வெளிவரும் ஆங்கிலப் படங்களின் சாயல் -**கலை அரசியில்** படிந்திருப்பது பாராட்டத்தக்கது.

கலை அரசி கதை ஒரு புதிய சிந்தனை.

விஞ்ஞானம் முதிர்ச்சி பெற்ற வானுலக மண்டலத்திலிருந்து பறக்கும் தட்டு மூலம் பூமியை நோக்கி இரண்டு பேர் வருகிறார்கள்.

அவர்கள் கீழே இறங்குவதற்கு முன் வள்ளி என்ற பெண்ணின் இசையிலும், அழகிலும் மயங்கி அவளைத் தங்கள் மண்டலத்திற்குக்கவர்ந்து செல்லத் திட்டமிடுகிறார்கள். திட்டப்படி வள்ளி பலவந்தமாக பறக்கும் தட்டு மூலம் அழைத்துச் செல்லப்படுகிறாள்.

வள்ளியைக் காணாது தவித்த அவள் காதலன் எதிர்பாராத விதமாக பறக்கும் தட்டு மூலம் மேல் மண்டலத்திற்குச் செல்லும் வாய்ப்புப் பெறுகிறான்.

அங்கே பறக்கும் தட்டை இயக்கும் இரகசியங்களைத் தெரிந்துகொண்டு பல போராட்டங்களுக்குப் பிறகு வள்ளியுடன் பறக்கும் தட்டு மூலம் தன் சொந்தக் கிராமத்திற்கு வந்து சேருகிறான். இதுவே கதையின் கரு. இடையே வில்லன், கோமாளி, ஆள் மாராட்டம் இப்படிப் பல சம்பவங்கள் உண்டு.

கிராமத்து வாலிபராக வந்து அமைதியாக நடித்துள்ள எம் ஜி. ஆர். கோமாளி வேடத்தில் அற்புதமாக நடித்துள்ளார்.

வள்ளி என்ற பெயரில் இரட்டை வேடம் தாங்கியுள்ள பி. பானுமதி—முருகன் பைத்தியம் பிடிந்த பெண்ணாக வந்து "அதோ வாராண்டி பழனி ஆறுமுகன் தாண்டி" என்று வீரப்பாவை ஆட்டிவைக்கும் கட்டம் மிக அருமை. தியேட்டரில் கலகலப்பை உண்டு பண்ணுகிறார். மற்ற காட்சிகளில் அவருக்கே உரிய முத்திரையை இழந்துவிடவில்லை.

வீரப்பா—நம்பியார் உருட்டல், மிரட்டல், ஆர்ப்பாட்டம்—கச்சிதமாக நடித்திருக்கிறார்கள்.

குமாரி சுச்சு பரவாயில்லை.

ஆலங்குடி சோமு எழுதியுள்ள 'நீல வானப் பந்தலின் கீழே' என்ற பாடல் கேட்க இனிமையாக இருக்கிறது.

பறக்கும் தட்டு பறக்கும் காட்சியையும்-சண்டைக் காட்சிகளையும் சிறந்த முறையில் படமாக்கியிருக்கிறார்கள்.

மொத்தத்தில்......

கலை அரசி புதுமை நிறைந்த சிறந்த பொழுது போக்குப் படம்.

பாராட்டுகள் அத்தனையும் உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

○ மக்களுக்குச் சரியான பாதையைக் காட்டி, வைத்திய சாஸ்திரப்படி அமைந்துள்ள இந்நூலை யாவரும் படிக்கவேண்டும்.

— டாக்டர் ஆர். எஸ். ராஜன் M. B. B. S.

○ எல்லோரும் வாசித்துப் பயனடைய வேண்டுமென்பது என் அபிப்பிராயம்.

—டாக்டர் ஆர். ராஜகோபாலன் L. I. M,

○ தாங்கள் எழுதி உலகிற்கு அளித்த போற்றற்குரிய செல்வங்களாகிய 'ஆண்மைக் குறைவும் அதன் நிவர்த்தியும்' 'மனைவியைப் புரிந்துகொள்ளுங்கள்' என்ற இரு புத்தகங்களையும் நானும் வாசிக்க நேர்ந்தது. அதன் உதவியால் நான் பல முக்கிய விஷயங்களைப் புரிந்துகொண்டேன். தங்கள் திறமைக்கும் சேவை உள்ளத்திற்கும் என் மனப்பூர்வமான நன்றி.

—Mr. A. Aifred பள்ளி ஆசிரியர் கீழாழி இலங்கை

○ இளமையில் தகாத செயலில் ஈடுபட்டு, மனம் தளர்ந்து, வாழ்வை வெறுத்துத் துயருறும் வாலிபர்கட்கும் ஏனையோர்கட்கும் தங்கள் நூல் சமய சஞ்சீவி, யாவரும் அவசியம் படித்துப் பயன்பெற வேண்டிய 'திருமறை' என்றாலும் மிகையாகாது...

—திரு. எம். சண்முகம், மெயின்ரோடு,
காரிமங்கலம் (அஞ்சல்) தர்மபுரி வட்டம்,
சேலம் மாவட்டம்

இவ்விதம் பலரும் பாராட்டிப் போற்றிப் புகழும்

மூன்று சிறந்த அறிவு நூல்கள்

சீதாலக்ஷ்மி குயிலன் எழுதிய

- ஆண்மைக் குறைவும் அதன் நிவர்த்தியும்
- மனைவியைப் புரிந்து கொள்ளுங்கள்
- தாம்பத்ய வாழ்வில் சில பிரச்சினைகள்

வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஒவ்வொன்றும் விலை ரூபாய் இரண்டு. வி. பி. பி.ச் செலவு ந. பை. 75. மூன்று புத்தகங்களையும் பதிவுத் தபாலில் பெற ரூ. 7 முன்பணம் அனுப்பவேண்டும். பிரதிகளுக்கு முந்துங்கள்.

குயிலன் பதிப்பகம்
82 பாண்டி பஜார் : : தியாகராய நகர், சென்னை-17.

ஆர்ப்பாட்ட மறவர்க்கோர் முரசொலியாய்
போர்ப்பாட்டு வீரர்க்கோர் கேடயமாய்
ஆதிக்க வெறியர்க்கோர் அறைகூவலாய்
அண்ணாவின் எழுச்சிக் கட்டுரையுடன்
தயாராகிக்கொண்டிருக்கிறது
'தென்னகத் தலைவன்' தரும்

இந்தி எதிர்ப்பு மலர்

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
கலைஞர் கருணாநிதி
கி. மனோகரன்
கே. ஏ. மதியழகன்
க. ராஜாராம்
பேராசிரியர் க. அன்பழகன்
சி. பி. சிற்றரசு
தேவநேயப்பாவாணர்
அலமேலு அப்பாத்துரை
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர்.
ஆகியோர் தரும் கட்டுரைகளுடன்
ராஜாஜி அவர்களின் சிறப்புக் கட்டுரையும்
இடம் பெறுகிறது.
படித்துப் பாதுகாத்து வைக்கவேண்டிய மலர்
முக்கனியின் சிறப்பு! மூவண்ண முகப்பு
இத்தனைக்கும் விலை 75 காசுதான்.

விற்பனையாளர்கள் 25%. கழிவு நீக்கி தேவையான மலருக்கு முன்பணம் அனுப்பிவைக்க வேண்டும். முன்பணமின்றி மலர் அனுப்ப இயலாது. தேவையை உடன் தெரிவிக்கவும்.

புரட்சி நடிகர் அளித்த சிறந்த விருந்து !

அமெரிக்கா செல்லும் எலும்பு வைத்திய நிபுணர் டாக்டர் திரு. நடராஜனுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஒரு வழியனுப்பு விருந்து அளித்தார்.

தாசப்பிரகாஷ் ஓட்டலில் நடைபெற்ற இந்த விருந்திற்கு டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமை வகித்தார்.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.

தென்னகத் தலைவன்

ஆசிரியர்: தினகரன்

இந்தி எதிர்ப்பாளர்

விலை 50 காசு

இராணுவ ஆட்சி



கி.ஆ.பெ.விசுவநாதம்

இந்தித் திணிப்புச் சட்டம் இந்நாட்டிற்கு இதுபோது தேவைப்படாத ஒன்று. இதை நிறைவேற்றி வைத்தவர்கள் நாட்டுப் பற்றை இழந்து மொழிப் பற்றை மட்டும் கொண்டவர்கள்.

'இந்நாடு எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும். தங்கள் மொழிமட்டும் ஆட்சி மொழியானால் போதும்' என்ற மொழி வெறியர்களின் ஆதிக்கத்தில் காங்கிரஸ் கட்சி போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

தேசியமொழி 14 என ஒப்புக் கொள்ளப் பெற்றுள்ள ஒரு ஆட்சியில் இந்தி மொழிக்கு மட்டும் சலுகை காட்டுவதும், பெரும்பொருளைச் செலவிட்டு அம் மொழியை மட்டும் பரப்புவதும் நேர்மையாகாது என்பது நல்லறிஞர்களது கருத்து.

இந்தி வேண்டும் என்பவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டும், இந்தி வேண்டாம் என்பவர்களைக் கட்சிக் கட்டுப்பாட்டில் கட்டி வைத்துக்கொண்டும் இச்சட்டம் நிறை வேற்றப் பட்டிருக்கிறது. என்றாலும், இக் கூட்டத்திற்கு வராத நூற்றுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இச்சட்டத்தை வெறுக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரியவருகிறது.

ஒருமொழி பேசுகின்ற பெரும்பான்மையான மக்களைக் கொண்ட இந்தியப் பார்லிமெண்டில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது இந்தியாவின் பலமொழி பேசுகின்ற பல்வேறுமக்களின் ஒருமித்த முடிவு எனக்கொள்வது தவறாகிவிடும். உண்மையான முடிவு என்பது இந்திமொழி பேசாத மக்களிற் பெரும்பான்மையோர் செய்த முடிவாகவே இருக்கும். மாறுபட்ட கருத்துள்ள மக்கள் செய்த சட்டம் வேறுபட்ட கருத்துள்ளவர்களை எப்படிக் கட்டுப்படுத்தும்? என்பது நுணுகி அறியவேண்டிய கருத்தாகும்.

சட்டம் நிறைவேறிய உடனேயே, இனி எல்லா உத்தரவுகளும் இந்தி மொழியிலே இடவேண்டும், எவரேனும் இந்திதெரியாமல் வேறு மொழியில் உத்தரவிட்டால் அதை இத்தியில் மொழிபெயர்த்தாக வேண்டும்; என்ற அறிவிப்பு இந்திய அரசாங்கத்திலிருந்து வந்திருக்கிறது. இந்த அறிவிப்புக்கும், நிறைவேறிய சட்டத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இருந்தும் அச்சட்டத்தை அடிப்படையாக வைத்தே இவ்வறிக்கை வந்திருப்பதால் அதை இந்தித் திணிப்புச் சட்டம் எனக்கூறுவதில் எவ்விதத் தவறும் இருக்கமுடியாது.

'இந்தி பேசாத பகுதிகளில் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக நாங்கள் இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று உயர்பதவிகளிலுள்ள அரசியல் தலைவர்கள் ஒருபக்கம் கூறிக்கொண்டும், மறுபக்கம் இத்தகைய அறிக்கைகள் வத்து கொண்டும் இருந்தால் இதை 'அரசியல் பித்தலாட்டம்' எனக்கூறாமல் வேறெவ்வாறு கூறுவது? என்பது நமக்குப் புலப்படவில்லை.

'இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி ஆட்சிமொழியாக வராது' என்பது கனம் நேரு அவர்களின் வாக்குறுதி. இந்தி வெறியர்களின் விருப்பப்படியெல்லாம் இந்தி புகுத்தப் பெறும் என்பது இன்றைய அறிக்கைகள் வெளியிடும் உண்மை. 'வாக்குறுதி என்பது எது? சொந்தக் கருத்து என்பது எது?' என்பது சொல்பவர்களுக்கே விளங்காதபோது, 'நம்புவது எதை? நம்பாதது எதை?' என்பதே கேட்பவர்களுக்குப் புரியாதபோது உரிமை வேட்கைக்கும், அடிமைத்தனத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை யாருக்குத்தான் புரியப்போகிறது.

'இந்தி வந்தால் தமிழ் அழியாது' எனவும் 'தமிழ் அழியும்படி நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்' எனவும் நமது அமைச்சர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

'இருபது ஆண்டுகளாக 'வானொலி' என்று எழுத்திலும், பேச்சிலும் நூலிலும் வழக்கத்திலும் இருந்து வந்த தமிழ்ச்சொல் 'ஆகாசவாணி' என்ற—இந்தி வந்ததும் அழிந்து போனது எப்படி? அதைப் பார்த்துக் கொண்டிருந்தது ஏன்? என்று எந்தத் தமிழனாவது ஒருவன் கேட்டுவிட்டால் திரு. காமராசர் உளரத்தானே வேண்டும். அவரால் உண்மையை எப்படி மறைக்க முடியும்.

பாவம் இவராவது பார்த்துக் கொண்டிருப்பவர். திரு. பக்தவசலனாரோ 'காவல்நிலையம்' என்ற தமிழ்ச்சொல்லைஎல்லாம் அழித்துக்கொண்டும். 'வாழிய செந்தமிழ்' என்ற பாரத நாட்டு வணக்கத்தைத் தமிழில் சொல்லக்கூடாது' என்று ஒழித்துக் கட்டிக் கொண்டும் இருப்பவர். இவர் கூறுகிறார் 'தமிழ் அழியும்படி பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்' என்று. இது வியப்பிலும் ஒரு தனி வியப்பாகும்.

இவர் மற்றொரு சமயம் கூறினார்: 'தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுகிறவர்களில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல' என்று. கல்லூரிகளின் பயிற்றுமொழி 1963-லிருந்து தமிழ்மொழி, என்ற திட்டத்தை நடைபெறவொட்டாமல் செய்துகொண்டும், உயர்நிலைப்பள்ளிகள் பலவற்றில் பயிற்றுமொழி தமிழாக இருந்துவந்ததை ஆங்கிலமாக மாற்றிக்கொண்டும், தமிழ் ஆட்சிமொழியாக உள்ள தமிழக அரசாங்கத்தில் வேலைக்கு வருகிறவர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டியதில்லை என்று அறிக்கைகள் விட்டுக்கொண்டும்தான் இவ்வாறு கூறினார். பொறுப்புள்ள பதவிகளில் இருப்பவர்கள் பொய் சொல்வதற்கு அஞ்சாவிட்டாலும் "மானம்" "வெட்கம்" முதலியவைகளுக்காவது அஞ்சிப் பேசுவது நலமாகும்.

"இந்தித் திணிப்புச் சட்டம் இப்போது தேவையில்லாதது; அதுவும் இந்த அவசர கால நிலையில் நிறைவேற்றித் தீர வேண்டிய ஒன்றல்ல. இது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கே கேட்டை விளைவிக்கும். இது வேற்றுமைக்கு விதைக்கும் வித்து. "இந்தியாவின் ஒருமைப்பாட்டை இந்தித் திணிப்பின் மூலம் உண்டாக்க முடியும்" என்று கருதுகிறவர்கள் வரலாறு அறியாதவர்கள். இவற்றை காங்கிரஸ் மேலிடத்தினர்க்கு தமிழக அமைச்சர்கள் தெரிவிக்கவேண்டும். இல்லையானால் தமிழ்த் தாயை நோக்கி 'நீ இப்படிப்பட்ட பிள்ளைகளைப்பெற்றால் உன்கதி பின் எப்படி இருக்கும்?' எனக் கேட்டு அழ வேண்டியதுதான்.

'இந்தியா பல மொழி பேசுகின்ற பல நாடுகளைக் கொண்ட ஒரு துணைக்கண்டம்' என்பது வரலாறு மெய்ப்பிக்கும் உண்மை. இதை ஒன்றுபடுத்தவும், இதற்குள் ஒருமைப்பாட்டைக் காணவும் வேண்டுவது அன்பு நெறியே. அழிநெறியும், மொழிவெறியும் அன்று. இவ் வுண்மையை ஆட்சிசெய்யும் மக்கள் உணர்வதே நல்லது.

"இந்தி பேசாத மக்களுக்கும் இந்நாட்டு விடுதலையில் பங்கு உண்டு" என்பதை இந்தி வெறியர்கள் ஒப்புக்கொள்வதாயில்லை. இந்தி பேசாத மக்களோடு சேர்ந்து வாழ இந்தி மொழி வெறியர்கள் விரும்பவில்லையானால், அதை வெளிப்படையாகக் கூறி பிரிவினை செய்து கொண்டு தனித்து வாழ்வதுதான் நல்லமுறையாகவிருக்கும். அதைவிட்டு அவர்கள் தங்கள் விருப்பத்தை இந்தித் திணிப்புச் சட்டமே நிறைவேற்றி வைத்துவிடும் எனக் காத்திருப்பது நேர்மையாக இராது.

(27-ம் பக்கம் பார்க்க)

மந்திரிகளல்ல இவர்கள் அடிமைகள்! எடுபிடிகள்!

மந்திரிகளுடைய அடிமைப்புத்திக்கு நான் என்ன செய்யட்டும்? அந்த அடிமைத்தனத்திலிருந்து அவர்களால் மீளமுடியவில்லையே! அவர்களுடைய பதவியைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களுக்கும் வேறு வழியில்லையே! பதவிப்பித்து இல்லாவிட்டால், அந்த அடிமைப் புத்தி இல்லாவிட்டால், இந்தி நம்மைக் கெடுக்கும் என்று அறிந்திருந்தும் அதைத் தமிழ்நாட்டில் நுழைய விட்டிருப்பார்களா?

ஆகவே, நாம் இந்தியை எதிர்ப்பது மந்திரிசபை மீது நமக்குள்ள விரோதத்தாலோ-காங்கிரஸ் கட்சியின் மீதுள்ள விரோதத்தாலோ அல்ல என்பதை எல்லோரும் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்

'அன்றைய' பெரியார்

1948-இந்தி எதிர்ப்பு மாநாட்டில்!



அரசியல் சட்டமும் அடிமை வாழ்வும்

அரசியல் சட்டமும் அடிமை வாழ்வும் தென்னக மக்கள்மீது திட்டமிட்டுத் திணிக்கப்படுவதை பல ஆண்டுகளாக முன்னேற்றக் கழகம் மக்கள் மன்றத்திலே உறுதிப்படுத்தியிருக்கிறது. துணைக் கண்டத்து மக்கள் பலரின் எண்ணத்திற்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் பிரிவினைத் தடைச் சட்டம், ஆட்சிமொழிச் சட்டம், இரண்டும் இந்தியாவிலேஇருக்கும் ஆதிக்க வெறியர்களின் வெற்றிப்புன்னகையைக் காட்டுகின்றன. தடைச் சட்டத்தை ஏற்றுக்கொள்பவர்கள் ஆட்சிமொழிச் சட்டத்தை எதிர்த்துக் கொடி உயர்த்துகின்றனர். தடை மசோதாவை நிறைவேற்ற ஆய்வுரைகள் வழங்கிய சர் சி. பி. ராமசாமியின் குழு ஆட்சி மொழி மசோதாவின் நிறைவேற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. முன்னேற்றக் கழகம் மட்டுமேதான் மொழி ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சிகள் செய்ய முடியுமெனச் சொல்கின்றனர். புதுடில்லி எசமானர்களுக்கு எடுபிடிகளாகிவிட்டவர்கள் தான் புதிய சட்டங்களை வரவேற்கின்றனர்.

இரண்டு மசோதாக்களையும் எதிர்க்கும் பெரும் பொறுப்பினைக் கழகம் மேற்கொண்டுள்ளது. இன்று மட்டுமல்ல, மொழிப் பிரச்சினைக்கு முதல் போர்க்களம் கண்ட காலத்திலிருந்தே அண்ணாவின் பின்னேயிருக்கும் அணிவகுப்பு கடமையைச் செய்திருக்கிறது. தமிழகச் சட்ட மன்றத்தில் ஆட்சி மொழி பற்றிய அறிக்கையினை அன்றைய கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் தயாரித்த போது அறிஞர் அண்ணா அவர்கள் அருமையும் பெருமையும் நிறைந்த அறிவுரைகளை வழங்கினார்கள். கட்டாய இந்தி ஆட்சிமொழித் திணிப்பை முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஏற்றுக் கொண்டுவிட்டார் என்று அமைச்சர்களும் அவர்தம் அடிவருடிய கட்சியினரும் சொன்ன பொய்க் கூற்றுகளையெல்லாம் சட்டமன்றத்திலேயே அம்பலப்படுத்திய சான்றாண்மை அண்ணாவுக்குண்டு. இந்த உண்மையறிந்த இப்போதைய மந்திரியொருவர் அண்ணா கையொப்பமிட்டார் என்றெல்லாம் உளறுவதைக் கேட்டு அவரது அறியாமைக்காக அனுதாபத்தைத் அறிவிக்க வேண்டியுள்ளது.

கடந்து போன ஐந்தாண்டுகளுக்கு மேல் முன்னேறக் கழகத்திற்கு பின்னால் ஒளிந்துகொண்டு ஆட்சிமொழி மசோதாபற்றிப் பேசிக் கொண்டிருந்தமந்திரிகள் பல உண்மைகளை இன்றைய தினம் உதறித் தள்ளிவிட்டனர். கழகம் கருப்புக் கொடி காட்டிக் குடியரசுத் தலைவரை வரவேற்கும் என்ற அபாய அறிவிப்பினைச்சொன்னபோது அலகாபாத்பண்டிதரும், அன்றைய உள்துறை அமைச்சருமானவல்லபபந்தும், குடியரசின் தனிப்பெருந்தலைவராக இருந்த பிரசாதும் அறிக்கைகளின் வழியாக உறுதிமொழி தந்தனர். செத்துப்போன இரண்டு பெரியவர்களும் தப்பிவிட்டார்கள். உயிரோடிருக்கும் பிரதமர்அவர்கள் உறுதி மொழியினைச் சட்டத்திலே இணைக்க முடியவில்லை என்று இழுப்புக் குரலிலே பேசி முடித்துவிட்டார். தினமும் அவர் தரும் சாகச மொழிகளை இன்னும் நம்ப வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்! எத்தனையோ தடவை எத்தனையோபிரச்னைகளுக்காக சட்டத்தை மாற்றியவர்கள் எவருடைய எதிர்ப்பையும் ஏற்றுக்கொள்ளாமல் இந்தி ஆதிக்கச் சட்டத்தை ஆணவக்குரல் தரும் இரும்புப் பிடியைப்பாரத மாதாவின் பெயரால் நிறைவேற்றிவிட்டார்கள்!

அன்றோர் நாள் ராசேந்திர பிரசாத் அவர்கள் சென்னைக் கடற்கரையிலே பேசும்போது தமிழகத்து மக்களைப் பார்த்து 'நாங்கள் வேறு-நீங்கள் வேறு' என்று வெளிநாட்டுத் தலைவரைப்போல பேசினார். அதிகப்படியான மக்களின் மொழியான இந்தியைக் கற்கவேண்டுமென்று கட்டாயப் படுத்திப் பேசினார். தமிழ் நாட்டு அமைச்சர்கள் அதனைக் கண்டிக்கவில்லை. அப்படியே ஏற்றனர். இப்போதும் அப்படித்தான் நேருவாலே தரமுடியாத உறுதிமொழிகளை காமராசரும் பக்தவத்சலமும் தருகின்றனர். மக்கள் சபையில் நடைபெற்ற விவாத உரைகள், விடுதலை வேண்டிய வீரர்கள் எப்படியெல்லாம் ஆதிக்க வெறியர்களாக மாறிவிட்டார்கள் என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளன. பிராங் அந்தோணியும் மனோகரனும் அறிஞர் அண்ணாவும் அரசியல் சட்டத்தின் வழியாக அடிமை வாழ்வைத் திணிக்கும் அதிகாரபீடத்தவர்க்கு எவராலும் மறுக்க முடியாத விளக்கத்தை தந்து உரைநிகழ்த்தியுள்ளனர். பங்கப்பட்ட பகதூர்கள் பள்ளிச் சிறுவர்களாகப் பதுங்கிவிட்டனர்!

மொழிப் பிரச்னையில் தமிழகத்துப் பேரறிஞர்கள் புலவர் குழுவினர் முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களிலே ஒப்புதல் கண்டுள்ளனர். பதவிப் பித்தர்கள்தான் தாயகத்தின் மானத்தை தரங்கெட்ட வகையில் விற்றுவிடத் துடிக்கிறார்கள்! ஈரோட்டுப் பெரியாரும் அவருடைய பையனும், சடுகுடுத் தலைவர்களும் கன்னக்கோல் சிவஞானங்களும், குடிமகனும் குருட்டுச் சம்மட்டிகளும் இந்தி எதிர்ப்புப் போரிலும் கழகத்தை இழிவுபடுத்தத் துணிந்திருக்கின்றனர். எச்சில் இலைகள் என்றைக்கும் கோபுரக் கலசத்தைக் காப்பாற்றப் போவதில்லை! தேய்ந்த லாடங்கள் என்றும் கோட்டையைக் காத்ததில்லை! சைனா பசாரில் ஒருநாள் விளையாடி விட்டதால் ஈரோட்டுப் பெரியாரின் வாரிசில்லாத சொத்துக்குச் சுவீகாரம் போகும் பெரிய பையன்கள் கழகப் பணியினைக் கவனிக்க மறுக்கிறார்கள். ஆனால் முன்னேற்றக் கழகத்தின் முழுவலிவினைக் கண்டிருக்கும் தமிழ்நாட்டு நல்லவர்கள் நம்மாலே தான் நற்றமிழைக் காக்கும் அருஞ்செயல் செய்யப்படுமென நம்புகின்றனர்.

மொழியாதிக்கச் சட்டத்தால் பாதிக்கப்படும் பல்வேறு மாநிலத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டும், தென்னகமக்களின் எழுச்சியினை திரட்டும் பொறுப்பினையும் கழகம் ஏற்றுக்கொண்டுள்ளது. மக்கள் சபையில் மனோகரன் அவர்கள்நிகழ்த்திய உரை மண்டைக்கன அரசியல்வாதிகளுக்கு அதிர்ச்சியைத் தந்தது. மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

தாயும் பேயும்

கா. வேழவேந்தன்

இந்தி :—விந்தியத்தின் கோடுவரை புகழ்விரித்து
வீறுபுகழ் ஆட்சியினை நடத்தி நின்ற
செந்தமிழாள் நீதானா? வெட்கம்! இன்று
தேய்ந்தழிந்து நிற்கின்றாய்! சிரிக்கின்றேன்
நான்!

தமிழ் :—சிரிப்பெதற்கு? ஒருநாளில் என்றன் மைந்தன்
சேரன்என்பான் உன்மண்ணைக் கூள மாக்க
நெருப்புதிர்த்தே எழுத்தானே, எதிர்த்து நிற்க
நெடுமரங்கள் ஒன்றுண்டா? யாருக்கு வெட்கம்?

இந்தி :—கிடக்கட்டும்! என்பின்னால் சூழ்ந்து நிற்கும்
கிளைத்துள்ள மக்கள் பதினைந்து கோடி;
அடக்குன்றன் வாதத்தை! இனிநீ என்றன்
அடிமைஎன்ற உண்மையினை மறந்திடாதே!

தமிழ் :—பேசுகின்றாய் ஆணவத்தால் உனது தாயாம்
பிணக்காட்டுச் சமக்கிருதம் நுழைந்த நேரம்
கூசாமல் வாலைவெட்டி இருந்தால் இன்று
குவிந்தபுகழ் தெக்கணத்தை முழுதும் ஆள்
வேன்!

இந்தி :—சொல்வதற்குக் கேவலமாய் இலையா? இன்றும்
சுக்ரீவர், வீடணர்போல் உன்றன் மண்ணில்
கல்போல ஆளுபவர் மலரைத் தூவி
கால்வீழ்ந்து வரவேற்க விலையா என்னை?

தமிழ் :—தரங்கெட்டுப் பேசுகிறாய்! உனை ஒழிக்க
தாளமுத்து நடராசர் சாவை ஏற்றார்!
உரந்தோய்ந்த காஞ்சிமகன் பின்னால், மண்டை
ஓடுகளால் மலைசமைக்கப் படையா இல்லை?

இந்தி :—'சட்ட'மென்ற கூரியவாள் இலையா கையில்?
'தருணம்' என்ற பல்லக்கும் இலையா? பின்னும்
குட்டுக்குக் குனிவோர்கள் இருக்கும் போது
கோலாட்சி மலர்வதற்குத் தடைதான் ஏது?

தமிழ் :—என்மார்பில் தவழ்ந்தவர்கள் உறங்குவாரா?
என் முடியில் உன்னடியை ஏற்றுதற்குக்
கொன்றாலும் ஒப்புவரா? இந்திப் பெண்ணே!
கும்மாளம் போடாதே! திரும்பி ஓடு!

திருமணம்

திரைப்பட உதவி டைரக்டர் தமிழ்ப்பித்தன் அவர்களின் ட்சுமிக்கும், மறைமலை அடிகளாரின் பேரரும், மறை. திருநாவுக்கரசு அவர்களின் குமாரரும் ஆன தி. ஆலங்காடன் பி. ஏ. அவர்களுக்கும் 5-5-63 அன்று, மதுரையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர்., டி. கே. பகவதி, இராசாராம் எம். பி., இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ., ஆகியோரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

கேள்வி ஞானங்கள் வெல்லுமோ?

எஸ். எஸ். தென்னரசு

"இந்தி வருவதால் தமிழுக்கு இழுக்கல்ல; தமிழ் கெட்டு விடாது; நமது தமிழ் அவ்வளவு பலவீனமான மொழி அல்ல; தமிழின் வல்லமையை அறியாதார் தான் இந்தியை எதிர்ப்பார்கள்''—என்று ஒரு குரல்; இது காமராசர் குரல்.

"இந்தியை எதிர்ப்பது தமிழை அடிமைப்படுத்துவதாகும்! ஆங்கில மோகம் தலைக்கேறி அலைபவர்கள் இந்தியைக் காரணமாக வைத்து தமிழை அழிக்கப் பார்க்கிறார்கள்' இப்படி ஒரு குரல். இந்தக் குரல் ம. பொ. சிவஞானத்தினுடையது.



இரண்டுபேர் சிந்தனையிலும் ஒற்றுமையில்லை.

இந்தி வந்தால் தமிழ் கெடாது என்கிறார் காமராசர்.

இந்தியை எதிர்த்தால் தமிழ் கெடும் என்கிறார் ம. பொ. சி. ஆனால் மொத்தத்தில், கடிக்கத் தெரியாத பாம்பு, வீட்டில் இருப்பது தவறில்லை; குழந்தைக்கு ஆபத்து வராது என்கிறார்கள் இருவரும். இந்த இரண்டு பேருக்கும் இந்தியைப் பற்றி எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் தெரியும் தமிழைப் பற்றியும்! ஆனால் தமிழ்ப்பற்று மிக்கவர்களைப் போல் இருவரும் உருகிக் கொண்டிருக்கிறார்கள். இருவருக்கும் தமிழில் நூலறிவு இல்லை; 'கேள்வி ஞானங்கள்' தான் இருவரும். காமராசர் தமிழ்ப் பேராசிரியரும் அல்லர்; ம.பொ.சி. இரட்டைப் புலவரும் இல்லை.

காமராசர் ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் மழைக்குக்கூட ஒதுங்காதவர்.

ம. பொ. சி, படித்தவர்களின் உரைகேட்டு, தமிழின் பால் பிரியம் வைத்தவர். இவர்களைக் காட்டிலும், தி.மு.க.வுக்கு, தமிழைப்பற்றிப் பேச, தமிழுக்காக வாதாட ஆயிரம் மடங்கு தகுதி உண்டு. தி.மு.க. தலைவர், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும் தமிழாராய்ச்சி துறையில் தேர்ச்சிபெற்றுப் பட்டம் பெற்றவர்கள். நாராயணசாமி - நெடுஞ்செழியனார்; இராமையா - அன்பழகனார்; சோமசுந்தரம் - மதியழகனார். ஆகையால் தமிழுக்குப் பரிந்து பேச தி. மு. க. வுக்கு இருக்கும் தகுதி மற்றவர்களுக்கு இல்லை என்பதைக் 'கேள்வி ஞானங்கள்' அறிந்து கொள்வது உத்தமம்!

எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்று! தி. மு. க. இந்தியை எதிர்ப்பதற்குக் காரணம் மொழிப்பிரச்சினை அல்ல; மானப் பிரச்சினை. முதுகிலடியுங்கள் பொறுத்துக் கொள்கிறேன்; வயிற்றில்மட்டும் அடித்து விடாதீர்கள்; செத்துப்போய்விடுவேன். என்போர் தி.மு.க.வினரல்ல என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. தமிழ் வாழுமிடமெல்லாம் தலைதூக்கி நிற்கும் தி.மு.க. இந்தியை எக்காரணம் கொண்டும் தென்னகத்தில் நுழையவிடாது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்த்திய உரையினைப் பற்றி 'இந்தி மீது போர் பிரகடனம்' என்றே 'எக்ஸ்பிரஸ்' இதழ் வெளியிட்டது! ஆட்சி மன்றங்களில் தெரிவிக்க வேண்டிய கருத்துக்களைத் தெரிவித்துக் கழகம் தன் கடமையைச்செய்து முடித்திருக்கிறது கண்டும் காணாத கருத்துக் குருடர்கள், 'மெயில்' இதழின் நிருபர் பெர்ட்டினுக்சின் பெருமைகுரிய பாராட்டுரைகளைப் படித்துப் பார்க்கவேண்டும்! மொழிப் பற்று மிக்கவர்களின் கூட்டணி முயற்சிக்கு முன்னேற்றக் கழகம் முழு ஒத்துழைப்பையும் தரும். தனித்த கிளர்ச்சிகள் பற்றிபொதுக்குழு வழிகாட்டும்!

இந்தியாவை பாரதமாக்கிப் பீடமேறிக்கொண்டவர்கள் 'இந்தி' மகுடம் சூட்டிப்பார்த்து ரசிக்கின்றனர். வெறியர்களின் கட்டளைக்குத் துரோகிகள் தலைவணங்குகின்றனர். விவேகிகளின் விளக்க உரைகளை ஏற்றுக்கொள்ள எப்போதும் போலவே மறுத்துவிட்டனர்!

அவர்கள் முடிவே சரியென்று வாதிடும் அகில இந்தியக் கட்சியினர் அனைவரும் தென்னவர் மன்னிப்பை என்றும் பெறப் போவதில்லை. தங்கள் தவறுகளுக்குத் தக்க தண்டனையைப் பெறுவார்கள்! நாகநாட்டுக் கலகக்காரர்களின் வேண்டுதலைக் கூட ஒப்புக்கொண்டு 'நாகநாடு' தந்திருப்பவர்கள் மக்களின் தீர்ப்பை மதிக்காதவர்களாகவே மாறிவிட்டனர்! உலகத்துக்கெல்லாம் சனநாயகப் போதனைகள் செய்யும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரிகள்கூட மொழி வெறி நாட்நாட்டிய மாடும் பகதூர்களையும் பாராட்டுகிறார்கள். பகுத்தறிவை ஏனோ பறிகொடுத்தனர்!

ஆட்சி உரிமைகள் காங்கிரசுத் தலைவர்களின் பரம்பரைச் சொத்தாக மாற்றப்படுவதற்குத்தான் சட்டங்கள் பயன்பட்டிருக்கின்றன. பொது மக்களாலே விரட்டப்பட்டவர்கள் நேருவின் தயவாலே பெரிய மனிதர் பட்டம் பெறுகின்றனர். மேனன் முதல் மாளவியா முடிய எத்தனையோ சான்றுகள் உள்ளன! பெருபாரியைக் கூட பாகித்தானுக்குத் தந்தார்கள்-அதற்கு அரசியல் சட்டம் வளைந்தது! ஆனால் ஆங்கிலத்திற்கு இடம் தர வேண்டுமென்றால் வான்முட்டப் புகழ் கொண்ட தலைவர்கள்கூட சட்டத்தில் இணைக்க வக்கு வகையில்லையென வருத்தப்படுகிறார்கள்-வாயைப் பிளந்து நிற்கிறார்கள்! எனவேதான் அறிஞர் அண்ணா அறிவித்ததுபோல இந்தியைக் காக்கப் பத்துப் பிணங்கள் விழுந்தால் இந்தப் பக்கத்திலே யிருந்து எதிர்க்க நூறு பிணங்கள் விழத்தான் வேண்டும் என்றார்! அந்தப் பெரும் பணியில் பொறுப்பேற்கும் நல்லவர்களையும் வல்லவர்களையும் வாழ்த்துகிறோம் - அறப்போருக்கு வருக என அழைக்கிறோம்!



இந்தி எதிர்ப்பு மலர்
9-6-63

அழைக்கின்றார் அண்ணா ஆகஸ்டில் போராட்டம்!

போர்! போர்! போர்!

மானம் காத்திடும் மறவர் பெரும்படையே! ஆற்றல் அணி கொண்ட அஞ்சாத காளைகளே! பகையறுக்கும் பாசறையில் பழகிவரும் வரிப்புலிகாள்! போர்முகத்துத் தழும்பேற்று புறம் பாடும் சிங்கங்காள்! பாய்ந்துவரும் ஈட்டிக்கு மார்காட்டும் வீரர் காள்!

போர்முரசு ஒலிக்கிறது!

பறை முழக்கம் அதிர்கிறது!

படைகொண்ட பெருந்தலைவன் குன்றேறி நிற்கின்றான்!

தானைத்தலைவன் ஆணையிடப்போகின்றான். திறந்திருக்கும் சிறைச்சாலை போய்த்திரும்பு என்பானோ? குண்டுமழை பொழிவார்க்கு குருதி கொடு என்பானோ? தீயில் குதியென்று திறம்பார்த்துச் சொல்வானோ?

மூன்று நாள் கூடி முடிவெடுத்து வந்துவிட்டான்!

நாட்டைக் கெடுக்கவரும் நச்சுமொழிப்பகையின், சேட்டை ஒடுக்க செருமுனைக்கு 'வா' என்று கோட்டைச் சுவர் அதிரக் குரல் கொடுக்கப்போகின்றான்.

களம் அஞ்சாக் காளையரே! அண்ணனின் கட்டளை வருகிறது—காத்திருப்பீர்!

நான் இதை எழுதிக்கொண்டிருக்கிறேன். பொதுக் குழுவின் மூன்றாம்நாள் நிகழ்ச்சி முடிவின் எல்லையைத் தொட்டுக் கொண்டிருக்கிறது,

பொதுக்குழு முடிவெடுத்த வீரவரலாற்றுச் செய்தியினை இன்று மாலை அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக்கூட்டத்தில் வெளியிட இருக்கிறார்கள்.

அண்ணா அவர்களின் போர்முழக்கத்தையும் - கழகம் கண்ட பொதுக்குழுவின் முடிவினையும் - நமது முன்னணித் தலைவர்களின் கருத்தினையும் அடுத்து வரும் இதழில் சிந்தாமல் சிதறாமல் சேகரித்துத் தருகிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் தி. மு. கழகத்திற்கு புதிதல்ல. கட்சியை வளர்த்துக் கொள்ளுவதற்காகப் போடும் வெறும் ஆர்ப்பாட்டக் கூச்சலுமல்ல - இந்தி எதிர்ப்பு தி. மு. கழகத்திற்கு உயிர்ப்பிரச்சினை! மானப்பிரச்சினை!

1938-லிருந்தே நாம் இந்தித்திணிப்பைக்கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறோம். தாளமுத்து – நடராசன் என்ற இரு வாலிப மலர்களை இந்திச்சண்டாளிக்கு இரையாகவும் கொடுத்திருக்கிறோம்.

எங்கள் வீட்டிற்குள் நுழைந்து ஆதிக்கம் செலுத்த எண்ணாதே என்று எத்தனைமுறைதான் அந்த மானங்கெட்ட மல்லாரியை அடித்துவிரட்டுவது.

ஒவ்வொரு தடவையும் நம் கையாலே அடிபட்டு ஓடுகின்ற இந்தித்தாசி அடுத்தமுறை தளுக்கு நடைகாட்டி, தாழம்பூ மணம் கூட்டி, நம்மைத்தழுவக்கரம் நீட்டி வந்து கொண்டே இருக்கிறாள்.

இந்தமுறை அவள்மட்டும் தன்னந்தனியாக வரவில்லை. சட்டத்திலே உட்கார்ந்துகொண்டு - என்னையாரும் எதுவும் செய்ய முடியாது, நான்யார் தோள்மீதும் கை போடுவேன் என்று போட்டுக் காட்டிக்கொண்டு வருகிறாள். அவளுக்குப் பின்னாலே, சட்டம், பாதுகாப்பு, அடக்குமுறை எல்லாம் படையெடுத்து வருகிறது.

அடுத்துவரும் இதழில

—: :—

"யாருக்காக அழுதான்" - ஒரு திருட்டுக் கதை! எங்கே திருடினார் ஜெயகாந்தன்?

மண்டைத் திமிற்கொண்ட செங்கொடிக் காரரின் மானங்கெட்ட காட்டும் நிலையை விளக்கிக் கட்டுரை—ஆங்கில நாவலொன்றின் ஆதாரத்துடன் வெளிவருகிறது.

பொதுக் குழு முடிவும் போராட்டத் திட்டமும் புகைப்படங்களும்

இடம்பெருகின்றன. படிக்கத் தவறாதீர்கள்.

நம் அன்னை அமர்ந்திருக்கின்ற சிம்மாதனம்அந்த மூதேவிக்கு வேண்டுமாம். தராவிட்டால், பின்னாலே வருகின்ற படைபட்டாளங்கள் மூலம் அவள் திணிக்கப்படுவாளாம். டெல்லி அரசு இப்படித்தான் சொல்லுகிறது.

அந்த விவஸ்தை கெட்ட இந்திப்பெண் நடந்து வருவதற்கு, இங்குள்ள காமராஜர்களும் பத்துலட்சங்களும் படுதா விரித்து, மணியாட்டிக்கொண்டிருக்கிறார்கள். சொரணை கெட்டவர்கள்!

இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட தமிழகத்தில் நம்மைத்தவிர வேறு நாதியில்லை.

இங்குள்ள கம்யூனிஸ்டுகள் வட நாட்டு அடிமைகள்! சிறையிலிருக்கும் சில கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்தால்போதும்— இந்தியைப்பற்றி வாய்திறக்கமாட்டார்கள். கைக்கூலியை எதிர்பார்த்து அதற்குத்தக்கபடி ஒப்பந்தம் செய்துகொள்ளுவதே தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் பரம்பரைக் குணம்.

சோஷலிஸ்டு கட்சிக்காரர்கள் இந்தியின் முத்தானையிலே தொங்கிக் கொண்டிருப்பவர்கள்.

நாடே தீப்பிடித்து எரிந்தாலும் அதில் காமராஜரைக் காப்பாற்றுவதுதான் ஐயா பெரியாரின் கொள்கை - அவர் பிள்ளை சம்பத்து இந்தியை எதிர்ப்பது போல் நாடகம் நடத்துவார் - நாடகத்திற்கு வந்த கூட்டம் எவ்வளவு, நமக்கு லாபம் எவ்வளவு; இந்தக் கணக்கோடு அவர் கடையைக் கட்டிக் கொள்ளுவார்.

குப்பை கூளங்களை ஒதுக்கிய பிறகு - வடிகட்டியபிறகு - சலித்தெடுத்த பிறகு தமிழ் நாட்டில் இந்தியைத்தீவிரமாக எதிர்ப்பதற்கு தி. மு. கழகம் ஒன்று தான் முத்துக்களைப் போல் பிரகாசமாய்த் தெரிகிறது.

டெல்லி அரசின் ஆதிக்கவெறியை எதிர்த்துப் போராடுவதற்குரிய துணிவும் - ஆற்றலும் கொண்ட கட்சி தி. மு. கழகம் ஒன்றுதான்.

போர் முரசு கொட்டி- டெல்லி அரசினைக்களத்திலே சந்திப்பதற்கான நாள் குறிக்கத்தான் தி. மு. கழகம்-தமிழகத்தின் தலைநகராம் சென்னைத் திரு நகரில் பொதுக்குழு கூட்டியிருக்கிறது.

பொதுக்குழு உறுப்பினர்கள், போர் வீரர்களைப்போல் நடமாடுகின்ற காட்சியினைக் காணுகின்ற பொதுமக்கள்-கலங்கரை விளக்கினைக்கண்ட மாலுமியின் நிலையில் - இனி நமக்குப்பயமில்லை என்று நெஞ்சுயர்த்தி நடக்கிறார்கள்! நான்கு நாட்களாக சென்னை நகரமே களை கட்டியிருக்கிறது.

இந்தி மொழி ஆதிக்கத்தால் விளைய இருக்கும் கேடுகளைப் பல பேரறிஞர்களின் கருத்தோவியங்களின் மூலம் விளக்கவும் —போராட்ட உணர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமையும் வகையிலும் "தென்னகத் தலைவன் இந்தி எதிர்ப்பு மலர்" கொண்டுவர எண்ணினேன்.

"பத்திரிகைக் கோட்டா இல்லாத நிலையில் மலர் போடுவது நம்மைப் பெரும் பள்ளத்தில் கொண்டு தள்ளும்—ஆகையால் இப்பொழுது வேண்டாம்"—என்று எனது இளவல் இராசன் எதிர்ப்புத் தெரிவித்தான்.

(17-ம் பக்கம் பார்க்க)

வரலாறு காட்டும் படிப்பினை

தமிழண்ணல்

நமது தமிழ்நாட்டு வரலாறு, நமக்குக் காட்டும் படிப்பினை என்ன? தன்னல் அதை உணர்ந்துகொள்ள இயலாதவர்களாயினும் சொன்னல் புரிந்துகொள்ளக் கூடாதா?

தமிழைக் காப்பதில் கட்சி வேறுபாடு தேவையில்லை. ஆங்கில நாட்டில் தொழிற்கட்சி மொழி வளர்ச்சிக்கு முற்படுகிறது என்றால், எதிர்க்கட்சிகள் மொழி வீழ்ச்சிக்கென்றே முயலுமா? சிலர் தமிழ்ப் பற்றைக் குறுகிய நோக்கம் என்கின்றனர். கட்சிக்கு அஞ்சியும் ஆதரவாகவும் நடந்துகொள்வதற்காகப் பெற்ற தாய்நாட்டையும் உற்ற தாய் மொழியையும் கைவிடத் துணிவது குறுகிய நோக்கமா? அல்லது இயல்பான தாய் மொழிப் பற்றுக் குறுகிய நோக்கமா?—எண்ணிப் பார்ப்பவருக்கு உண்மை விளங்கும்.

கன்றை நினைந்துருகும் பசுவும், குஞ்சுகளுக்கு இரை தேடும் தாய்ப்பறவையும், நன்றியுடன் காக்கும் நாயும் தம் செயலை 'இவை நல்லவை' எனப் பகுத்துணர்ந்து செய்வதில்லை. பகுத்தறியும் ஆறுவது அறிவும் அவற்றுக்கில்லை. அவை அவற்றின் இயல்புணர்ச்சிகளாகும். தான் பேசும் மொழியின் மீது கொள்ளவேண்டிய பற்றும், இவைபோல விலங்கின நிலையிலேயே இருக்கவேண்டிய ஒருணர்வு; ஐந்தறிவு மட்டும் இருந்தாலே அமையவேண்டிய ஒருணர்வு. விலங்கின நிலைக்கு மேற்பட்ட ஆறுவது அறிவுடைய மனிதருக்கு அவ்வுணர்வு அமையாமை வியப்பேயாகும்.

தன் உணவை இழக்க ஒருவன் ஒப்புவதில்லை. தன் நட்புக்கு ஒரு தீங்குவரின் நலிகின்றான். தன் உறவுக்குப் பங்கம் என்றால் ஓலமிடுகிறான். தான் பழகிய ஊரையோ, வீட்டையோ பிரிய நேரிடும்போதும் மனம் சோர்வுறுகின்றான். சகுந்தலை தன் கணவன் வீட்டுக்குப் புறப்படும்பொழுது தான் வளர்த்த கொடியிடம்கூடப் பிரியா விடைபெற்றுச் செல்கிறாள். கபிலர் தான் வாழ்ந்த பறம்பு மலையைப் பிரிந்து நெடுந்தூரம் சென்ற பிறகும் திரும்பிப் பார்த்துப் பெருமூச்சு விட்டுப் பாடுகிறார். உலகியல் இங்ஙனம் இருக்கத் தமிழராகப் பிறந்தார் சிலர், தாம் பிறக்கும்போதுதொட்டுப் பேசி வரும் தாய்மொழி பால் இயல்பான பற்றுச் சிறிது மின்றிப் போய்விடுகின்றனர் என்பது வியப்பையும் வேதனையையும் தருகிறது.

சுதந்திரத்தைக் காப்பாற்ற-நாட்டு ஒற்றுமையை நிலைக்க வைக்க, நாம் பிறிதொரு மொழியை ஏற்கவேண்டும் என்றால், அதன் ஆட்சிக்கு அடங்க வேண்டும் என்றால் அந்தச் சுதந்திரமே நமக்குத் தேவையில்லை. கண்களை விற்றுச் சித்திரம் பெற்றால் பயன் என்ன? வரலாறு நமக்குக் காட்டும் படிப்பினை, **"தமிழனே! நீ பிறிதொரு மொழியை உன் மொழியைவிட உயர்ந்த மொழியாகஏற்காதே. ஏற்றால் என்றென்றும் நீ அடிமையாகவே கிடப்பாய்,** என்பதுதான்.

ஒரு காலத்தில் தமிழகத்தின் வாழ்வில் காதலும் வீரமும் சிறந்து விளங்கின. இலக்கியத்திலும் அகமும் புறமும் தோன்றி வளர்ந்தன. பழம் பெரும் கிரேக்க நாகரிகமும் இன்பக் களியாட்டத்திலும் வீரப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்த காலம் அது. அன்று, தமிழரும் அக்கிரேக்கராகிய யவனர் தமது 'வினைமாண் நன் கலத்தில்' (கப்பல்) கொண்டு வந்த, 'பூக்கமழ் தேறலை' (மதுவை) 'புனை இழை மகளிர் பொற்கலத்து ஏந்திக் கொடுக்கப் பருகித் தம்மை மறந்து கிடந்தனர். அப்போதுதான் 'ஆட்சி' என்ற முறையிலும் 'அதிகாரம்' என்ற முறையிலும் முயன்று முடியாத வடவர்கள், 'அடைக்கலம்' என்ற முறையில் தமிழகத்தில் பரவி வாழ இடம் பெற்றனர். நாளாக ஆக அவர்களின் செல்வாக்கு வளர்ந்துயர்ந்தது.

தமிழருக்கு உண்மையான-அடிப்படையான சமயப்பற்றும் கடவுளுணர்வும் மெய்யுணர்வும் அமைந்திருப்பதை அறிந்த அவ்வடவர்கள் அச்சமயத்தையே பற்றித் தமிழர் உள்ளத்தைத் தம்மாட்டு வளைப்பாராயினர். காதலும் வீரமும் அளவுக்கு அதிகப்பட்டு, அவலம் தோன்றி மனம் சோர்ந்த நிலையில், தமிழர் இவ்வடவர்களின் சாதிச் சழக்கும் பிரிவுப் பிணக்கும் மிக்க சமயச் சேற்றில் வீழ்ந்தனர். தமிழர்களின் உண்மைச் சமயமும் உருமாறிப் போயது. அவ்வுலக ஆசையைத் தமிழனுக்குக் காட்டி இவ்வுலகை வெறுப்பை ஊட்டித் தம் வாழ்வை நிலைநாட்டிக் கொண்டனர்.

இவ்வாறு ஏதோ ஒரு வகையில் வடமொழிக்குக் கொடுத்த செல்வாக்கு-உயர்வு-"தேவபாடை" என்ற பொய் மதிப்பு, இன்றுவரைக்கும் தமிழைவிட்டு அகற்றமுடியாத பெருஞ்சுமையாக அமைந்துவிட்டது. கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்தவேண்டும் என்று கூக்குரலிட முடிகிறதே தவிர, தமிழ் வழிபாட்டை எவராலும் நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை. தேவாரமும் திருவாசகமும் திவ்வியப் பிரபந்தமும் "தோடுடைய செவியனின்" காதுகளில் தோய வழி ஏற்படவில்லை. தாய்மொழிப் பற்றற்ற பொய்மைச் சமயவாதிகள் தம் வயிற்று வளர்ச்சியோடு நின்றுவிட்டனர்.

தொல்காப்பியரே, 'வட சொற் கிளவி வட எழுத்து ஒரீஇ' எடுத்தாள்க என இலக்கணம் வகுக்கும் அளவுக்குத் தமிழில் அம்மொழியின் செல்வாக்குப் பெருகிற்று. இன்று இவை தமிழ்ச் சொற்களே என்றும், இவை தமிழரது கலை என்றும் ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் முயன்று நிலைநாட்ட வேண்டியனவாகத் தமிழரின் மொழி, கலைகளின் நிலைகள் இருக்கின்றன.

எனவே, வரலாறு நமக்குக் கூறும் படிப்பினை **"நம் நாட்டில் வேறு எந்த மொழியைத் தமிழைவிட மேலான நிலையில் வைத்துப் போற்றினாலும் அந்த மொழியே உயரும், எந்தத் துறையில் அந்த மொழியை வைத்துப் போற்றினாலும் அந்தத் துறையில் தமிழ் தாழும்,"** என்பதே ஆகும்.

அமைச்சர் திரு லால்பகதூர் சாத்திரியார் தமது மசோதா மூலம் இந்தி மொழியை நிலைநாட்டிவிட்டதாகப் பெருமைப் படலாம். ஆனால் இம்மசோதா மூலம் இந்திய ஒருமை சிதைந்து எத்தனை துண்டுகளாகப் போகிறது என்பதை அவர் இருந்து பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

கல்லூரிப் பாடமொழியாகவும் மாநிலங்களிடையே பொது மொழியாகவும் நடுவரசின் ஆட்சி மொழியாகவும், இந்தி வந்துவிடவேண்டும் என்பதும் இந்தி, இந்தியர் இந்தியா என்று மொழி, இன, நாட்டுப் பெயர்கள் அமைந்துவிடவேண்டும் என்பதுமே இன்றைய இந்தி வெறியர்களின் பேராசை.

'இராம இராச்சியம்' அமைக்க வேண்டும் என எழுந்த ஆசையினால், ஒரு 'பாகிஸ்தான் இராச்சியம்' பிறந்தது. இன்று 'இந்தி மொழி" ஆசையினால் எத்தனை இராச்சியங்கள் உருவாகப் போகின்றன என்பது, இந்திய மொழிகளின் எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது.

அந்தப் பெரியார் எங்கே?

இன்று ஐயாவின் குரல் வளை அடைபட்டுப் போனதேன்?

மந்திரியார் நம்மவர் ஆயிற்றே என்று எவ்வளவு காலம் நாம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? அதிலும் கல்வி இலாகா முடிவுகள் வரவர மிக மிகக் கேவலமாக ஆகிக்கொண்டு போகிறது. தோழர் சர். லட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர்கள் எவ்வளவு எடுத்துக் கூறியும் கல்விமந்திரியார் அறிஞர்களைக் கலந்து கொண்டு தீர்மானம் செய்வதில்லை.

அன்றைய பெரியார், 1948-ல் பேசிய பேச்சு.

அட எழவே! அவர் பேசியே புரியவில்லையாம்!

நான் வடநாடு சென்றிருந்த போது டாக்டர் ராஜேந்திர பிரசாத் பேசுகின்ற கூட்டத்திற்குப் போயிருந்தேன். அவர் பேசுகின்ற போது அந்த மக்கள் 'உம்' — என்று உட்கார்ந்திருந்தார்கள். ஏதோ மரியாதைக்காக பேசாது உட்கார்ந்திருக்கிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்தேன். ஆனால், ஜம்பகதூர் என்பவர் வந்து பேசினார். மக்கள் ஆரவாரம் செய்தார்கள். இதற்குப் பிறகு தான் எனக்குத் தெரிந்தது—ராஜேந்திர பிரசாத் பேசிய இந்தியே அந்த இத்திக்காரர்களுக்குப் புரியவில்லை.

—கே. பாலசுப்பிரமணிய ஐயர்.

பிரிவினையைத் தவிர வேறு வழி என்ன?

முரசொலி மாறன் எம்.ஏ

இந்தியில் இலக்கிய வளமில்லை. இந்தியின் எந்தவொரு தனிப்பட்ட வடிவமும் பெரும்பான்மையான மக்களால் பேசப்படவில்லை.

—இவையனைத்தும் இந்திக்காரர்களுக்குத் தெரியாதா? நிச்சயம் தெரியும்.

தெரிந்தும் ஏன் கொண்டு வருகிறார்கள்?

இந்தியின் பல்வேறு வடிவங்களைப் பேசுவோர் எதை நினைத்தாலும் அது இந்திய உபகண்டத்தில் சட்டமாகும்.

உத்தரப்பிரதேசத்தின் சார்பில் பாராளுமன்றத்தில் 86 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

மத்தியப்பிரதேசத்தின் சார்பில் 46 உறுப்பினர்கள்!

பீகாரின் சார்பில் 53 உறுப்பினர்கள்;

பஞ்சாபின் சார்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 22 பேரில் பலர் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்!

ராஜஸ்தானின் 22 பேரிலும், டெல்லி அனுப்பும் ஐவரிலும், இமாச்சலப் பிரதேசத்தின் நால்வரிலும் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பலர்!

507 பேர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் இதுதான் நிலை!

—எனவே இவர்கள் இதர மொழிக்காரர்களை அடிமைப்படுத்தி, ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால் இந்தி ஆட்சிமொழியானால்தான் முடியும்!

நேரு இதை மறுத்து, சிறுபான்மையோருக்கு ஆதவுதரக் கூடாதா?

அப்படி அவர் சொன்னால் பாவம், நேரு பிரதமராக இருக்க முடியாது!

அவரைத் தூக்கி எறிந்துவிடும் சக்தி இந்தி வெறியர்கள் கையில் இருக்கிறது!

இது யூகமல்ல; உண்மை!

திரு கிருஷ்ணமேனனை விலக்கச் சொல்லி காங்கிரஸ் காரியக் கமிட்டியில் தீர்மானம் கொண்டுவந்தார்கள் அல்லவா?

அப்போது நேரு மேனனுக்காக எவ்வளவோ வாதாடிப் பார்த்தார்!

மேனன் எதிர்ப்பாளர்கள் பிடிவாதமாக இருந்ததால், பண்டிதர் வழக்கமான பாணியில், நீங்கள் இதை வற்புறுத்தினால் நான் பதவியிலிருந்து விலகிவிடுவேன் என்று மிரட்டினார்!

“அய்யையோ! வேண்டாம், வேண்டாம். மேனன் எக்கேடு கெட்டாவது போகட்டும்; நீங்கள்தான் எங்களுக்கு வேண்டும்!” — என்று அவர்கள் வழக்கமாகச் சொல்வார்கள் என்றுதான் பண்டிதரும் எதிர்பார்த்தார்!

ஆனால் நடந்தது என்ன?

“நீங்கள் பதவியிலிருந்து விலகவேண்டும் என்பது தவிர்க்கவே முடியாததென்றால் அதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை!” என்று அவர்கள் சாமர்த்தியமாகச் சொல்லிவிட்டார்கள்!

எனவே, இந்திப் பிரச்னையிலும் நேரு இப்படி நடந்து கொண்டவாறுதான் நடக்க முடியும். வேறு வழியில்லை.

இலட்சியத்திற்காகப் பதவியிலிருந்து விலகும் துணிவும் அந்தக் கிழட்டுப் புலிக்குக் கிடையாது!

அதனால்தான் கொடுத்த வாக்கை இல்லை என்று சொல்வது இழிதகைப் பண்பு என்பது தெரிந்தும் நேரு அந்த நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டார்!

ஃ ஃ ஃ

இந்தியால் தமிழ் கெடும்! இந்தியால் நம்மவர் இரண்டாந்தரப் பிரஜைகளாகி விடுவர்!

இந்திக்காரர்களின் ஏகாதிபத்தியம் மேலோங்கிவிடும்!

—இது இங்குள்ள மந்திரிகளுக்குத் தெரியாது என்று நினைக்கிறீர்கள்? நிச்சயம் தெரியும்.

நாளை வரும் பலாப்பழத்தை விட இன்று கிடைக்கும் களாப்பழமே மேல் என்று பழமொழி சொல்லுவார்கள்!

1975-க்குப் பிறகு இவர்களுக்குப் பதவி கிடைக்கிறதோ, இல்லையோ! எனவே பதவி நிலைக்க அவர்கள் மனசாட்சிக்குப் புறம்பாகப் பேசித்தான் ஆகவேண்டும்!

அப்படியானால் முடிவு?

ஒன்று நாம் இந்தியை ஒப்புக்கொண்டு அடிமையாக வாழச் சம்மதிக்க வேண்டும்.

அல்லது எழுச்சிகொண்டு போராட வேண்டும்.

போராடினால் இந்தியைத் திரும்பப் பெறுவார்களா?

சுலபத்தில் இது நடக்குமென்று யாரும் கணிப்பதற்கில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சாமான்யத்தில் அகன்றதா?

இதற்கு முடிவு இரண்டே இரண்டுதான்; ஒன்று நாம் பிரிந்து செல்லவேண்டும்! அல்லது போராட்ட வேகம் அதிகமாகி, “உங்கள் தொல்லை எமக்கு வேண்டாம். நீ தனியாகப் போ” என்று இந்திக்காரர்களே சொல்லும் நிலை உருவாக வேண்டும்.

விடுதலை இயக்கமென்னும் இயந்திரத்தை ஓட்ட மொழிப் பிரச்னைதான் தகுந்த கைப்பிடியாக இருந்திருக்கிறது. உலக வரலாறு சொல்லும் பாடம், இது!

இந்தியும் இப்போது அப்படித்தான் கால தேவதையால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது இந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டு தி. மு. கழகம் மட்டுமே போராடுகிறது!

1975-க்குப் பிறகு அது திராவிட மக்களின் பிரச்னையாகிவிடும்!

பாரதமாதா உயிர்வாழ வேண்டுமென்று அவள் இந்திக்காரர்களுக்குத்தான் நல்ல புத்தி கொடுக்கவேண்டும்!



இன்று தமிழகத்து அரசவையில் வீற்றிருக்கும் தமிழ்த்துரோகி போன்றவர்கள் - தமிழ் மன்னர்கள் அரசு புரிந்த அந்த நாளில் அமைச்சர் பதவியில் இருந்திருப்பார்களேயானால் இத்தமிழ்த் துரோகிகளுக்கு மக்கள் மன்றம் என்ன தண்டனை கொடுத்திருக்கும்?

உங்களால் யூகிக்கமுடியவில்லையென்றால் - தண்டனைக் காட்சியை கடைசிப் பக்கத்தில் பாருங்கள்!

நல்லுறவுப் பாலம்

கே.ஏ. கிருஷ்ணசாமி, எம்.ஏ.

ஆங்கில மொழியின்மீது சில அரசியல்வாதிகள் காரணமில்லாமல் காழ்ப்புக் கொண்டுள்ளனர். பொருந்தா வாதங்களைப் புனைந்துரைத்துக் கொண்டு மக்களை குழப்புகின்ற பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். அவர்களின் சிறு செயல்கள் நமது மக்களின் எதிர்கால வளர்ச்சியினை எந்த அளவு பாதிக்கும் என்பதனை எண்ணிப் பார்க்கும் திறன் துளிகூட அச்சாராருக்குக் கிடையாது.

வடபுலத்தில் வதியும் இந்தி வெறியர்கள் அனைவரும் ஒருமுகத்தோடு மொழியினை எண்ணங்களை வெளிப்படுத்த பயன்படும் கருவி என்று எண்ணமல், அதனை அரசியல் ஆதிபத்யத்தை நிலை நாட்டும் கருவியாக எண்ணிச் செயல்படுகின்றனர். அவர்கள் நமது நலன்களின் பகைவர்கள் அதேபோல ஆங்கிலத்தின் மீது துவேஷம் கொண்டு, அதன் நலன்களை நாம் கிட்டாமல் வம்பு செய்யும் இவர்களும் நமது நலன்களின் பகைவர்களாவர்.

ஆக, தமிழ்க்குலம் இரண்டு வடிவங்களில் தனது பகைவர்களை சந்திக்க வேண்டிய நிலையில் இன்று தள்ளப்பட்டுள்ளது.

ஆங்கிலம்—இந்தியத்துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக செயல்படக் கூடாது என்பதற்கு இந்தி வெறியர்களும், அவர்களுக்கு தாள் படிந்தோரும் கூறும் காரணங்கள் இரண்டு:

1. ஆங்கிலம்— அன்னிய மொழி
2. ஆங்கிலம்—திணிக்கப்பட்ட மொழி.

ஆங்கிலம், வெள்ளையர்களின் தாய் மொழி. அதனை நாம் பொது மொழியாக ஒத்துக் கொள்வது நமது தன்மானத்திற்குக்களங்கமில்லையா? மற்ற நாட்டு மக்கள் நம்மைப்பற்றி தரம்தாழ்ந்து எண்ண மாட்டார்களா? பதினன்கிற்கு மேற்பட்ட மொழிகள் தேசிய மொழிகளாக சட்டத்தில் இடம் பெற்றும், அவைகளைப் புறக்கணித்து, வேற்றுநாட்டு மொழியொன்றினை பொது மொழியாக ஏற்றுக்கொள்வது இழுக்கல்லவா? — இப்படிச் சிலர் வாதிடுகின்றனர்.

ஆங்கிலத்தோடு நாட்டின் தன்மானப் பிரச்சினையினையும் இணைத்துப் பேசுவது அவர்களது அறியாமையினையே வெளிப்படுத்துகின்றது.

ஆங்கில மொழியினைப் பயன்படுத்தும்போது தன்மானத்தைப்பற்றிப் பேசுவோர், மற்ற காரியங்களுக்காக அன்னிய நாட்டினரிடம் பல்வேறு நிலையில் கையேந்தும் காலை, அவர்கள் கூறும் தன் மானம் எங்கே போய் விடுகின்றது?

சுதந்திரம் கண்ட இந்தியா ஆங்கிலத்தை மட்டும் எடுத்துக் கொள்ளவில்லை. தன் நலன் கருதி எவ்வளவோ காரியங்களைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

காமன்வெல்த் நாடுகளில் இந்தியாவும் ஒன்று — மற்ற நாடுகளோடு இந்தியாவும் அங்கம் வகிக்கிறது. இக்கூட்டினல் தன்மானம் பாதிக்கவில்லையா? அந்தக் கூட்டில்சேர சுதந்திர வீரர்கள் மறுத்தா விட்டார்கள். அல்லது அதனல் அநுபவிக்கும் நலன்களைத் துறந்து விட்டார்களா? அன்னிய நாடு அது என்ருல், அவர்களோடு தன்மான 'வீரர்கள் ஏன் ஒட்டி நடமாடவேண்டும்? உள்ளொன்று வைத்துப் புறமொன்று நடக்கும் இழி செயல் அல்லவா இது? உதைத்த கால் வெள்ளையனுடையது என்ருல், பாரத புத்திரர்கள் அதற்கு ஏன் முத்தமிடும் போக்கு.

அன்னிய மொழியினைப் பயன்படுத்துவதுதான் நமது தன்மானத்திற்கு அளவுகோல் என்ருல், அன்னியப் பொருள்கள், கண்டுபிடிப்புகள்—ஆகிய பலவற்றினை இன்று நாம் பயன்படுத்தி வருகின்ருேம். அவைகளையும் நாம் துறந்து, சுதேசிப் பொருள்களோடு மனநிறைவு கொள்வதுதான் நமக்கு அழகு. அதனை நம்மால் செய்ய முடியுமா?

எவ்வளவு வகையான பொருள்களை நாம் அவர்களின் அறிவுத் திறனல் உருவானதைப் பயன்படுத்துகின்ருேம். அவைகளையெல்லாம் இழந்த பின்பு நாகரிகவாழ்விற்கு அடிகோல முடியுமா?

பாராளுமன்ற முறைகளைக் கூட வெள்ளையன் தான் அளித்தான். அதனலேயே அம்முறை நமக்குப் பொருந்தாது என்று வாதிடுவது நல்லதா?

சட்டங்களையும், நீதிமன்ற கோட்பாடுகளையும் அவன் தான் அளித்தான் — அவன் சென்றபோது அவனேடு அவைகளையுமா அனுப்பிவிட்டோம்?

போக்குவரத்துச் சாதனங்களில் எவ்வளவு மாற்றங்கள். கட்டை வண்டியில் சென்றுகொண்டிருந்த நம்மை வானவூர்தியில் பயணம் செய்யும் அளவுக்கு உயர்த்தி விட்டான். அதன் பயன்களை இன்னும் நாம் சுவைத்து வருகின்ருேம். நவீன சாதனங்கள் அனைத்தும் மேற்கிலிருந்து இறக்கப்பட்டவைகள் தான். அவர்களின் தளரா முயற்சியால் உருவாக்கப்பட்ட அறிவுப் பெட்டகங்கள். அவைகள் அனைத்தும் மனிதர்களை முழு மனிதர்களாக மாற்றத் துணைபுரிந்து கொண்டுள்ளது.

இவைகளையெல்லாம் பயன்படுத்தி வாழ்வைச் செழுமையாக்கும் போது 'தன்மானம்' எங்கே ஓடி ஒளிந்து கொள்கின்றது?

ஆங்கில மொழியோடு தன்மானத்தையும் இணைந்து பேசுவது பேதமை. கால ஓட்டத்தின் வேகத்தை உணராத கருத்துக் குருடர்களின் பொய்மை வாதம் தொடர்ந்து கட்டுப்பாடாகச் செய்வதாலேயே பொய் மெய்யாகி விடாது. மொழி வெறி கண்ணை மறைக்க எதையும் உளரலாம் என்ற எண்ணத்தில் பலர் செய்யும் சிறு செயல்கள் மகத்தான உண்மையினை மறைத்து விடாது. முகிலைக் கிழித்து வெளிவரும் முழு மதிபோல உண்மை வெளிவந்தே தீரும்!

∴ ∴ ∴

ஆங்கிலம் பொதுமொழியாக இருக்கக்கூடாது என்பதற்கு இந்தி வெறியாளர்கள் கூறும் மற்ருெரு காரணம் அது வெள்ளையனல் திணிக்கப்பட்ட மொழி என்பதாகும்.

வரலாறு உணர்ந்தோர் ஏற்றுக் கொள்ள முடியாத புனைந்துரை இது.

ஆங்கிலேயனல் திணிக்கப்பட்ட மொழியல்ல ஆங்கிலம்— இந்தியர்களால் அதன் தேவையினை உணர்ந்து, விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டதற்குச் சான்றுகள் கிரம்ப உண்டு.



கடைவீதி மொழியை களத்திலே சந்திப்போம்!

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் லட்சக்கணக்கான சிறுவர், சிறுமியர்; இளைஞர்கள், இளம் பெண்கள் ஆகியோருக்கு எதிராகச் சதி நடக்கிறது. தென்னட்டின் அளவு, தென்னக மக்களின் எண்ணிக்கை, தென்னகத்தின் முக்கியத்துவம் ஆகிய இவற்றை பெரும்பான்மை வாக்குபலத்தால் உதாசீனப்படுத்தவோ, குறைக்கவோ முடியாது. தவருன பாதையில் முரட்டுப் பிடிவாதத்தையும், பலத்தையும் இந்தித் திணிப்பின்மூலம் பிரயோகித்தால் நாட்டில் பெரும் குழப்பம்தான் ஏற்படும்.

ஆங்கிலத்தை ஒழித்து இந்தியைப் பூரணமாக ஆட்சிமொழி ஆக்குவதற்கு கால அவகாசம் கொடுத்திருப்பதைக் கண்டு நாம் ஏமாறக்கூடாது; இது நீளமாக விடப்பட்டுள்ள கயிருக இருக்கலாம். ஆனல் கயிற்றின் முனையில் சுருக்கு இருக்கிறது. இந்தச் சுருக்கில் மாட்டிக்கொண்டு தூக்கில் தொங்க நாம் தயாராயில்லை.

இந்தியாவெங்கும் படிக்கப்படும் புத்தகங்களில் எந்த மொழிப் புத்தகங்கள் அதிகம் என்று பாருங்கள். எந்த மொழிப் பத்திரிகை அதிகமாக இந்தியா முழுவதும் படிக்கப்படுகிறது என்று பாருங்கள். கடைகளில் பெயர்ப் பலகைகளும், போக்குவரத்து அறிவிப்பு எச்சரிக்கைகளும், எந்த மொழியில் அதிகமாக எழுதப்பட்டு இருக்கின்றன என்று பாருங்கள். மொழி விவகாரமாக நடந்த விவாதங்களையே எடுத்துக்கொள்ளுங்கள்—எந்த மொழியில் அவை நடந்தன? இந்தியாவெங்கும் ஆங்கிலமே புழக்கத்திலுள்ளது. இந்தியல்ல என்பதை இவையெல்லாம் காட்டும். இந்த உண்மையை மறைக்கவோ, திரிக்கவோ முடியாது. அதேபோன்று-இந்தி, இந்தியாவின் 'கடைவீதி மொழி' என்பதையும் மறைக்க முடியாது.

இராசாராம் மோகன்ராய் அவர்கள்தான் முதன்முதல் ஆங்கிலக் கல்வி இந்திய மண்ணில் இடம் பெற வேண்டும் என்பதற்காக சகல முயற்சிகளும் செய்தவர். அவருக்கு உறுதுணையாக அமைந்தவர் மெக்காலே. ஆங்கிலக் கல்வியினை இந்தியர்களுக்கு அளிக்கக் கூடாது என்று அந்த நாட்களிலேயே பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அபிப்பிராய பேதம் இருந்தது. இராசாராம் மோகன்ராய் எடுத்த அழுத்தமான நடிவடிக்கைகள் ஆங்கிலத்தை இந்தியர்களுக்கு அளித்தது.

டாக்டர் பட்டாபி சீத்தாராமையா அவர்கள் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த தேசீயத் தலைவர்களில் ஒருவர். அவர் ஆற்றிய பணிகளில் தலையாயது 'காங்கிரஸ் வரலாறு' என்ற ஏடு தீட்டியது. அந்த ஏட்டில் ஆங்கிலம் வெள்ளையனால் திணிக்கப்படவில்லை. இந்தியர்களால் தாமாக விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்ற உண்மை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

விடுதலை உணர்வு அரும்பு நிலையிலிருந்த தருணம்—அப்போதெல்லாம் தேசீயப் போராட்டக் காரியங்களுக்கு ஆங்கில மொழியேதான் பயன் படுத்தப்பட்டது. அப்போதெல்லாம் அச்செயல்களுக்கு தவறான வியாக்யானங்கள் கூறப்படவில்லை.

ஹியூம் என்ற வெள்ளையனால் துவக்கப்பட்ட இயக்கம், 'காங்கிரஸ்' (Congress) என்ற ஆங்கிலச் சொல்லாலேதான் இன்று வரை வழங்கப்பட்டு வருகின்றது.

தேசீய வீரர்கள் எனப்பட்டோர் பலர் இங்கிலாந்து சென்று, ஆங்கிலத்தின் வாயிலாக பல உண்மைகளை உணர்ந்தபின்புதான் சிம்மக் குரல் கிளப்பினர்.

மராட்டிய மண்டலத்தில் தேசீயக்கனலாய் விளங்கிய தீரர் பாலகங்காதர திலகர்—அவர் அந்நாளில் 'மராத்தா' (Mahratta) என்ற ஆங்கில ஏடு நடாத்தி, அதன் வழி விடுதலை வேட்கையினை உண்டாக்கினர்.

இப்படி, காங்கிரஸ் இயக்கத்திற்கும் ஆங்கில மொழிக்கும் கடந்த காலத்தில் நிரம்ப தொடர்புகள் இருந்ததையும் மறந்துவிட்டு, புனிதமான முயற்சிக்கு நோக்கங்கள் கற்பிக்கும் இழிசெயலில் இன்றைய தினம் இந்தி வெறியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆங்கிலம் — ஆங்கிலேயர்களுக்கு மட்டும் உரிய மொழி என்ற நிலை மாறி, உலகம் முழுதும் பரவலாக எல்லா மக்களாலும் பேசும் மொழி என்ற நிலையினை அடைந்துவிட்டது.

ஆங்கிலம்—வளமான மொழி என்பதிலோ, ஆழப் பதிந்த மொழி என்பதிலோ, வளர்ச்சியுற்ற செம்மை மொழி என்பதிலோ இரண்டுவகைக் கருத்துக்கள் தெளிவுபெற்றோரிடை இன்று கிடையாது.

ஆங்கிலத்தின் சிறப்புகளை உணர்ந்து தெளிந்த பின்பும், புறக்கணிப்பது தற்கொலை முயற்சிக்கு ஈடானதாகும்.

ஆங்கிலம்—அது ஓர் சாளரம் அதன் வழிதான் நாம் புது உலகத்தின் மாற்றங்களை பளிச்செனக் காண முடியும். அச் சாளரத்தை மூடுவது நமது எதிர்காலத்தை பாழ்படுத்தும் செயல் அல்லவா?

ஆங்கில மொழி—நல்லுறவுப் பாலம்! மேற்கிற்கும் கிழக்கிற்கும் தொடர்பு கொள்ள பயன்படும் இழை—அது துண்டிக்கப் பட்டால் ஏற்படும் கேடுகள் எழுத முடியாதவைகள்!

புத்தம் புதுக் கலைகள் நித்தம் மேற்கினில் வளர்கின்றது. அத்தனையும் நம் முன் கொண்டு வரும் சாதனம் ஆங்கிலம்.

ஆங்கிலம் பொதுமொழியாக விளங்குவதால் இந்தி பேசாத மக்களுக்கு ஏற்படவிருக்கும் பலன்களை இனியும் சொல்லித் தான் தெரியவேண்டுவதில்லை.

இந்தி—தகுதியற்ற மொழி என்பதனை உணர்ந்தபின்பும் கட்டாயமாகத் திணிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்றால், அது ஏகாதிபத்ய நோக்கே தவிர வேறல்ல.

ஆங்கிலம்-அன்னிய மொழி-திணிக்கப்பட்ட மொழி என்று கூறுவதெல்லாம் நம்மை ஏமாற்றுகின்ற பொய்மை வாதங்கள்.

நமது எதிரி வஞ்சகன்—தந்திரக்காரன்—அவனது சாகசங்களின் வடிவங்களைப் புரிந்து கொண்டு அதன் வழி நமது போர் முறைகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும். மொழிக்கும் தன்மானத்திற்கும் பிணக்கினை ஏற்படுத்தி, அவனது வஞ்சகச் செயல்களுக்கு திரையிட முயலுகிறான். அதனை அடையாளம் கண்டு, இந்தித் திணிப்பினை எதிர்த்து, நலன் பல சேர்க்கும் ஆங்கிலத்தை ஆதரிப்பது நமது தலையாய கடமை!

'அட்லி'யின் எச்சரிக்கை!

பாராளுமன்ற ஜனநாயகமான நம்முடைய பாரம்பரியத்தை பெருமளவில் இந்தியா ஏற்றுக்கொண்டபோதிலும் இது சிறுபான்மையுள்ள படித்தறிந்த மக்களிடையேதான் பலன் தருகிறது. சர்வாதிகாரம் தலையெடுக்கும் வாய்ப்பு எப்போதும் இருக்கிறது. அப்போது மொழி வேறுபாடுகள் காரணமாக இந்தியா பல கூறுகளாகப் பிரிந்துபோவது சாத்தியமே. இதில் குறிப்பிட வேண்டியது இந்தி பேசாத தென்னாட்டு மக்களை.

இங்கிலாந்தின்
முன்னாள் பிரதமர்
அட்லி.

உன் படை வெல்லும் தயங்காதே!

துறையூர் ந. அலி

புலிநிகர்த் தமிழர் அனைவரும் ஒன்றாய்ப்
போர்க்கொடி ஏந்திக் கிளம்பிவிட்டார்
எலியென இனியும் வாழ்ந்திட வேண்டாம்
எரிமலை யெனவே புறப்படுவீர்!
வலிமிகு வீரர் மலிந்தஇந் நாட்டில்
வஞ்சகம் ஆட்சி செலுத்திடுமோ?
நலிவுகள் நீங்கி நன்மைகள் ஓங்க
நல்வழி வகுப்போம் நாட்டினரே!

வட திசை யாளர் வஞ்சக மாக
வடமொழி இந்தியைப் புகுத்திவிட்டார்
நடைப்பிண மாக நாமினி வாழ்ந்தால்
நம்தமிழ்ப் பெருமை குலைந்துவிடும்
கடல்மடை திறந்த பெரும்புனல் போல
கடும்பகை மீது பாய்ந்திடுவீர்
தடைகளை உடைத்துத் தமிழ்ப்புகழ் தன்னைத்
தரணியில் இன்றே நிறுவிடுவீர்!

இந்நிலை மாற்ற செந்தமிழ் மறவா!
எழுந்திடுவாய்துயில் களைந்திடுவாய்
நன்னிலை எய்தும் நாள்வரை இனிநீ
நலிவடை யாமல் போரிடுவாய்
நின்திறம் இழந்து நின்புகழ் மறந்து
நீர்மிசைப் படியும் குமிழியைப்போல்
தென்னவர் நாட்டில் தேய்ந்திட வேண்டாம்
தீமழை தனையே சொரிந்திடுவாய்!

ஒருநொடிச் சோம்பல் இனிவரும் உன்றன்
ஒப்புயர்வற்ற குலத்தினையே
சிறுமையில் ஆழ்த்தும் அடிமையில் புகுத்தும்
சிந்தனை செய்வாய் திராவிடனே!
மருவற வாழ்ந்த தமிழ்மொழி இன்று
வடவரின் மொழியால் சிதைந்திடவா?
செருக்களம் காணு பரம்பரையா நாம்?
சினந்தெழுந்துடனே களம் அமைப்போம்!

இறப்பது திண்ணம் மறப்பதற் கில்லை
இதுவரை உலகில் நிலைத்தவர் யார்?
இறப்பதில் குறிக்கோள் இருந்திட வேண்டும்
எள்ளளவும் இதில் ஐயமில்லை
மறக்குலத் தோன்றல் திராவிடர் என்ற
மாண்பினை உலகிற் குணர்த்திடவே
உறையினில் தூங்கும் வாளினை ஏந்தி
ஒருணர்வுடனே விரைந்திடுவீர்!

விடுதலை முரசு முழங்குக வென்றே
வீறுடன் எழுந்து நடந்திடுவீர்
கெடுதலைப் புரியும் பகைவரின் திரையைக்
கிழித்தெறிந்துண்மை விளக்கிடுவீர்
அடிமையில் மோகம் கொண்டது போதும்
அடல்தமிழ் மறவா! இக்கணமே
உடனெழுந் தோடு பகையினைச் சாடு
உன்படை வெல்லும் தயங்காதே!

வாழ்க! வளர்க!

✻

'தென்னகத் தலைவன்' மதுரை விற்பனையாளர் எஸ். என். பிச்சை அவர்கள் 2-6-63 அன்று ஒரு ஆண் மகவுக்குத் தந்தை ஆனார்கள் என்ற செய்தி கேட்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

செல்வன் வாழ்க! வளர்க என வாழ்த்துகிறோம்.

ஆ-ர்.

கோர தாண்டவம்

க. ராஜாராம் பி.ஏ.

நாடெங்கிலும், சமீபத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழி மசோதா பற்றியே பெரும் பரபரப்புக் காணப் படுகின்றது. இந்தித் திணிப்பை எவ்வளவு விரைவில் நாடெங்கிலும் திணிக்க முடியுமோ அவ்வளவு வேகமாக நடவடிக்கைகள் நாள்தோறும் எடுக்கப்பட்ட வண்ணம் உள்ளது.

மொழி வெறியின் உச்சக் கட்டத்தை அகில இந்திய பாராளுமன்றம் கண்டு களித்தது' அந்தக் கோரதாண்டவத்தைக் காணும் வாய்ப்பை நாங்களும் பெற்றோம். அந்தத் தாண்டவத்தைக் காணாதவர்கள். மிக்கப் பொருமையாக உபதேசம் செய்து கொண்டு இருக்கும் காட்சியையும் நான் கண்டுகொண்டு வருகிறேன்.

எப்படி இந்த மதமதப்பு தமிழகத்திற்கு வந்தது என்பதை எண்ணும்போது, மனம் குமுறுகிறது. மத மதப்புக்குப் புதுப் புது விளக்கங்கள் தரப்படுகின்றன. தத்துவார்த்தங்களை எங்கெங்கிருந்தோ தேடிப் பிடிக்கிற அவல நிலையைக் காணும்போது மோசமான வழக்கை எடுத்துக் கொண்டு வாதாடும் பெரிய வழக்கறிஞர்கள், வழக்கு மன்றத்தில் நிற்கும் பரிதாபக் காட்சியைப் பெரிய தலைவர்களிடம் இன்றைய தினம் தமிழகம் கண்டு கொண்டிருக்கிறது. இந்தித் திணிப்பு அபாயம் வந்து விட்டது என்கிறகேள்வியும்' இதோ நமது முதலமைச்சர் கனம் காமராசர் உறுதி அளித்து விட்டார் என்கிற திருப்தியும் எப்படித்தான் இங்குள்ளவர்களிடம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறதோ அது எனக்குப் புரியவில்லை.

பாராளுமன்றத்தில் வாதாடிய, திரு மனோகரன் அவர்களிலிருந்து கனம் லால்பகதூரைக் கைகூப்பித் தொழுது பேசிய திருமதி யசோதா ரெட்டி அம்மையார் வரை, மொழி மசோதாவில் பண்டிதரின் வாக்குறுதி சேர்க்கப்படவில்லை என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறிய பிறகும், போர்க்குரல் கொடுக்க வேண்டியவர்கள், ஆராய்ச்சியாளர்களாக மாறியுள்ள விந்தையைக் கண்டு நான் வருந்துகிறேன்.

பாராளுமன்றத்தில் மொழிப் பிரச்சினை வருவதற்கு பல நாட்களுக்கு முன்பே, பிரச்சினை சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. அரசியல் நிர்ணய சபையை நடாத்திய நடுமைய மன்றத்தில் 'நானும், நண்பர் கந்தப்பன் அவர்களும், அஸ்ஸாம் மாநிலத்தைச் சார்ந்த திரு. G. G. சுவெல் அவர்களும் இரண்டு மூன்று இந்தி மாநிலத்தைச் சேர்ந்தவர்களுடன் மொழிப்பிரச்சினை பற்றி விவாதித்தோம்.

இந்தி மொழிதானே தேசிய மொழி? அதை ஏன் கற்க மறுக்கிறீர்கள்? என்று கேட்டார்.

எந்த மொழியையும் நாங்கள் கற்கமறுக்கவில்லை. ஆனால் ஆங்கிலம் எப்படி எங்களுக்கு அன்னிய மொழியோ அதே போல் எங்களுக்கு இந்தியும் அன்னியமொழிதான் என்றோம்; அவர் திகைத்தார். இந்திஎப்படி அன்னிய மொழியாகும் என்று வாதிட்டார். அதன்பிறகு இந்தியில் என்ன இருக்கிறது? என்று கேட்டோம். அவருக்குச் சற்று கோபம் வந்தது. தென்னிந்தியர்கள் பொதுவாக இந்தியை கற்க மறுக்கிறார்கள். உதாரணமாக கடந்த பத்து வருடங்களாக திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் உப ஜனாதிபதியாக 'இருக்கிறார். அவருக்கு இந்தி கற்கவேண்டும். அதில் பேசவேண்டும் என்று ஆர்வம் வரவே யில்லை என்று குற்றம் சாட்டினார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பெரிய பத்திரிக்கையின் நிருபர், "இவர்களிடமெல்லாம் விவாதிப்பதில் எந்தப் பயனுமில்லை. நீங்கள் சொல்லுகிற பிரிவினையைத் தவிர வேறு பரிகாரமில்லை" என்று கூறினார். அதுவரையில் விவாதித்துக்கொண்டிருந்த வடவர், உடனே கையெடுத்துக்கும்பிட்டுவிட்டு. இந்தியைத் கற்றுக்கொள்ளுங்கள், அல்லது விட்டு விடுங்கள் "தயவு செய்து நாட்டை மட்டும் பிரித்து விடாதீர்கள்" என்றார்.

இந்த விவாதத்தை பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். விவாதம் நடத்தியவர் காங்கிரஸ்காரர்.

மொழி ஆதிக்கம் ஏற்பட வேண்டுமானால். முதலில் பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து மக்களைப் பயமுறுத்திய பிறகுதான் இயலும் என்பதை மத்திய அரசு நன்கு உணர்ந்துள்ளது 'என்பதைத் தான் மேலே நான் விவரித்த வாதம் குறிப்பிடுவதை உணர வேண்டுகிறேன்.

எவ்வளவு உயர்ந்த மேதையானாலும், தனது தாய்மொழியை அவர் கட்டாயம் கற்றே தீரவேண்டும் என்பதில் எந்த வடநாட்டுக்காரரும் சளைத்தவர்களல்ல. தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகூட, வெறும் மொழி மசோதாவில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை என்று என்னால் எண்ண இயலவில்லை. இந்தியத் துணைக் கண்டத்தில்உள்ள சிறுபான்மை மாகாணத்தவர்கள் எந்தவிதமான இலக்கியமும், இலக்கணமும் மற்ற மொழியை மற்ற மக்கள் அனைவரின் மீதும் திணிக்க நடத்தும் பெரிய அரசியல் சூழ்ச்சியேயாகும். தாங்கள்தான் இந்த நாட்டை ஆளப்பிறந்தவர்கள் என்ற எண்ணம் இந்திமொழி மக்களிடையே மண்டிக் கிடப்பதைக் காணலாம். அரசியலின் ஆட்சிப் பீடத்தை மொழியின் மூலம் நிரந்தரமாகக் கைப்பற்ற நடைபெறும் போராட்டமே, இன்றைய ஆட்சிமொழி மசோதாவாகும். அறுபதுக்கு மேற்பட்ட சதவிகிதத்தினரை இந்தி மொழி மூலம் நிரந்தர அடிமைகளாக ஆக்கும் பணியில் இந்தியப் போரசு கங்கணம் கட்டிக் கொண்டு கோர தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது.

இதைக் கண்டு ரசிக்கும் சிறந்த ரசிகர்களாக கனம் காமராசரும், கனம் சுப்பிரமண்யமும் இருப்பது கண்டு பெரும் வேதனை ஏற்படுகின்றது. பிரிந்து போகின்றவர்கள் மொழிபற்றி அக்கரைப் படுவானேன்! என்று கனம் சுப்பிரமணியம் அவர்கள் எங்கோ பேசியதாகப் பத்திரிக்கையில் படித்தேன். இவர் அரசியல் நிர்ணய சபையில்

(12-ம் பக்கம் பார்க்க)

காந்தியிடம் 'சபாஷ்' பெற இந்திப் பள்ளிக்கூடம் ஆரம்பித்தவர் பெரியார்!

ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று நாம் சொல்லும்போது, ஆங்கிலத்துக்கு வெஞ்சாமரம் வீசுவதாக தெளிவில்லாத சிலர் பிதற்றித் திரிகின்றனர். ஆங்கிலம் ஆட்சிமொழியாயிருந்தால் அது யாருக்கும் சொந்தமாகிவிடாது அதை ஏவலுக்கு வைக்கிறோமென்று பொருள். ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்யவில்லை. ஆங்கிலோ—இந்தியர்கள் சிறுபான்மையினர் எனவே அவர்கள் மொழியை வைத்து ஆதிக்கம் செலுத்திவிட முடியாது. மூன்று பேருக்கிடையே தொடர்பு ஏற்படுத்த ஆங்கிலம் தொடர்பு மொழியாகிறது. இந்தி அப்படி அல்ல. தமிழை விட உயர்ந்ததாகக் கருதப்படுவதல்ல ஆங்கிலம். 26-ல் காந்தி பார்த்துத் தட்டிக்கொடுக்க வேண்டுமெனபதற்காக இந்திப் பள்ளிக்கூடம் ஆரம்பித்தவர்தான் பெரியார். திரு வி. க. அதை எதிர்த்தார். இந்தி ஆட்சி மொழியானால் தமிழருக்கு என்றும் குறைதான் என்பதை ராஜகோபாலாச்சாரி கூட உணர்ந்துவிட்டார்.

65-ல் ஆட்சிமொழி இந்தி என்று சட்டம் நிறைவேற்றிவிட்டு 63-64லிலேயே இந்தியைத் திணிக்கின்றனர். இது அக்கிரமம். இதையெல்லாம் எதிர்க்காமல் இந்த 9 அமைச்சர்களும் தி. மு. க.வைத் திட்டித் தீர்ப்பதற்குத்தானா இருக்கிறார்கள்?

கை கட்டி நிற்குமோ கழகம்

தோழன்

எழுதுகிறார்.

"இந்திய வானம் நிர்மலமாகத் தோன்றுகிறதோ என்னவோ! மனிதன் கையளவுக்கு மேகத்திட்டு தோன்றினாலும், அது படிப்படியாகப் பெரிதாகி இடியிடித்து மழையடித்து நம்மை மூழ்கடித்து விடக்கூடும்."

ஆதிக்க உணர்வை எல்லா முனைகளிலும் எதிர்த்தொழிக்க உறுதிபூண்டு நின்ற இந்திய துணைக்கண்டத்து மக்களை, அடக்கி ஒடுக்கி "அமைதியில்" தூங்கவைக்க புறப்பட்டு வந்த கவர்னல் ஜெனரல் காலிங் பிரபு, இப்படி முணுமுணுத்துக்கொண்டே, 1856-ல் இந்திய மண்ணில் வந்திறங்கினான். அடுத்த ஆண்டு-1857-ல் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் இவன் யூகத்தை மெய்ப்பித்துவிட்டது. சிப்பாய் கலகத்தை "மாபெரும் சுதந்திரப் போராட்டம்" என்று சொல்வதில் தற்போது காட்டப்படும் கிருக்குத்தனமான ஆர்வமும் நம்பிக்கையும், அது தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்த ஆரம்பக் காரணங்களை நினைத்துப் பார்க்க உதவி செய்யக் காணோம். கலகத்திற்குக் காரணங்கள் எவை என்பதைப்பற்றிப் பலர் பலவிதமாக முழக்கித் தீர்த்து விட்டார்கள். "சரித்திரத்திலேயே இடம்பெற லாயக்கற்ற நிலப்பிரபுத்துவத்தால் அது துவங்கப் பெற்றதாக" நேரு சொல்கிறார். "நீறுபூத்த நெருப்பாக இருந்த இந்தியப் பாரம்பரியச் சுதந்திர உணர்வு கொழுந்து விட்டெரிந்து கோலாகலத் திருக்காட்சி"யாக சாவர்க்கர் வருணிக்கிறார். எது எப்படி இருப்பினும், யார் எதைச் சொன்னாலும், கலகத்திற்கு அடிப்படையான ஒரு காரணத்தை மட்டும் யாரும் மறுக்கவில்லை.

அதிகாரத்தைத் தங்கள் கையில் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு ஆதிக்கம் புரிந்து வந்த ஆங்கிலேயர்கள், மக்களின் உணர்வுகளை—பண்பாட்டின் ஆழத்தை—பழக்க வழக்கத்தின் மேம்பாடுகளை—மதிக்கவில்லை. பொதுவாக மக்கள்—குறிப்பாக முதலில் சிப்பாய்கள் — கிருஸ்தவர்களாக ஆகும்படி மறைமுகமாகவும் வஞ்சகமாகவும் நெருக்கப்பட்டார்கள். இப்போது, இந்தி படிக்க வேண்டுமென்பது அலுவலக நேரத்திலேயே ஒவ்வொரு ஊழியரும்கடைப்பிடிக்க வேண்டிய கண்டிப்பான விதிமுறை என்பதைப் போல, இராணுவ கவாத்து மைதானத்திலேயே மதமாற்ற போதனை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது. காலை இறுக்கிக் கழுத்தைச் சுருக்கும் லம்பாடிக் கால் சட்டையும் "ஷேர்வானி"யும் அணிந்துகொண்டு தங்களுக்குள்ள தனித்தன்மையை இழந்து விடும்படி, இந்தி பேசாத பகுதி மக்கள் இப்போது உபதேசிக்கப்படுவதைப் போல, பசு—பன்றிகளின் கொழுப்புத்தடவிய தோட்டாக்களை உபயோகித்துத் தங்கள் மதபண்பாட்டுணர்வுகளைபோக்கிக்கொள்ளுமாறு அன்றைய சிப்பாய்கள் வற்புறுத்தப்பட்டார்கள். இத்தனையும், நாட்டின் ஒருமைப்பாட்டின் பேரால், ஒரே மொழியின் பேரால், ஒரே மதத்தின் பேரால், அதிகாரச் சட்டங்களுக்கு மக்கள் மனமொப்பி அடங்கி நடக்க வேண்டும் என்ற போதனையின் பேரால் ஆங்கிலேயே வெறியர்களால் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் செய்வதை சொல்வதை பழுதென நினைப்பதுவே குற்றமாக அப்போதைய அதிகார வர்க்கம் கருதிற்று. இந்த நிலைமையை, கனவான் நேரு அவர்கள், தனக்கு கொள்ளை லாபம் கொடுப்பதற்காகவே எழுதப்பட்ட "இந்தியாவின் கண்டுபிடிப்பு" என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார். "அதிகாரம் மனிதனைக் கெடுக்கிறது; மொத்தமான அதிகாரம் முழுமையாகக் கெடுக்கிறது. ஆங்கிலேய வைஸ்ராய் துரையைப் போல, இந்தப் பரந்த உலகத்திலேயே அதிகமான மக்களை ஆட்டிப்படைக்கும் முழுமையான அதிகாரம் பெற்றவர்கள் இல்லை. அமெரிக்க ஜனாதிபதியோ இங்கிலாந்துப் பிரதமரோ மேற்கொள்ளக் கூடாதவற்றையும் மிகச் சாதாரணமாகச் சொல்வார். இவருக்கு உதாரணமாக யாராவது இருப்பார்களானால், அது இட்லரைத்தான் சொல்ல முடியும். வைஸ்ராய் மட்டுமல்ல, அவருடைய நிர்வாக சபையில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள், கவர்னர்கள், சாதாரண இலாகாவில் அற்ப அதிகாரம் படைத்த செயலாளர்கள் வரை இப்படித்தான் நடந்துகொள்வார்கள். அதிகாரமும் மகத்துவமும் அங்கு கொலுவீற்றிருக்கும் காரணத்தால், எவர் எப்படி கருதினாலும், எட்டிப்பிடிக்க முடியாது உன்னதமான உயத்திலிருந்த அவர்கள் சொல்வதையும் செய்வதையும் அப்பழுக்குச் சொல்லாமல் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

"இந்தியாவின் கண்டுபிடிப்பு" ஆசிரியர் குறிப்பிட்டுள்ள இந்த வாசகங்களை, இப்போது எடுத்துக் காட்டுவதின் மூலம், லூயியைக் கொடுங்கோலனாக ஜார் மன்னன் கேலி பேசினான் என்றோ, பழங்கால எகிப்தியப் பரோராக்கள் தங்களைப் புதைக்கப் பர்மிட்டுகளைத் தாங்களே மேற்பார்வையிட்டு கலையழகுடன் கட்டிமுடித்துக் கொண்டார்கள் என்பதையோ உதாரணமாகக் காட்ட விரும்பவில்லை. ஆனால், 1857-ல் "சிப்பாய்க் கலகம்" நேர்ந்த சூழ்நிலைக்கும், இந்தியைப் பலவந்தமாக "ஏக இந்திய ஒற்றுமையின்" பேரால் திணித்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பவனி வரும் மொழிகளை—உலகத்து நாகரிகத்தின் ஊற்றுக் கால்களை அடைத்து அழிக்க முயலும் இன்றைய நேரு அவர்கள் ஆட்சியின் போக்குக்கும் வேறுபாடு இல்லை என்பது மட்டும் உண்மை.

(18-ம் பக்கம் பார்க்க)

கோபத்தைக் கிளறுதீர்!

தமிழ்ப்பித்தன்

முனிவர்க்குச் சொன்னதொரு வாக்கைக் காக்க
முழுமனதாய்த் தொண்டாற்றும் எண்ணம் சேர
கனி என்னும் மனையாளை விற்றான்; நாட்டின்
கண்ணென்னும் மைந்தனையும் விற்றான்; பின்னும்
நனிதுயரம் தானடைந்து நோகும் போதில்
நலமாகத் தனை விற்றுக் கொண்டான்; வாழ்வில்
பிணிபலவும் சூழ்ந்துவந்து தாக்கும் போதும்
பெருவேந்தன் அரிச்சந்திரன் மெய்யே சொன்னான்!

பொய்யுரைக்க வாய்ப்புண்டு; ஆனால் நல்ல
பொறுப்புமிகு மன்னவன் பொய்யைச் சொன்னால்
உய்யும் வழி இல்லையெனும் உண்மை தேர்ந்தான்,
உலகினுக்கே வழிகாட்டி ஆனான்; அந்த
மெய்மன்னன் வரலாற்றைக் கற்றே வாழ்வில்
மேன்மையெல்லாம் தாமடைந்தார் அண்ணல்
காந்தி!

மெய்யான அவர் சீடர் ஜவகர் நேரு
மேலான குருமொழியை மறந்தார் ஐயோ!

முன்சொன்ன உறுதியினைப் பின்னும் சொல்ல
முடியவில்லை நேருவினால்; வெட்கம்! வெட்கம்!
என்சொன்னோம் ஏதுரைத்தோம் என்றே மீண்டும்
எண்ணிடவோ துணிவில்லை, ஆனால் அந்தோ
மின்வீச்சுப் புகழுடையார் மேன்மை கொஞ்சும்
மேருமலை தனை நிகர்வார் என்றே செப்பி
மென்மேலும் புகழ்நின்றார் மாந்தர்; ஆனால்
மேருமலை நேருமகன் பேசக்காணோம்!

மனிதரெனில் வாய் திறந்து பேசக் கூடும்;
மலையெனவே கூறுங்கால் பேசல் ஏது?
புனிதரென நாம் நினைத்துக் கொண்டால் அந்தப்
'புண்ணியவான்' என்செய்வார், ஐயோ பாவம்!
இனி எவரும் நமை ஏய்க்க முடியா வண்ணம்
இதயத்தை இரும்பாக்கிக் கொள்ளல் வேண்டும்!
கனிவுமிகும் நெஞ்சமதைக் கழற்றி வீசி
காய்கறியாய் நறுக்கிடல்தான் நேர்மைச் செய்கை!

உறுதிமொழி சொல்லிவிட்டு அதனைப் பின்னர்
உமியெனவே கருதிவரும் பேர்கள் இந்தப்
பரிதிவரு புவியரங்கில் பாங்காய்ச் சுற்றி
பலபேர்கள் தொழுதேத்த வாழ்கின் றாரே!
இறுதிமொழி நாமவர்க்குச் சொல்லக் கூடும்
எந்தமிழர் கோபத்தைக் கிளறல் வேண்டாம்!
அறுதியிட்டுக் கூறுகிறோம் ஐயா எங்கள்
ஆற்றலினை மறந்துவிட்டீர் துன்பங்கொள்வீர்!

ஆட்சிமொழி இந்தி என்று சட்டம்போட்ட
ஆதிக்க புரியினரை நோக்கிச் சொல்வோம்:
மாட்சிமையே கொண்டவர்தான் தென்னர் மக்கள்
மறந்திட்டால் உம்வாழ்வு தூளே ஆகும்!
மீட்சியிலை எமக்கென்ற எண்ணத் தாலே
வேதனையைத் தருகின்றீர்; தென்னர் சேனை
காட்சிதரத் தொடங்கிவிடின் உமது ஆட்சி
காதவழி ஓடிவிடும்! நினைவிற் கொள்வீர்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பு உறுப்பினராக இருந்தவர்· இவர் பிறந்த மாவட்டத்திலேயே தான் இராமலிங்கசெட்டியாரும் பிறந்தார். அவரும் காங்கிரசுக்காரர் சிறந்த கூட்டுறவாளர். அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்தவர். அவர் அரசியல் நிர்ணய சபையில் அமர்ந்திருக்கும் போது யாராவது இந்தியில் பேச ஆரம்பித்தால் திடீரென்று எழுவாராம், வேகமாக வெளியே நடந்து வந்து விடுவாராம். வேலையாள் வந்து இந்திப் பேச்சு முடிந்துவிட்டது என்ற பிறகுதான் உள்ளே செல்வாராம். யாராவது கேட்டால் என்னவோ புரியாத மொழியில் அருவருப்பாக உளறுகிறார். அதை நான் ஏன் கேட்கவேண்டும் என்று கூறுவாராம். இதை அப்போது நிர்ணயசபையில் இருந்த உறுப்பினர் ஒருவர் என்னிடத்தில் கூறினர்.

காங்கிரசுக்காரரான திரு· இராமலிங்கச் செட்டியாருக்கே "இந்தி மொழி" ஆட்சிமொழி யாவதற்கு முன்பே பிடிக்கவில்லை என்பதைக்காலப்போக்கால் கனமாகிவிட்ட அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார் என்றே நம்புகிறேன். அவர் உள்ளத்தில் பிரிவினை எண்ணம் கிடையாது. ஆனால் தமிழ் உணர்ச்சி மண்டிக் கிடந்தது. நாட்டு மானம் காக்கும் எண்ணம் இருந்தது. வீரம் பொங்கி வழிந்தது. வெறுப்பை வெளிக்காட்டும் உள்ள உறுதி இருந்தது. அதே மாவட்டத்தில் பிறந்து எல்லாவற்றையும் இழந்து நிற்கும் கனம் அமைச்சர், நாட்டுக்கு வரும் பேராபத்துக் கண்டு நடுங்கி, அதை நீக்கும் விதம் பற்றி ஆராயாமல் பிரிவினை பேசுவோருக்கு மொழிப் பிரச்சினை ஏன்? என்பது பெரிய கேலிக் கூத்தாகப் படுகின்றது.

தடைச் சட்டத்தையும், ஆட்சிமொழி மசோதாவையும், கொண்டுவந்து நிறைவேற்றி விட்டதால் திராவிடத்தின் வீரத்தை அடக்கி விட்டதாக வடவர் கருதிக்கொண்டிருக்கின்றனர். மூத்திரச் சட்டியில் தண்ணீர் குடித்து, செக்கிழுத்த வ. உ. சிதம்பரத்தைப் பெற்ற பூமி இது. அவர் பிறந்த தூத்துக்குடியில் கூடியபொதுக் குழுவில் பேசிய அறிஞர் அண்ணா அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னிடத்தில் காணப்பட்ட போர்க் குணத்தோடு மீண்டும் பணியாற்றுவேன் என்று சூளுரைத்தார்கள். சென்ற மாதத்திய அறிஞரின் சொற்பொழிவுகளைக் கேட்கும் தமிழகம் வீறு கொண்டு எழுந்த வண்ணம் உள்ளது. வடவராதிக்கத்தை, இந்தித் திணிப்பை அகற்றும் 'போர்க் குரல்' இன்று நாடெங்கும் கேட்கிறது. 'மக்கள் உரிமை' பறிபோவதைத்தடுக்க ஏற்பாடுகள் நடைபெறுகிறது. தமிழகமே போர்க்களமாக மாறப்போகிறது. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்று திருப்பூர் குமரனைப் பெற்றெடுத்தத் தாயகத்தினர் பரணிபாடப் போகிறார்கள். இளைஞர்கள் இந்தியின்கோரத் தாண்டவத்தை அடக்கியே தீருவார்கள். அடிமை விலங்கொடிக்கும் சப்தம் எங்கோ வெகு தூரத்தில் கேட்கிறது.

துருப்புச் சீட்டு

அடியார்

வெற்றிக்கு அடிமை! வரலாற்றில் ஏராளம்! வெற்றியை அடிமைகொண்டோன்! இதோ இதோ!

சொற்போர்க் களமா? நெற்போர் குவியும் நன்செய்த் தஞ்சையின் தலைமகன் இவனுக்கே வாகை மாலை! சோகைகொண்டோர்-சோர்ந்து விழுவோர், இவன் சொல் கேட்டால் தூக்கம் கலைவர்! தூக்குவர் வாளை! இவன் பேச்சு காளையின் நரம்பை இரும்பாக்கும்! கோழையின் நெஞ்சைப் பஞ்சாக்கும் கொள்கை தன்னைக் கொலுவேற்றும்!

எழுத்தா? பழுத்தினித்த வண்டு மாம்பழம்! செண்டு மல்லிகை! சற்கண்டுப் பாகு! படித்தால் கண் இனிக்கும்! கேட்டால் காது இனிக்கும்! சொல்லிப் பார்த்தால் வாய் இனிக்கும்! வீரம் துள்ளும்!

நாடகமா; நடிப்பா? படிப் பாலில் தேன் கலந்து தருவார்! ஊனுருகி, உளமுருகிப் பின் நீர் உருகி நெடுங்கண்ணில் வரும் வண்ணம், மேடையில் கலைவண்ணம் காட்டுவார்! கவலை ஓட்டுவார்! கொள்கை நாட்டுவார்!

அறப்போர்க் களமா? புறப்பாட்டும் போர்ப் பாட்டும் முழங்குகின்ற ஆர்ப்பாட்ட வீரர்கட்கோர் தலைவன்! மாற்றாரும் மதித்திடுவர் இம்மா வீரன் போர்க் காதை கேட்டு விட்டால்! நாட்டின் நாயகரும் நடுங்கிச் செத்திடுவார் இவர் களம் தன்னில் இறங்கிவிட்டால்!

தேர்தல் களமா? தந்திரமும் மந்திரமும் தமக்கே உரியதென்று 'தாரை' முழங்கும் ஊரை ஆள்வோர் இதைக்கண்டால் எடுப்பர் ஓட்டம்! களத்தில் குதித்துவிட்டால், கழுத்தில் மாலை விழும்! பிறகு, கட்டாயக் கல்யாணம், வெற்றிக்கும் இவருக்கும்!

சட்டமன்றமா? இவரால் கோட்டைக்குள் தமிழ் நுழையும். அங்குள்ள கொடுங்கோல்தான் வளையும்! 'சாட்டை' கொடுக்கப்படும், கதர்ச் சட்டைகள் கிழிக்கப்படும்! ஏழைகள் குரல் ஒலிக்கும்! கோழைகள் குரல் நெரிக்கும்!

ஆள்வோர் அமர்ந்திருக்கும் நாற்காலியை 'முக்காலி' ஆக்குவார்; அவர் ஆடும் ஆட்டத்தை அவனிக்குச் சிரிப்பாக்குவார்!

இனி...எத்துறையில் இல்லை அவர் முத்திரை—வெற்றி முத்திரை? ஆள்வோர் நித்திரை கெடுப்பது அவர் விளையாட்டு. மாள்வோர் எண்ணிக்கை குறைப்பது அவர் தாலாட்டு! வில்லவன் கோதை வல்லமை எங்கே? மாரன், சேரன் மலையை இடித்த மாமத யானை-கடலைக் கிழித்து-வானை அடித்த நல்வேல் பாண்டியன் வீரம் எங்கே? சொல்வேல் எறிந்த புலவர் பெருமை எங்கே? எங்கே?

என்று கேட்போர் இவரைப் பார்த்து கவலை விடுக!

வீரர்! வெற்றி வீரர்! தமிழர் 'செந்தமிழர்' கலைஞர்-'பல்கலை' ஞர்! தலைவர்-போர்த் தலைவர்!

இவர்,

காங்கிரஸ் ஆட்சிக்கோர்
துப்பாக்கி வேட்டு!
கழகத்தாருக்கோர்
துருப்புச் சீட்டு!

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்துப் பேசுங்கள்! நான் தொடர்கிறேன்" என்றார். ஆனால் பாராளுமன்றத்தில் பேசுகிற போது "இந்திதான் நாட்டின் ஆட்சிமொழி என்பதில் யாருக்கும் அபிப்ராய பேதம் இல்லை" என்றார்.

கேரளாவைச் சார்ந்த கம்யூனிஸ்ட்கூட இந்திதான் ஆட்சிமொழி என்று பேசியிருக்கிறார். அப்போது கேரளத்தை சார்ந்த ஸ்ரீகண்டன் நாயர் என்பவர் குறுக்கிட்டு "இந்திவேண்டும் என்று ஆங்கிலத்தில் தானே பேசுகிறீர்கள்! நீங்கள் ஏன் இந்தி படிக்கவில்லை" என்றார். அதற்கு அந்தக் கம்யூனிஸ்ட் "நம்மைப் பற்றிக்கவலையில்லை; நம் எதிர்காலச் சந்ததி இந்தி படித்துத்தான் ஆகவேண்டும்" என்றார். இப்படிக் கம்யூனிஸ்டுகள் எதிர்காலச் சந்ததியின் மீது கல்லைத் தூக்கிப் போடுகிறார்கள்!

அரசியல் சட்டம் 14 தேசிய மொழிகளைப் பிரகடனம் செய்துள்ளது. அதில் ஒன்று வட மொழி! தமிழ் வட்டார மொழி என்றால் அதற்கு தமிழகம் என்கிற வட்டாரம் இருக்கிறது. மராட்டிய மொழி வட்டார மொழி என்றால்; மராட்டியம் என்ற வட்டாரம் இருக்கிறது. சமஸ்கிருதத்திற்கு எந்த வட்டாரம் இருக்கிறது? அந்த மொழியைப் பேசுபவர்கள் 555 பேர் என்று மொழிக் கமிஷனே கூறியுள்ளது.

வட்டாரம் இல்லாத 555 பேரே பேசக் கூடிய சமஸ்கிருதம் தேசிய மொழிகளுள் ஒன்று என்றால், இலட்சக் கணக்கான ஆங்கிலோ இந்தியர்களின் தாய்மொழியான ஆங்கிலத்தை ஏன் தேசியப் பொது மொழியாக்கக் கூடாது?

இந்த சர்க்காரின் செயல்கள் அத்தனையும் அதன் வீழ்ச்சிக்குத்தான் வழி வகுக்கின்றன. ஆட்சிமொழி மசோதா நிறைவேறியதின் மூலம் மொழி ஏகாதிபத்தியம் உருவாகிவிட்டது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் என்பது ஒரு பண்பாட்டின் மீது மற்றொரு பண்பாட்டைச் சுமத்துவதைஎதிர்க்கும் போராட்டமாகும். அதிலும் ஆதிக்கவெறியரின் இந்தி மொழி ஆட்சிக்கு வந்தால் பாரதியார் கூறியபடி "மெல்லத் தமிழ் இனிச் சாகும்"

ஆகவே, தமிழை அழிக்கப் புறப்பட்ட இந்த மசோதாவிற்கு யார் துணைபோனாலும் அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாவார்கள்! மசோதாவை எதிர்த்துக் களம் கண்டு - காயம்பட்டு எதிர்ப்பவர்கள் நாட்டுக்கு நன்மைசெய்பவர்களாவார்கள்.

இந்திக்குத் தமிழ் நாட்டில் இவ்வளவு எதிர்ப்பா?—என்று உலகம் அறிந்துகொள்ளுகிற அளவுக்கு நமது நடைமுறைகள் இருக்கவேண்டும்! தி.மு.கழகப் பொதுக் குழு கூடி எடுக்கப் போகும் முடிவிற்கு மக்களனைவரும் ஆதரவு தந்து, இந்தி ஆதிக்கத்தை முறியடிக்க வேண்டும்.

ஒரு மொழிக்கு, நாடு பூராவும் பரவாத மொழிக்கு தனி அந்தஸ்து வழங்குவதால், அந்த மொழி பேசும் தேசிய இனம் மற்ற தேசிய இனங்களை அடிமைப்படுத்தமுடியும்.

நாம் அந்த அடிமைத் தளையில் சிக்கிக் கொள்ளத் தயாராக இல்லை. அதை உடைத்தெறியும் நாள் நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது.

அரியும் நரியும்

ஞா. தேவநேயப்பாவாணர்

கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மறையுண்டிருப்பதாலும், உண்மையான தமிழ்நாட்டு வரலாறு இன்னும் எழுதப்பெறாமையாலும் தலைமைப் பதவி தாங்கும் தமிழ்ப்பேராசிரியர் தமிழைக் காட்டிக்கொடுப்பதாலும், ஆளுங்கட்சிக் கொள்கை தமிழுக்கு மாறாயிருப்பதாலும்; தமிழ்ப் பொது மக்களுள் நூற்றுக்கெண்பதின்மர் எழுதப் படிக்கத் தெரியாதிருப்பதாலும் கட்சித் தலைவர் தம்மைக் கல்வித் தலைவராகக் கருதிக்கொண்டு மொழித் துறையில் அடாது தலையிட்டுப் பொதுமக்களை ஏமாற்றி வருவதாலும்; இதுவரையில்லாத இரங்கத் தக்க நெருக்கடி இந்தியால் தமிழுக்கு நேர்ந்துள்ளது, இதை நீக்குவதற்கு ஒரேயொரு வழியுள்ளது. அது ஆங்கிலத்தை அது இருக்குமிடத்தில் காத்துக் கொள்வதே.

இந்தி ஆங்கிலத்தின் இடத்தை அடைய முயல்வது, கோளரி வீற்றிருக்கும் அணையிற் குள்ள நரி குந்தப் பார்ப்பதே யாயினும், ஆங்கிலத்தின் அருமை பெருமையைக் குலைத்தற்கு, அது அயன்மொழியென்றும் பகைமொழி யென்றும் அடிமைப் படுத்தும் மொழியென்றும் ஒருபோதும் பொதுமக்கள் மொழியாகத் தகாதென்றும், சில நச்சுக் கருத்துக்கள் நாட்டிற் பரப்பப்பட்டு வருகின்றன.

ஆங்கில உயர்வும் இந்தித் தாழ்வும்

ஆங்கிலம் இந்தி ஆகிய இரு மொழிகளையும் ஒன்றோடொன்று ஒப்புநோக்கின் முன்னது பெருவள மொழி, மூத்த மொழி; பண்பட்ட மொழி; இந்தியப் பொது மொழி; உலகப் பொதுமொழி, அறிவியல் இலக்கிய மொழி; நடுநிலையாளர் மொழி; பின்னதோ சிறுவறுமொழி, இளையமொழி; பண்படாமொழி; ஒரே நாட்டு மொழி; அதனுள்ளும்வட நாட்டு மொழி; அறிவியல் இலக்கியமில்லா மொழி; தன்னல வெறியர் மொழி.

மொழியென்று பெயர்பெற்ற வளவில் எல்லாம் சமமாகா. களாப்பழமும் பழம் தான் பலாப்பழமும் பழந்தான்; பனையும் மரந்தான்; படரும் ஆலும் மரந்தான். அயிரையும் மீன் தான்; ஆனைத்திமியும் மீன் தான்; பூனையும் விலங்குதான்; யானையும் விலங்குதான். சேலம் திருமணிமுத்தாறு ஆறுதான்; தென்னமரிக்க அமேசானும் ஆறுதான்; இலக்கசம்பர்க்கும் நாடுதான் பிரசீலும் நாடுதான். ஆயினும், இவற்றிடை எத்துணை வேறுபாடுண்டோ அத்துணை வேறுபாடு ஆங்கிலத்திற்கும் இந்திக்குமுண்டு இக்கால நாகரிக உலக வாசிக்கு ஆங்கிலவறிவு இன்றியமையாதது; இந்தி எட்டுணையும் வேண்டாதது.

இருமொழிப் பொதுக் கல்வி

"கல்வி கரையில கற்பவர் நாட்சில" என்பது நாலடியார் கூற்று. இன்றோ கல்வி வரவர விரிந்தும் கற்பவர் நாள் வரவரக் குறுகியும் வருகின்றன. இந்நிலையில் இருமொழிக் கல்வியே இந்நாட்டிற்கு ஏற்கும் "ஆயிரம் பாட்டிற்கு அடிதெரியும், ஒருபாட்டிற்கு உருத்தெரியாது" என்றிருப்பதிற் பயனில்லை; ஒருமொழியைத் தட்டுதடையின்றியும் முட்டுப்பாடின்றியும் தாராளமாய்ப் பேசுதற்குக் குறைந்த பட்சம் இருபதினாயிரம் சொற்கள் தெரிந்திருத்தல் வேண்டும். மாந்தன் சராசரி அகக் கரணவாற்றல் இருமொழி கற்றற்கே யுரியது, பன்மொழிப் புலமை ஒரு சிலர்க்கே யுரிய விலக்கியல். அரைகுறையறிவு அல்லற்கேயிடமானது.

மேலும், மொழிகளையே கற்றுப் பெரும்பயனில்லை. அறிவியல் நூற்கல்வியால் மேன்மேலும் அறிவை வளர்த்தல் வேண்டும். அறிந்த பொருளையே அறிவிக்கும் மொழிக் கல்வி உள்ளீடற்ற வறுங்குவளை போன்றதே.

நம்நாட்டில் நாலாயிரம்ஆண்டாகக் கல்வியைக் குலத்தொழிலாகக் கொண்ட வழியினரும், ஈராயிரம் ஆண்டு உயர்நிலைக் கல்வி விலக்கப்பட்ட வழியினருமாக, இருதிறத்தார் உள்ளனர். இவ்விரு திறத்தார்க்கும் ஏற்ற முறையிலேயே பொதுக் கல்வித் திட்டம் வகுக்கப் பெறல்வேண்டும். கல்விக்கு வேண்டும் அகக் கரணங்களுள் மதிநுட்பம் போன்றே நினைவாற்றலும் இன்றியமையாததாகும்.

வட இந்தியாவில்மும்மொழித் திட்டம் இன்னும் ஆட்சிக்கு வரவில்லை. தமிழ் நாட்டில் அல்லது தென்னாட்டில் தான் அது வலிந்து புகுத்தப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தின் இந்தியத் தன்மை

இந்தியக் குடிவாணருள் ஆங்கில விந்தியரும் ஒரு வகுப்பாராவர். ஆதலால், அவர் தாய் மொழியாயுள்ள ஆங்கிலமும் இக்கால இந்திய மொழிகளுள் ஒன்றே. இந்தியக் குடியரசுச் சட்டப் பொத்தகத்தில் அதனையும் நாட்டு மொழிகளுள் ஒன்றாகக் குறியாமைநடுநிலை திறம்பிய, உண்மைக்குமாறானகொடுமையாகும். இதை உடனே திருத்துதல் அறிஞர் கடன்.

இந்தியின் அயன்மை

மொழி நூற்படியும் வரலாற்றுப்படியும், இந்தியும் தமிழ்நாட்டிற்கு அயன்மொழியே. ஆங்கிலம் போன்றே இந்தியும் ஆரிய மொழியாம் இவ்விரண்டனுள், ஆங்கிலம் ஏற்கெனவே தமிழரால் அறியப்பட்டது; இந்தி அறியப்படாதது.

ஆங்கிலத்தின் நெருக்கம்

ஆங்கிலம் ஆறாயிரம் கல் தொவிற்கப்பால் வழங்கும் மொழியாயினும், தமிழுக்குவட மொழியினும் நெருக்கமாகும். தமிழே வடக்கு சென்று திராவிடமாகவும், திராவிடமே வடமேற்கே சென்று ஆரியமாகவும், திரிந்துள்ளன. மேலை, அதாவது ஐரோப்பிய, ஆரியத்தினின்று பிரிந்து வந்த கிளையே வேத ஆரியம். வழக்கற்ற வேத ஆரியமும் அக்காலத்து வட்டாரமொழிகளாகிய பிராகிருதமும் கலந்த அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழியே வடமொழியெனப்படும் சமற்கிருதம். ஆரியத்தின் அடிப்படைச் செயற்களுட் சில தமிழ்ச் சொற்களாயிருப்பதுடன், மேலையாரியத்திற் காணப்பட்டும்கீழையாரியமாகிய வேதமொழியிலும் சமற்கிருதத்திலும் காணப்படாமலும் இருக்கின்றன. இருதிசையாரியத்திலும் காணப்படும் தமிழ்ச் சொற்களும், மேலையாரியத்தில் தமிழுக்கு மிக நெருங்கிய வடிவிலும் கீழையாரியத்தில்மிகமிகத் திரிந்தவடிவிலும் காணப்படுகின்றன. மேலையாரியத்துள்ளும் ஆங்கில சாகுசனியச் சொற்களும்சில இலக்கண நெறிமுறைகளும் அடிப்படையில் தமிழை மிக ஒத்துள்ளன.

மேலும், ஆங்கிலரே முதன் முதல்திராவிட மொழிகளை நடுநிலையாய் ஆராய்ந்து, தமிழின் பெருமையைத் தமிழர்க்கு அறிவுறுத்தி அவர் கண்ணைத் திறந்தவர்; அவரைக் கல்வியாலும் முன்னேற்றியவர். என்றும் அண்மை நண்பையும் சேய்மை அயன்மை பகையையும் குறியா

"உள்ளூ ரிருந்துந்தம்
உள்ளமறப் பெற்றாரேல்
கள்ளவிழ் சோலையாங்
காட்டுள்ளார்-காட்டுள்ளும்
உள்ளம் அறப்பெறு கல்லாரேல்
நாட்டுள்ளும்
நண்ணி நடுவூருள் ளார்."

என்னும் அறநெறிச் சாரத்தை (214) உணர்க.

குமுக (சமுதாய) நிலையில் நாயினும் கடைப்பட்டிருந்த தமிழரை நாயகப் படுத்திய ஆங்கிலர், தமிழர்க்கு மீட்பராயின்றி அடிமைப்படுத்தியராய் வரவில்லை யென்பது மறுக்கவியலா வரலாற்றுண்மை.

இந்தியின் சிறுபான்மை

இந்தி வெறியர் கூறுகின்றபடி, இந்தி இந்தியப் பெரும்பான்மை மொழியன்று. இந்தியிலுள்ள பல்வேறு பிரிவுகளை ஒன்றாகக் கொள்ளினும், இந்தி மொழியாளர் இந்தியமக்களுள் நூற்றிற்குநாற்பதின்மரே. அவரும் வடநாட்டுள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். ஆதலால் பெரும்பான்மைத் தகுதி இந்திக்கு இல்லை.

இந்திக்கு வளரும் தன்மை யின்மை

இந்தியை வளப்படுத்தி ஆங்கிலத்திற்கு ஈடாகச் செய்துவிடலாம் என்பது, பூனைக்கு ஊட்டங்கொடுத்தாற் புலியாக்கிவிடலாம் என்பதுபோன்றதே. இந்தி இயற்கையாக வளரும் நிலைமை யின்மைக்குக் கரணியங்கள் (காரணங்கள்) ஆவன :-

(1) வேர்ச்சொற்களின்மை
(2) சொற் கூழைத்தன்மை

இந்திச் சொற்கள் பெரும்பாலும் ஈறுகெட்டேயுள்ளன. எடுத்துக் காட்டு :

சமற்கிருதம்	இந்தி
கிருக(ம்)	கர்
வார்த்தை (வார்த்தக)	பாத்
தமிழ்	**இந்தி**
நேரம்	தேர்
கொச்சு(கொஞ்சம்)	குச்

(16-ம் பக்கம் பார்க்க)

இந்தியின் இலக்கியம் இரயில்வே கால அட்டவணை !

பெற்ற தாய் ஒருவனுக்கு ஒரு தாய் தான் இருக்கமுடியும். இரண்டு தாய் எப்படி இருக்கமுடியும்? இந்தி ஆட்சி மொழியாகிவிட்டால் அதை எப்படி தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ள முடியும்? ஏது இந்தி? எதற்கு இந்தி? ஏன் இந்தி? இந்த மூன்று கேள்விகளை நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். இந்தியை ஆட்சிமொழியாக்க என்ன தகுதி இருக்கிறது? சொல்வளமுண்டா? இலக்கியமுண்டா? இலக்கியமிருக்கிறது என்பார்கள்— ஒன்று துளசிதாஸ் இராமாயணம் மற்றொன்று இரயில்வே காலஅட்டவணை. இப்படிப்பட்ட இலக்கியம் கொண்ட இந்தியைத்தான் நம்மீது திணிக்க இந்தி வெறியர்கள் தயாராகிவிட்டார்கள்.

“இந்தி நமது நாட்டு மொழி; ஆங்கிலம் அந்நிய மொழி. எனவே நமது நமது நாட்டு மொழியைத்தான் ஆட்சிமொழியாக வைத்துக்கொள்ள வேண்டும்” என்பது முழுக்கமுழுக்கப் பொருந்தா வாதமாகும். இந்தி நமது மொழி என்பதும் தவறு; இந்தியா ஒரு நாடு என்பதும் பொருத்தமற்றது.

‘ஒரே மொழிதான் இந்தியா முழுவதற்கும் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்’ என்பதும் முடியாத ஒன்று!

தம்பி — கடுமையான சோதனை! தியாகத்திற்குத் தயாராயிரு

இந்தியா ஒரேநாடு என்பதே சரியில்லை; அது பல நாடுகளைக் கொண்ட துணைக் கண்டம்! பல நாடுகளையும் இணைத்து நிர்வகிக்கக் கூடிய ‘நிர்வாக அமைப்பே’ ஆகும் இந்தியா.

இந்தியா என்பது ஒரு நிர்வாக அமைப்புத்தான்; இந்த அமைப்பிலிருந்து சில பகுதிகள் பிரிந்து போனதும் உண்டு. வந்து சேர்ந்துகொண்டதும் உண்டு.

வங்காளத்துடன் இருந்த ‘பெருபாரி’ என்னும் பகுதியை, நேரு யாரையும் கேட்காமலே பாகிஸ்தானுடன் சேர்த்துவிட்டார்; அந்தப் பகுதி மக்கள் இப்போது தங்களை, இந்தியர் என்று சொல்லிக்கொள்ள முடியாது.

எனவே இந்தியா என்பது நிர்வாக வசதிக்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அமைப்பே தவிர நாடல்ல!

ஆகவே, இந்த அமைப்பிலே நாம் இன்று இருப்பதால் இந்தி நம்முடையமொழியாகிவிடாது. ஒரே நாடல்லாத இந்தியாவுக்கு ‘ஒரே மொழி ஆட்சிமொழி ஆகவேண்டும்’ என்று வாதாடுவது சரியில்லை!

நமது வசதிக்குத் தக்கபடி 14 மொழிகளையும்கூட ஆட்சிமொழியாக்கலாம்; அல்லது 4-5 மொழிகளையாவது ஆட்சிமொழியாக்கலாம். அப்படிச் செய்யாமல், இன்னொருவர் தாய்மொழியை நம்மீது கொண்டுவந்து திணிப்பது முறையல்ல.

எவ்வளவுதான் நாம் ஆங்கிலத்தைக் கற்றாலும், ஆங்கில நாட்டில் போய் ஆங்கிலேயனுடன் போட்டியிட்டு உத்தியோகம் பெற்று விடமுடியாது; இங்கே உள்ள ஆறுமுகம்அருணாசலத்தைவிட ஆங்கிலம் நன்றாகப் பேசலாம், எழுதலாம்; ஆனால், ஆறுமுகம் என்னதான் முயன்றாலும், ஆங்கில நாட்டுக் குடிமகனோடு ஆங்கிலத்தில் போட்டியிட முடியாது.

கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்? இதே கதிதான் இந்தி வந்தாலும்! அதுவும் நமக்கு அந்நிய மொழிதான் என்னதான் நாம் இந்தியைக் கற்றாலும் குழந்தைப் பருவத்திலிருந்து இந்தியிலேயே வீட்டிலும், வெளியிலும் பேசிப் பழகி உறவாடும் இந்திக்காரனுடன் போட்டியிட்டு வெல்ல முடியுமா?

நாம் கற்கிற இந்தி நாளாக ஆகத் தேயும். இந்திக்காரன் கற்கிற இந்தி நாளாக ஆக வளரும்-மலரும். ஏனெனில் அவன் இந்தியிலேயே பிறந்து வளர்கிறான்.

அவனது இந்தி மொழியை ஆட்சிமொழியாக்குவது அந்த



மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நம்மை அடிமையாக்குவது என்றுதான் பொருள். ஐரோப்பாவிலுள்ள சுவிட்ஜர்லாந்து நமது தமிழ் நாட்டைவிடச் சிறிய நாடுதான். அங்கே மூன்று மொழிகளை ஆட்சி மொழிகளாக வைத்திருக்கிறார்கள். பல நாடுகளைக் கொண்ட இவ்வளவு பெரிய ஒரு நிர்வாக அமைப்பால், ஒரே மொழியை எப்படி ஆட்சி மொழியாக வைத்துக் கொள்ள முடியும்?

“தமிழர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள்; இந்தியை எளிதில் கற்றுக்கொள்வார்கள்”— என்று சிலர் நம்மைத் தட்டிக் கொடுக்கிறார்கள். தயவு செய்து ஏமாந்துவிடாதீர்கள்.

நான் டெல்லிக்குப் போகும்போது, இரயிலில் ஒரு இருபது இந்திச் சொற்களைக் கற்றுக் கொள்வேன். திரும்பி வந்து சென்னை இரயில் நிலையத்தில் இறங்கும்போது, ஒரு பத்து சொற்கள்கூட மனதில் நிற்பதில்லை. அது அந்நிய மொழியாக இருப்பதால்தான் அதைக் கற்றுக்கொள்வது கடினமாக இருக்கிறது.

இன்றைய தினம் அரசியல் வானில் 3 வால் நட்சத்திரங்கள் போல் 2 புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வைதீகர்கள் சொல்லுவார்கள் வால்நட்சத்திரம் தோன்றினால் உலகத்துக்கு ஆபத்து என்று! அதிலே எனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் இவர்கள் கொண்டுவந்துள்ள 2 சட்டத்தால் நாட்டுக்கு ஆபத்து,

தற்போதுள்ள ஜனநாயக முறை பெயரளவுக்குத்தான் உள்ளதே தவிர, சர்வாதிகார மனப்போக்கு வளர்ந்துவிட்டது. சர்வாதிகாரப்போக்கு மேலும் வளர்ந்தால் மக்கள் முன்னேற வழியே இல்லை.

இந்தி ஆட்சிமொழி மசோதா தமிழ் நாட்டையும், தமிழையும் தலைதூக்க முடியாமல் அழித்துவிடும்! மத்திய அரசு, இந்தியை மிகத் துரிதமாக அமுலுக்குக் கொண்டுவருகிறது. இது மத்திய அரசு பணிகளுக்குச் செல்லும் தமிழர்களைப் பெரிதும் பாதிக்கும்! மக்களின் நட்பு மனப்பான்மையும் ஒழிந்துவிடும். இந்தி பேசாத மக்களுக்கு மத்திய அரசு இழைத்துள்ள ஒரு பெரிய அநீதியாகும் இது!

சென்ற பதினைந்து, இருபது ஆண்டுகளாக நாம் “திராவிட நாடு திராவிடருக்கே” என்று கூறி வந்துள்ளோம். ஆனால் இதுவரை இவ்வியக்கத்தை ஒடுக்கவோ, அழிக்கவோ அரசினர் விரும்பவில்லை. இன்று எந்த அவசியத்தின்பேரில் பிரிவினைத் தடை மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள்? தி. மு. கழகம் மிகத் துரிதமாக வளர்ந்து மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்று வருவதைக்கண்டு மத்திய, மாநில அமைச்சர்கள் அச்சம் அடைத்துள்ளார்கள். அதனால்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளார்கள்.

நாம் விழிப்புடன் இருந்து—இந்த இரண்டு சட்டங்களையும், அதன் தீமைகளையும் நன்கு ஆராய்ந்து நீண்டகாலப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும்! நம்மை அவர்கள் பிடித்தால் பிடித்ததுதான்—அடைத்தால் அடைத்ததுதான்! சில மாதங்கள் அல்ல—சில ஆண்டுகள் நம்மைச் சிறைச்சாலையில் வைத்திருப்பார்கள்! எதற்கும் தோழர்கள் தயாராக இருக்கவேண்டும்.

“**போராட்டம் உண்டு**” என்று பொதுக் குழு முடிவு செய்து அறிக்கை விட்டால், அப்போது எதையும் தாங்கும் இதயம்கொண்ட தோழர்கள் முறைப்படி போராட்டத்தில் கலந்துகொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட கழகத்தின் கட்டளைக்கேற்ப எதற்கும் துணிந்த தோழர்கள் தங்களது பெயர்களை அந்தந்தவட்டாரங்களில் இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

அறிஞர் அண்ணா

யாசிக்கிறேன் களச் சாவைக் கொடு!

இந்தித் திணிப்பு என்னும் பிரச்சினை பயங்கர விசுவரூபம் எடுத்து நம்முன் நிற்கிறது. பல ஆண்டுகளுக்கு ஒருமுறை தாக்குவதும் திரும்பிப் பார்த்தால் ஓடிவிடுவதும்; பிறகு சில ஆண்டுகள் கழித்து நுழையப் பார்ப்பதும், நாம் முறைத்துப் பார்த்தால் முடங்கி விடுவதுமாய் இருந்த இந்திமொழி, இப்போது என்னை என்ன செய்ய முடியும் என்று நெஞ்சுயர்த்திக் கேட்கிற அளவுக்கு இந்திப் பிரச்சினை உருவெடுத்திருக்கிறது.

இப்போதே இந்தியை எதிர்த்துப் படை திரட்டாவிட்டால் நாம், ''அம்மா, அப்பா'' என்று மழலை பேசி மகிழ்ந்த தமிழ்-நாம் பிறந்து வளர்ந்து மகிழ்ந்த தமிழ்நாடு, தென்னகம்-தாயகம் - தமிழகம் என்று போற்றிப் புகழ்கின்ற நமது தமிழன்னை 2000 அடிகளுக்குக் கீழே பின் தள்ளப்பட்டு விடுவாள்.

இந்தியை அன்றிலிருந்து இன்று வரை திராவிடர் இயக்கம் எதிர்த்துக்கொண்டே வருகிறது. 1938-ல் ஆச்சாரியார் கட்டாய இந்தியைக் கொண்டு வந்தார். தமிழகமே கொதித்தெழுந்தது. 13000 பேர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்! கட்டாய இந்தி திரும்பப் பெறப்பட்டது! அந்த நிலையில்தான் இந்தி என்றுமே நம்மை வந்துமிரட்டாத நிலை இருக்க "தமிழ் நாடு தமிழருக்கே'' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

போராட்டம் நடந்த பின் சட்டமன்றத்தில் ராஜாஜி அவர்கள் "இந்த நாட்டில் இந்தியை எதிர்க்க இரண்டுபேர்கள்தான்-ஒருவர் பெரியார், இன்னொருவர் பசுமலை சோமசுந்திர பாரதியார் என்றார். அப்பொழுது சட்டமன்றத்திலிருந்த பன்னீர்செல்வம் "இந்தியைக் கொண்டு வருவது நீர் ஒருவர் தானே?'' எதிர்ப்பவர்கள் இரண்டு பேர். பரவாயில்லை! அப்படியும் மெஜாரிடிதான்!'' என்றார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னையில் ராஜாஜியுடன் இந்தி எதிர்ப்புக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசும்பொழுது ராஜாஜியை வைத்துக்கொண்டே சொன்னேன், "இங்கே இந்தி நுழைவதற்கு முதலில் வழியமைத்து கொடுத்தவர் நீங்கள்தான். உங்கள் தவறை உணர்ந்து திருந்தியதால் இன்று பெரியவராகிறீர்கள்''—என்று குறிப்பிட்டேன்.

இதை ஏன் குறிப்பிடுகிறேனென்றால் எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்தை எடுத்துச் சொல்லவேண்டிய இடத்தில்— எடுத்துச் சொல்லவேண்டியவரிடத்தில் எடுத்துச் சொல்ல என்றும் நான் தயங்கியதில்லை.

பலமுறை படிப்படியாக இந்தி வருவதும், அதற்கு நாம் மறுப்புத் தெரிவிப்பதும், பின் அவர்கள் திரும்பப் பெறுவதுமான நிலைமாறவேண்டும். இந்தி ஒருமுகமாக நம்மீது திணிக்கப்படுவது ஒழிக்கப்பட வேண்டும். ஒரு சிலர் கேட்கக் கூடும். ''இன்னும்பத்து ஆண்டுகள் உள்ளனவே; இப்போது என்ன அவசரம்?" என்று.

வயதான பெரியவர்கள்கூட 'இன்னும் பத்து வருடமிருக்கிறது; அதற்குள் நம் காலம் முடிந்துவிடும்' என்று எண்ணக்கூடும். ஆனால் பெரியவர்களே! நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன். இப்போதே இந்தியை ஒழிக்க நீங்கள் செயலில் இறங்காவிட்டால் உங்கள் சந்ததியாருக்கு நீங்கள் துரோகம் செய்தவர்களாவீர்கள்! சொத்துக்களுக்குச் சாகும்போது உயில் எழுதி வைப்பதுபோல் இந்தச் செயலில் நீங்கள் இறங்கவேண்டும்.

நாட்டில் உள்ள தலைவர்கள் எல்லாம் இந்தித் திணிப்பின் பயங்கரத்தை உணர்ந்து விட்டார்கள். ராஜாஜி போன்றவர்கள் தனக்களிக்கப்பட்ட 'பத்ம விபூஷன்' 'பாரத ரத்ன' போன்ற பட்டங்களைத் தூக்கியெறியவும் துணிந்துவிட்டார்கள்.

நாட்டு மக்களனைவரும் வீறுகொண்டெழ வேண்டும்! இந்தியை எதிர்த்துப் போர்க்குரல் கொடுக்கவேண்டும்.

ஒரு நல்ல மனிதன் முகத்திலே பளபளப்பு ஏற்பட்டு, பின்னர் தடிப்பு ஏற்பட்டு, இன்னும் சில நாட்கள் கழித்தவுடன், கை கால் விரல்கள் குறைந்து குட்டரோகம் ஏற்படுவதைப்போல், இந்திஆட்சி மொழியானால் படிப்படியாகத் தமிழ் இனமும், தமிழ் மொழியும் அழிந்துபோகும்.

1950-ல் போர்க் கொடி உயர்த்தினோம். குமாரபாளையம் பொதுக் குழுவில் முடிவெடுத்தோம் இந்தியை எதிர்ப்பதென்று. கோடம்பாக்கத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் ஜனாதிபதிக்கு கருப்புக்கொடி காட்டுவதென உறுதி செய்தோம். ஹைதராபாத்தில் பேசிய பிரசாத் அவர்கள் உறுதியளிக்கும் வகையில் பேசியதால் கருப்புக் கொடிப் போராட்டம் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது.

கம்யூனிஸ்ட் சீன ஆக்கிரமிப்புக்குப் பின்னர் நேருவின் வாக்குறுதி வந்தது. அது உறுதியில்லை — என் சொந்தக் கருத்தென்கிறார் நேரு. அந்த விளம்பரத் தலைப்பில் பிரதமரின் பெயர் மட்டும் போட்டால் நம்ப மாட்டார்கள் என்று நேருவின் படத்தைப் போட்டு விளம்பரம் செய்தார்கள். அவர்கள் பத்திரிக்கைகளில் மட்டும் போட்டால் நாட்டு மக்கள் நம்பமாட்டார்கள் என்று நமது "முரசொலி" "நம்நாடு" இதழ்களில் கூட விளிம்பு கட்டி விளம்பரம் வந்தது.

இப்பொழுது அது என் சொந்தக்கருத்தென்கிறார் அலகாபாத்வீரர்! இவரிடம்தானே ஜனநாயகம் இருக்கிறது; மனிதத்தன்மை இருக்கிறது என்று நம்பிக்கொண்டிருந்தோம். இப்பொழுது வாக்குறுதியை வாயளவில் வேண்டுமானால் தருகிறேன் மசோதாவில் சேர்க்கமாட்டேன் என்கிறார். வாயளவு வாக்குறுதியை எப்படி நம்புவது?

இருட்டிலே நுழையும் முடிச்சுமாறி போல் அலுவலகங்களில் இந்தி நுழைகின்றது. இவையெல்லாம் இந்தித் திணிப்பைக் காட்ட வில்லையா?

இந்தித் திணிப்பு இல்லையென்று யாராவது உறுதி தர முடியுமா? இந்தித் திணிப்பு இல்லையென்றால் அஞ்சல் அட்டையில் ஏன் இந்தி? புகைவண்டி நிலயத்திலுள்ள பலகைகளில் ஏன் இந்தி? மத்தியசர்க்கார் அலுவகலங்களில் பணிபுரிபவர்கள் வேலை உயர்வு கிடைக்க வேண்டுமென்றால் இந்தியில் பரிட்சை எழுத வேண்டுமென்ற கட்டாயம் ஏன்?

இந்தித் திணிப்பைஎதிர்த்து நடைபெற இருக்கின்ற போராட்டம் காந்தீய மார்க்கத்திலே நடைபெறும் போராட்டமாகும்.

தில்லி மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் லால்பகதூர் சாஸ்திரியைத் தன் சுட்டு விரலால் சுட்டிக் காட்டி, 'விளைவுகள் எதுவானாலும் சரி தி.மு.க. போராடியே தீரும்' என்று போர்க்குரல் கொடுத்திருக்கிறார். அதனை நேரில் பார்த்த நண்பர்கள் எனக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தார்கள். அப்பேர்ப்பட்ட தலைவரைப் பெற்றிருக்கிற நாம் பொதுக்குழுவின் முடிவிற்கேற்ப போராட்டத்தில் ஈடுபடுவோம்.

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி ஆனை மிதிக்கும் அருஞ் சேரும் போர்க்களத்தில் எதிரியின் முடி நடுவதற்கு முரசம் ஆர்த்து விட்டது! அழைப்பு வந்துவிட்டது!

தலைவ! முதல் அணியில் எனை நிறுத்து! களத்திலே காயம் பட்டால் உன் கண்ணீரால் குளிப்பாட்டு! தலைவன் தன் சாவு கண்டு கண்ணீர் விடுவது வீரனுக்கு அவ்வளவு பெருமையைத் தரும்! தலைமை காத்த தலைவன் கண்களில் நீர் பெருக்கெடுக்குமாறு ஏற்படுகின்ற களச்சாவுகளை—வீரர்கள் யாசித்தாவது பெறவேண்டும். அதற்கு இதோ குறள்—

''புரந்தார்கண் நீர்மல்கச்
சாகிற்பின் சாக்காடு
இரந்து கோள் தக்கது
உடைத்து.''

கலைஞர் மு. கருணாநிதி

திருவண்ணுமலை வெற்றி
தென்னக மொழிகளுக்கு ஓர் பாதுகாப்பு !

திருவண்ணுமலைத் தொகுதி மக்களே !
தமிழன்னையின் இதழுக்குப் போட்டார் பெரிய பூட்டு !
அந்த மாடுகளுக்கா உங்கள் ஓட்டு !

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய நிலைசொல்லாக்கத்திற்கு ஏற்றதன்று. ஆங்கிலம் பிறமொழிகளினின்று சொற்களைக் கடன்கொண்டிருப்பினும், ஈற்றுவேறு பாட்டால் பல்வேறு சொற்களைத் திரித்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றுளது.

எடுத்துக் காட்டு :

MOVE (L. Mov.)
move, movable, movement (L. movimentum).
mover, movies
commore
motion, motile, motility (demote, emotion, commotion, promotion)
motor , motorize, motory, motorial, motive, motirate, motivation, motif.

3. மக்கள் அறிவுத்தாழ்வு

ஒரு மொழி இயற்கையாக வளர்வது அதை பேசும் மக்களின் அறிவு வளர்ச்சியால். அறிவு வளர கருத்துப் பெருகும்; கருத்துப் பெருகச் சொற்பல்கும்; சொற்பல்க மொழி வளரும். உள்ளக் கருத்தின் ஒலி வெளிப்பாடே சொல். சொற்றொகுதியே மொழி. மொழிகள் அவ்வம் மக்களின் அறிவு நிலைக் கேற்ப வளம் பெற்றும் பெருதும் இருக்கும். ஆங்கில மக்கள் 14-ஆம் நூற்றூண்டினின்று மறுமலர்ச்சி, கடலாட்சி, வணிகம், அரசியல் திருத்தம், பொறிவினை, அறிவியல், ஆராய்ச்சி முதலிய பல்வேறு துறைகளால் மேன்மேலும் அறிவடைந்து வந்திருக்கின்றனர். அதனால், அவர் மொழியும் கடந்த ஐந்து நூற்றூண்டாக வளம் பெற்றும் பண்படுத்தப் பெற்றும் வந்திருக்கின்றது. இந்தி மொழியாளர் ஆங்கிலரைப் போல் அறிவியல் வளர்ச்சியடைந்தவரல்லர். ஆதலால், ஆங்கிலேயர் போற் கடன் கொண்டு இந்தியை வளர்க்க முயல்வது, புலியைப் பார்த்துப் பூனை சூடிட்டுக் கொள்வது போன்றதே.

ஒரு மொழி இயற்கையாயும் உண்மையாயும் வளர்வதற்குப் பல நூற்றூண்டுகள் செல்லும். இரவோடிரவாய்ச் சமஸ்கிருத அகராதியினின்று அல்லது சொற்களஞ்சியத்தினின்று ஆயிரக்கணக்காக சொற்களைப் பெயர்த் தெழுதிக் கொள்வதால் இந்தி வளர்ச்சியடைந்து விடாது.

ஆங்கிலம் ஏற்கெனவே வளர்ச்சி நெறியில் நெடுந் தொலைவு சென்றிருப்பதனால். இந்தி இனிமேல் அதனோடு போட்டியிடவும் முடியாது. "இருந்தவன் எழுமுன் நின்றவன் நெடுந்தூரம்" என்பது பழமொழி.

Admission, admittance; assent,, consent: bill, act; continual, continuous; discover, invent; famous, notorious; habit, costom; punctilious; sensual, sensuous; visitor, vistitant முதலிய எண்ணிறந்த நுண் பொருள் வேறுபாட்டுச் சொல்லிணைகள் ஒரு மொழியில் தோன்றுவது, சில பல நூற்றூண்டுக் காலத்திலன்று.

இந்தியச் சட்டமமைப்புக் குழூ முடிவு தமிழரைக் கட்டுப்படுத்தாமை

ஒரு குடும்பத்தில் உடன் பிறந்தார்க்குப் பாகம் பிரிப்பது சமவுரிமை பற்றியே யன்றி, அவர் அகவை (வயது) யளவு பற்றியன்று. அது போல் ஒரு நாட்டிலுள்ள பல்வேறு பெருமொழியாளர்க்கும் மொழித் துறையில் படி நிகராண்மை (பிரதிநிதித்துவம்) தரவேண்டுவது, சமவுரிமை பற்றியே யன்றி அவ்வம் மொழியாளர் தொகைப் பற்றி யன்று. இந்தியா ஒரு மொழி வழங்கும் ஒரு நாடன்று மொழியாளர் தொகைப்பற்றிப் படி நிகராண்மையாயின், சில மொழியாளர் என்றும் முன்னேற்றத்திற் கிடமின்றிச் சிறுபான்மையராகவே யிருப்பர்.

மேலும், சட்டமமைப்புக் குழுவிற்குத் தமிழ் நாட்டுப்படி நிகராளராய்ச் சென்றவர் மறைமலையடிகளும் தமிழ வேள் உமாமகேசுவரம் பிள்ளையும் போன்றவரல்லர்; வழக்கறிஞர் அல்லாடிக் கிருட்டிணசாமியும் கனம் செரோம் டீசூசாவும் போன்றவரே. தமிழருள் நூற்றிற் கெண்பதின்மர்க்கு மேல் எழுதப்படிக்கத் தெரியாதவர். தமிழ் வரலாறும் தமிழர் வரலாறும் அறியப்படாதன. இந்நிலையில், ஆட்சிமொழியும் கல்வி மொழியும் பற்றி ஆய்ந்து முடிவு செய்யத் தக்கவர் தமிழத் தமிழ்ப் புலவரே.

இந்தியை இந்தியப் பொது மொழியென்று முடிவு செய்த குழுவுறுப்பினரால், ஆங்கிலச் சார்பாரும், இந்திச் சார்பாரும் சமத் தொகையர். நடுநிலை தாங்க வேண்டிய அக்குழுத் தலைவரின் இந்தி வெறியாலேயே முடிவு வேறுபட்டது. தமிழரைப்படி நிகர்த்த பண்டாரகர் சுப்பராயன் இந்தியை யெதிர்த்தே குடவோலையிட்டார். ஆதலால், இந்தி முடிவு எவ்வகையிலும் தமிழரைக் கட்டுப் படுத்தாது.

இந்தியால் தமிழ் கெடுதல்

ஏற்கெனவே தமிழ்ப் பகையாயுள்ள வடமொழி யென்னும் சமற்கிருதத்தால், மொழி இலக்கியம் பண்பாடு ஆகிய மூவகையிலும் தமிழ் மிகக் கெட்டுள்ளது. இதனோடு சமற்கிருத எழுத்துடன் வரும் சமற்கிருதச் சார்பான இந்தியுங் கூடின், தமிழுக்குப் பெருங் கேடு விளையுமென்பது சொல்ல வேண்டுவதன்று. தமிழ் கெடின் தமிழரும் உடன் கெடுவர், அதன்பின் என்றென்றும் வடவர்க்கு அடிமையராவது திண்ணம்.

ஜெய் ஹிந்த், பாரத் சேவா சங்க், கிராம் சேவக், ஆகாச் வாணி முதலிய ஈறுகெட்ட வல்லோசையிந்திச் சொற்களால், தமிழ் ஒலி முறையும் சொல்வடிவும் மிகத்தாக்குண்ணும்.

வடமொழி உருது ஆங்கிலம் ஆகியவற்றின் சொற் சேர்க்கையால் முன்னரே தூய்மையிழந்து கலவைப் பட்டுள்ள தமிழ், இந்திக் கலப்பால் மேலும் நலிந்து வறுமைமிகும்.

இந்தி ஆட்சிமொழியாயின், நாளடைவில் தமிழ் புறக்கணிக்கப்பட்டு வீட்டு மொழியாகி, பின்பு அதுவுமின்றி விரைந்து மறைந்து போம்.

ஆங்கிலமுந் தமிழு மறியாத சில கட்சித் தலைவரும் அமைச்சரும், தம் பதவியைக் காத்துக் கொள்ளற் பொருட்டு இந்தியால் தமிழ் கெடாதென்று ஏமாற்றுவது, குருடர்க்குக் குருடர் வழி காட்டுவதே.

தமிழ் நாட்டிற்கு இந்தி வேண்டுவதன்று. ஏற்கெனவே தமிழ்ப் புலவர் தலைவரான மறைமலையடிகள் தெள்ளத் தெளிய விளக்கிவிட்டார். இன்னும் விளக்கம் வேண்டின், ஒரு தமிழ்ப் புலவர் மாநாடே கூட்டப் பெறல் வேண்டும். கல்லா மாந்தரைப் பெருவாரியாகக் கொண்ட தேர்தல் தொகுதிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட பேராயக் (Congress) கட்சியாளர் தமிழ் நாட்டுப்படி நிகராளியர் (Represenstatives) ஆகார்.

முடிவு

இந்தியப் பொது மொழி என்றும் ஆங்கிலமாயே இருத்தல் வேண்டும். அல்லது, வடநாட்டு ஆட்சிமொழி இந்தியாயும் தென்னாட்டு ஆட்சிமொழியும் இரு நாட்டையும் இணைக்கும் மொழியும் ஆங்கிலமாயும். இருத்தல் வேண்டும், இவ்விரண்டி லொன்றிற்கு வடவர் இசையாவிடின், தமிழ் நாடு தனியாய்ப் பிரிதல் வேண்டும் அல்லது மொழியியல் தன்னாட்சி (Linguistic Autoreny) அடைதல் வேண்டும்.

இழியும் தகையில் திருவெலா
மிழந்துநன் றறியும்]
விழியும் இழந்து வெற்றுட
லாயினை முன்னே]
மொழியும் இழந்து பிறர்மொழி
குழறிமுன் னேற்ற]
வழியும் இழந்து வைகுவ
தெங்ஙனம் தமிழா.

இந்திய நாகரிக அடிப்படை தமிழ். ஆரியத்திற்கு உயர்வும் தமிழுக்குத் தாழ்வும் ஏற்றிக் கூறும் ஏமாற்றுக்கூறு கலந்த தமிழ் நாகரிகமே இந்து நாகரிகம் எனப்படும் கலப்பு நாகரிகம். கீழையாரியமாகிய வேத மொழியும் அதன் வழிபட்ட சமற்கிருதமும் தேவ மொழியென்றும், பிராமணர் நிலத்தேவர் (பூசுரர்) என்றும், இரு தவறான கருத்துக்கள் பண்டைத் தமிழ் வேந்தர் மனத்தில் பதிந்து விட்டதனாலேயே, ஆரியம் தமிழ் நாட்டில் வேரூன்றிற்று. ஆயினும் ஆரியத்தை வேரறக் களையும் நிலை இன்றும் தமிழிலும் தமிழ் நாட்டிலும் உளது.

ஆங்கிலேயராலும் ஐரோப்பியராலும் கைப்பற்றி யாளப்பட்ட அயல் நாடுகளுள், ஏனை நாடுகளெல்லாம் ஓரடிமைத் தனமும் தமிழ்நாடு மட்டும் ஈரடிமைத்தனமும் கொண்டனவாகும். ஆதலால், ஆங்கிலர் நீங்கினவுடன் தமிழ்நாடு விடுதலை யடைந்து விடவில்லை. ஆங்கில மேலதிகாரத்தினும் இந்திய ஆரிய மேலதிகாரம் மிகக்கொடியது.

வடவரும் தென்னவரும் உடன்பிறந்தார் போற் சமநிலையர். ஆதலால், ஆங்கிலர் நீங்கினவுடன், வடவர் ஆங்கிலர் இடத்தையும் வடநாட்டு மொழியாகிய இந்தி ஆங்கில இடத்தை அடைய விரும்புதல் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதே.

பல நாடும் பலவினமும் பல மொழியும் பல மதமும் பல தட்பவெப்ப நிலையும் கலந்து ஒரு சிற்றுலகமாயுள்ள இந்தியவுட்கண்டத்தின் உண்மையான நிலையை யுணர்ந்து, வாய்மை அன்பு, துன்புறுத்தாமை ஆகிய முப்பண்பாட்டுக் காந்திய நெறியைக் கடைப் பிடித்து, தன்னலமும் செருக்கும் குறுகிய நோக்குமின்றி, வடவரும் தென்னவரும் என்றும் ஒன்றி வாழுமாறு, இரு சாரர்க்கும் பொதுவாகிய ஆங்கிலமே இந்தியப் பொதுமொழியாகுக.

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரு உணர்தல் வேண்டும். உலகத்திலேயே தனது தனித் தன்மையை - இனத்தின் தூய்மையைப் பாதுகாத்து கொண்டிருப்பது தமிழகம்ஒன்றுதான். உலகத்திற்கு பண்பாட்டின் ஒளிபரப்ப வருங்காலத்தில் தமிழகத்தால்தான் முடியும் என்ற நிலை ஏற்படினும் ஏற்படக் கூடும். தயவுசெய்து இருக்கும் நிழல் மரத்தையும் வெட்டிச் சாய்த்து வெறும் வெளியில் “இந்தியப் பண்பாடு'' உருள வேண்டும் என்பதற்கு யாரும் வழிவகுக்க வேண்டாம். இந்தி பேசும் மாநிலங்களிலேயே ஒருமைப்பாட்டுணர்வு வெகு விரைவில் தோற்றுவிடக்கூடும். அந்த நேரத்தில், தமிழகத்திலிருந்து தான் அது பாதுகாக்கப்பட வேண்டிவரும்.!அந்தச் சித்திரம் அப்போது எழுதப்பட வேண்மானல், இப்போது இருக்கும் சுவர் இடிக்கப்படாமல் இருக்க வேண்டும். புதிய மொழியை உண்டாக்க நேரு உறுதி பூண்டிருக்கலாம்; தமிழகத்தினையொத்த ஒரு பண்பாட்டுப் பூமியை அவரால் அழிக்க முடியாது.

இந்த நம்பிக்கையும் உறுதியுந்தான், ஒரு தலைமுறைகாலமாக இந்திச் சனியனை இந்தத் தமிழகம் எதிர்த்து நிற்பதற்கு காரணம். இந்தியை எதிர்ப்பது தமிழனுகப் பிறந்த ஒவ்வொருவருடைய இனவழிக் கடமையாகும். ஏகாதிபத்திய ஆங்கிலேயன் துப்பாக்கி முனையில் உருவாக்கிய “இந்தியா” எக்காலத்தும் ஒன்ருகவே இருக்க வேண்டுமா என்பது நமக்கு இரண்டாம்பட்சமான கவலைகளே. ஆனல், நாம் தமிழராகவே-திராவிடராகவே இருக்க வேண்டும்என்பதில்எதுவரினும் உறுதியாக இருந்துதான் ஆக வேண்டும். நாம் யாராக மாற வேண்டும் என்பதைச் சொல்ல எனக்கு உரிமையில்லை; அதே போல், நாம் நாமாகவே இருப்பதை கூடாது என்று சொல்பவனை நாம் எதிர்க்கவேண்டியதையும் புனிதக்கடமையாகக் கருதவேண்டும்.

என்றைக்காவது ஒருநாளில் ஒவ்வொரு மனிதனும் தனது தனித்தன்மைக்காக - மற்றவருடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் காணப்படும் வேறுபாட்டை உறுதி செய்துகொள்வதற்காக வாதாடிப் போராடித் தீரவேண்டிய நேரம் வந்துதான் தீரும். அந்த நேரம் நமக்கு இதுதான். திருக்குறளைக் காட்டிலும் உலகத்தில் எதுவுமே நமக்குப்பெரிதல்ல. தென்காசிப் புதை மண்ணில் தோண்டியெடுக்கும் முதுமக்கள் தாழியை ஆராய்ந்து கொண்டே, நாம் ஒருமைப்பாட்டுக்காக அதன் பேரால் ஒரு கொச்சை மொழிக்காக காலங் கடத்துவதில் பொருளே இல்லை.

படையெடுத்து வரும் இந்தியை நாம் எதிர்த்து வெற்றி பெற்றே தீரவேண்டும். இதில் பேரறிஞர் அண்ணு அவர்கள் காட்டும் வழியில் தி. மு. கழகம் வெற்றி பெற்றே தீரும். மொழி ஆதிக்கத்தை எதிர்த்து நாம் பெறுகின்ற வெற்றி, நெடுங்காலமாக இந்தச் சமுதாயத்தைப் பீடித்து வரும் தோல்வி மனப்பான்மையையும் வெற்றி கொள்ள நிச்சயம் பயன்படும். ஒருமுறை வெற்றிப்பாதையில் கால் வைத்துவிட்டால், நமது பழைய பெருமைகளைத் தற்காலத்திற்கேற்றவாறு மெருகேற்றிக்கொள்ள நமக்கு வழி கிடைத்துவிடும். அதன் பிறகு பேரறிஞர் அண்ணு அவர்களின் சீரிய தலைமை செய்யக்கூடிய அனைத்தும், இந்த உலகத்திற்கே புதியதொரு சித்தாந்தத்தைக் கொடுக்கும் என்பது உறுதி.

4 ஆண்டுகளல்ல-
40 ஆண்டுகளானுலும்
சிறை செல்லுவதற்கு நான் தயார்!

“தி மு. கழகத்தின் முன்புஇப்போது இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன; ஒன்று — இந்தி எதிர்ப்புப் போராட்டம்; மற்ருென்று— பிரிவினைத் தடைச்சட்டம்.''

''நான் அரசியலில் மெதுவாகச் செல்பவன். அவசரமாகப் போய் குழியில் விழுந்துவிட மாட்டேன். அதற்காகப் பயந்தவன் என்ருே—அஞ்சி ஒடுங்குபவன் என்ருே யாரும் என்னை நினைத்து விட வேண்டாம்!

இந்தியை எதிர்த்து நடக்கும் போராட்டத்தில் 4 ஆண்டுகளல்ல 40 ஆண்டுகள் என்ருலும் சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்.

-அறிஞர் அண்ணு.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கணக்குப் போட்டுப் பார்த்ததில்— நட்டம் கழுத்து வரை வராமல் கையை மட்டும் கடித்தது—சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியத்திலும்—தோழர்களுக்கு நல்ல கருத்துக்குவியலை இந்தச் சமயத்தில் தரவேண்டும் என்ற ஆர்வத்திலும்—உணர்ச்சியிலும் “கைக்கடியை'' பொருட்படுத்தாது மலர் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டேன்—ஈடுபட்டோம்!

மலர் உங்கள் கரங்களிலே தவழுகிறது. எண்ணியபடி மலர் சிறப்பாக இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

மலருக்கு என்று கட்டுரை கேட்டதும்—ஓய்வில்லாத பல பணிகளுக்கிடையில் கட்டுரை—கவிதை எழுதித் தந்து சிறப்பித்த கழகத் தலைவர்களுக்கும்—கவிஞர்களுக்கும்—கலைஞர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியறிதலைக் காணிக்கையாக்குகிறேன்.

எம். ஜி. ஆர். எஸ். எஸ். ஆர். ஆகிய இருவரும் திருவண்ணுமலை இடைத் தேர்தலில் தீவிரமாகப் பங்கு கொள்ளுவதால் அவர்களின் கட்டுரை இடம்பெற முடியாது போயிற்று. திருவண்ணுமலை வெற்றிச் செய்தியோடு இருவர் கட்டுரையும் நிச்சயம் இடம்பெறும்.

ஒரு இயக்கப் பத்திரிகை வேகமான வளர்ச்சி பெறுவதற்கு —அதை வாங்கி ஆதரவு தரும் தோழர்களும்—ஆர்வத்துடன் விற்பனை செய்யும் விற்பனையாளர்களும் இரண்டு கண்கள் போன்றவர்கள். இந்த இரண்டு கண்மணிகளும் ‘தென்னகத் தலைவன்’ வெற்றிகரமாகப் பவனி வருவதற்குப் பேருதவியாக இருந்து வருகிருர்கள் என்பதை எண்ணும் போது மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

‘தென்னகத் தலைவன்’ காலங்கடந்து வெளிவருவதாகப் பலர் குறைப்பட்டு எழுதுகிருர்கள். சில விற்பனையாளர்கள் பட்டியல் தொகையினை பாக்கி வைத்துக்கொள்ளாமலும், தாமதம் செய்யாமலும் அனுப்பி வைத்து ஒத்துழைப்பார்களேயானுல் கிழமை தோறும் இதழ் குறித்த காலத்திற்கு முன்பே விற்பனைக்குக் கிடைக்கும். விற்பனையாள நண்பர்கள் இதனை செவிமடுத்து அவசியம் ஒத்துழைப்புத் தருவார்கள் என நம்புகிறேன்.

மலர் பற்றி உங்கள் கருத்தினை எழுதுங்கள்.

படையெடுத்து வரும் இந்தி ஆதிக்கத்தைப் பாதி வழியிலேயே திருப்பி அனுப்பத் தயாராகுங்கள்!

கொடுமையான சட்டம் கொத்திக் கிழிக்க வருகிறது நம்மை!

“நாற்பது ஆண்டுகள் என்ருலும் நான் சிறைபோகத் தயார்'' என்று அண்ணு வீரமுழக்கமிட்டுவிட்டார்.

அடுத்த தலைமுறைக்குக் கிடைக்காத அறிவுப் பெட்டகத்தை—அன்பு இதயங்களில் குடியிருக்கும் அண்ணலை—நமது உயிருக்கும் உயிரான தெய்வத்தை சிறையில் வைத்து விட்டு நாம் சும்மா இருப்போமா? நம்மால் சும்மா இருக்க முடியுமா? நாமென்ன ஆமைகளா? ஊமைகளா? பொட்டுப் பூச்சிகளா? புன்மைத் தேரைகளா? இல்லை—தமிழ் நாட்டு அமைச்சர்களைப் போன்ற அடிமைகளா?

நடைபெற இருக்கும் போராட்டம்—ஒருநாள் நடைபெறும் தேரோட்டமல்ல! டெல்லி ஆதிக்க வெறியர்களுக்கும்—நமக்கும் நடைபெற இருக்கும் நீண்டகாலப் பாரதப் போர். இதில் வெற்றி பெறுவது நாமா—அவர்களா? வாழ்வா—சாவா?

இதற்கான முடிவு காணத்தான் காளையரே! களம் நோக்கி வருக! வருக! என அழைக்கின்ருர் அண்ணு! ஆகஸ்டில் போராட்டம்!

அண்ணன் காட்டிடும் வழியில் நடக்க—நாட்டுப் புலிகளே விரைக! ஈட்டி முனைகளே எழுக! தீட்டிய வாள்களே திரள்க!



(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கடலிலே கலந்து தனக்கிருக்கும் தனித்தன்மையை போக்கடித்துக் கொள்ள விரும்பாத பண்பாட்டுணர்வு, தமிழகத்திலே உருவாகி வங்காளத்திலே அப்போது வெடித்தது. பரவலாக எல்லோரும் தியாகம் செய்து பெற்ற சுதந்திரத்தைத் தங்களுக்கே இப்போது பட்டா மாற்றிக் கொண்டிருப்பதைப் போல, அப்போதும், இந்திப் பகுதி லம்பாடிகள், சிப்பாய்களிடையே இருந்து வந்த அதிருப்தியைப் பயன்படுத்தித் தங்கள் தாயாதிச் சண்டையை தீர்த்துக்கொள்ள முயற்சி செய்தார்கள். அதில் தோற்றுப் போகவும், முதல் சுதந்திரப் போராட்டம் இந்திப் பகுதியில் தான் நுழைந்ததாகச் சொல்லித் தங்களது சரித்திரமாக அதனை திருப்பிக்கொண்டார்கள். சரித்திரமே இல்லாத பகுதிக்கு இப்படியாவது ஒரு சரித்திரம் கிடைத்ததுபற்றி நமக்குத் திருப்தியே. 1857 கலகத்தைக் காட்டித்தான், தமிழகத்தில் வீரப் பரம்பரைக்கான விளக்கம் தேடவேண்டும் என்றில்லை. அது, உத்திர-மத்தியப் பிரதேசங்களென்றும், இராஜஸ்தான் என்றும் இனவழி மொழி வழியற்ற மாநிலங்களைப் போன்றவற்றிற்கே உரிய சரித்திரமாகவே போகட்டும். ஆனால், படுகாலித்தனமான ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய தன் காரணமாக மூனிச் நகரத் தெருக்களில் செத்து வீழ்ந்த 15 நாஜிகளுக்கு, ஜெர்மானிய நாட்டின் அரசியல் சட்டமாக்கிய தனது நூலை இட்லர் காணிக்கையாக்கினன் என்பது போல், தங்கள் காட்டு தர்பார்களைத் தொடர்ந்து நடத்த ஆங்கிலேயர்களை அன்று எதிர்த்தார்கள் என்பதற்காக, இலட்சுமிபாய், குன்வார்சிங் பரம்பரைக்கே இன்றைய அரசியல் சட்டத்தைக் காணிக்கையாக்கிக் கொடுத்துவிட இன்றையத் தலைமுறை தயாராக இல்லை என்பதை இந்தித் திணிப்பை எதிர்ப்பதின் மூலம் இந்தத் தமிழகம் உறுதியாகக் காட்ட வேண்டிய நேரம் இதுவே. இந்தித் திணிப்பை நியாயப்படுத்திப் பேசும் ஒவ்வொரு சமயத்திலும், உத்திரப் பிரதேசம் மத்தியம் பிரதேசம்தான் சுதந்திரப் போராட்டத்தில் -முன்னணியில் இருந்ததாக லால்பகதூர் சாஸ்திரியும் மற்ற இந்தி வெறியர்களும் சொல்லித் திரிகிருர்கள். இவர்களின் இத்தகைய தற்பெருமை, அடிப்படைகளை அப்படியே ஆராயும் கள், வேலுத்தம்பி ஆகியோரின் வழித்தோன்றல்கள் நாம். திப்புவின் சரித்திரத்தை ஆழ்ந்து படித்தவர்கள் நாம். ஆங்கிலேயரை எதிர்த்து இந்திப் பகுதி போராடியதற்கும் தெற்குபகுதிபோராடியதற்கும் அளவில்- கொள்கையில் - நேர்மையில்-உணர்வில்நிரம்பவேறுபாடு இருக்கின்றன. அதே போல்தான் பெற்றுள்ள சுதந்திரத்தை பேணிக் காப்பதிலும் வழிவழியாக வரும் பண்பாடும் சரித்திரமும் வேறு வேறு வழியைக் காண்பிக்கின்றன.

எந்த வழி சரியான வழி என்பது இப்போது முக்கியமல்ல; இந்திக்காரர்கள் போவது தவருன வழி என்பதுதான் இப்போது உடனடியாக சொல்லித் தீரவேண்டிய அவசியத்திலிருக்கிறது. மனித குல வரலாற்றின்படி, இந்தி பேசும்

[illegible] அடிமையாகவே இருந்து

தென்னகத்தை அடிமைகொள்ள வரும் இந்தி அரக்கி.

விடும் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. வாரிசு உரிமைக்காகவும், பென்ஷன் தகராறுக்காகவும் ஆங்கிலேயருடன் பிணங்கிக்கொண்ட இந்திப் பகுதி "இஸ்பேட் ராஜாக்கள்" உண்மையான சுதந்திரப் போராட்டத்தில் முக்கியமான தலைவர்கள் என்று யோக்கியதைப் பெறக் கூடியவர்களா என்பதையும், இந்தபொய்யான யோக்கியதையைகாட்டியே இந்திப் பகுதிதான் இந்தத் துணை கண்டத்தின் உயிர்நாடி என்ற "ஒருமைப்பாட்டு" ஓலத்தை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டுமா என்பதையும், தெளிவாகவே நாம் கேட்க விரும்புவது சட்டத்தைக் காட்டித் தவருனதெனச் சொன்னலும், நியாயத்தின் அடிப்படையில் நிற்காமல் போகாது. ஏனென்றுல், கட்டபொம்மன், மருது சகோதரர் பழக்கப்பட்டது. இருபதாம் நூற்றுண்டில் இந்த நாட்களிலும் அங்குள்ள பஸ்தார் சமஸ்தானத்தில் நடக்கும் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டைக் காணகிறோம். இந்தப் பகுதியே பண்பாடற்ற-பழக்க வழக்கத்தில் முதிர்ச்சியடையாத பகுதியாகும். ரோமானியர்கள் கிரேக்கர்களை ஆயுத பலத்தால் முந்திக்கொண்டு அடக்கியாளும் தகுதியைப்பெற்ருர்களே தவிர, அவர்களுக்குப் பண்பாட்டினையும்மொழியையும் கடன் கொடுத்துதவும் "கர்த்தாக்களாக" இருந்ததில்லை. இருந்திருக்கவும் முடியாது. இந்தி பேசும மக்கள் தமிழகத்தைப் பொறுத்தவரை தாத்தாரியர்கள். மங்கோலியக் காட்டு மிராண்டிகளின் எஞ்சிமிஞ்சிய வாரிசுகள். நாகரிகமும் பண்பாடும் நடமாடக்கூடிய கடற் கரையோரமாக இந்திப் பகுதி தனது பண்பாட்டை வளர்க்கவில்லை. கொள்ளைக்காரர் குகைகளையும் பாலைவனப் பகுதிகளையும் கொண்ட இடங்கள் பரிதாபத்துக்குரிய பகுதிகள் என்பது தவிர பண்பாட்டையும் கலாச்சாரத்தையும்பற்றிப் பீத்திக்கொள்ளக்கூடாத இடங்கள்.

இந்தி பேசும்பகுதிக்கு இருக்கும் ஒரே சிறப்பு என்னவென்ருல், அது போதைப் பொருள்களைப் பெரும் அளவு பயிராக்கி ஆங்கிலேயரை மகிழ்வித்தது என்பதுதான். உலகத்தில் "அபினி இராசதந்திரம்" என்ற சொல் இந்தி பேசும் பகுதியின் விளைச்சல் மூலம் அகராதியில் ஏறிய பெயரெனவே சொல்லவேண்டும். சீனுவுக்கும் மற்ற தூரக்கிழக்கு நாடுகளுக்கும் அபினி ஏற்றுமதி செய்யப்பட்டு அப்போதைய ஆங்கில ஆட்சிக்கு இலாபம் கிடைத்தது இந்தப் பகுதிகள் உதவியால்தான். கற்பூரம் இருந்த இடம் மணம்வீசும் என்பதுபோல போதைப் பொருளை விளைவித்து உலகத்தின் நாடி நரம்புகளைச் செயலற்ற தாக்குவதில் முக்கிய பங்கு வகித்த இந்தி பேசும் பகுதி, இன்றைக்கு, அதிகார போதை, மொழிப்போதை, ஆதிக்க போதை அத்தனைப் போதைகளும் ஏறி பண்பாட்டுக்கொடி கட்டியாண்ட தென்னக மக்களின் உயிருக்கொப்பானமொழி பண்பாடு-தனித்தன்மை ஆகியவைகளை செயலற்றதாக்க வரிந்து கட்டி நிற்கிறது. பெற்ற தாயிடமே தன் மேனி அழகை

(20-ம் பக்கம் பார்க்க)

வீண் வேலை!

பள்ளிக்கூடங்களிலாயினும் சரி, அரசியலிலாயினும் சரி இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிப்பது தமிழர்களுக்கு இழைக்கும் ஒரு பெருந் துரோகம். தேசிய பாஷை, தேசிய பாஷை என்று போலிக் காரணம் சொல்லி எல்லோரையும் இத்தி கற்கும் படி கட்டாயப் படுத்துவதை ஆட்சேபிக்கிறேன். எந்த வளமேதும் இல்லாத மொழியா நாடு முழுமையும் பரந்து ஆட்சி நடத்த வேண்டும் ?

இந்தி மொழியைக் கற்பதற்கென்று கைக்கொள்ளும் முயற்சி, சமயம், பொருள் முதலியன அனைத்தும் வீண். இந்தியைத் திணிப்பதும், இந்தி படிக்காதவர்களுக்கு அரசியலில் வாழ்வில்லை என்று ஆக்குவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையே அல்ல.

—கவிமணி
தேசிகவினயகம்.

பாசிச மனப்பான்மை!

இந்தியைத் தமிழ் போன்ற மொழிகள் மீது திணிக்கும் பாசிச மனப்பான்மை இருக்கக்கூடாது. இந்தியை மட்டுமல்ல; எந்த மொழியையும் — அதற்கு எத்தனை விசேஷ குணங்களோ மதிப்போ இருந்தபோதிலும் சரி, மக்கள்மீது திணிப்பதென்பது பெருந் தவருகும்.

இந்திக்குத்தான் பொது மொழியாவதற்குரிய தகுதி இருக்கிறது என்று சொல்வது, மற்ற மொழிகளுக்கு இருக்கும் ஆற்றலையும், பெருமையையும் அவமதிப்பதாகும் என்றும், இந்திக்கே தேசிய யோக்கியதைகள் இருப்பதாகக் காட்டுவது, மற்ற மொழிகளை தேசீய யோக்கியதையற்ற மொழிகள் என மறைமுகமாகக் கூறிக் கேவலமாகக் கருதச் செய்வதாகும் என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

—நாரண.
துரைக்கண்ணன்.

இந்திஸ்தான்

கே.ஏ.மதியழகன்

"நாங்கள் வெளியேறியதற்குப் பிறகும், எதிர்கால மாணவர் சமுதாயம், வரும் தலைமுறைகளிலும் ஆங்கில இலக்கியப் பொன்னேடுகளைப் புரட்டுவார்கள். கவிஞன் ஷெல்லியின் புரட்சிக் கீதங்கள் அவர்களைப் புல்லரிக்கும். பைரனின் ஆவி, இன்னும் கட்டப்படாத பல்கலைக் கழக மண்டபங்களைச் சுற்றிக்கொண்டேயிருக்கும். உங்களது பாராளுமன்றத்திலும், சட்டசபைகளிலும், சொல்லின் செல்வன் பர்க்கின் சங்கநாதம் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இவைகளை வையகத்தின் பல பாகங்களுக்கு அளித்தது போல் இந்தியாவிற்கும் அளித்தோம். ஆனால் நாங்கள் அளித்த இந்த வித்து பூத்து மலர்ந்து, கனி குலுங்கும் இடமாக இந்தியா அமையலாம்" என்ற வாசகங்கள் காங்கிரஸ்காரர்களின் பெரும் கண்டனத்திற்காளான நூலான "இந்தியாவைப் பற்றிய தீர்ப்பு" (Verdict on India) என்ற நூலின் கடைசி வாக்கியங்களாகும்.

மிஸ் மேயோவின் நூலையும் மிஞ்சிவிட்டது என்று குற்றஞ் சாட்டினர்; பெவர்லி நிக்கோலஸ் எழுதிய 'இந்தியாவின் தீர்ப்பு' என்ற நூலைப்பற்றி. அத்தகு புயலைக் கிளப்பிய நூலை நான் இண்டர்மீடியட் வகுப்பு படித்த போது முதன் முறையாகப் படித்தேன். வெள்ளையரை வெளியேற்றிவிடலாம்; ஆனால் ஆங்கிலம் ஓர் இடம் பெற்றிருப்பதை அகற்ற முடியாது என்று ஆங்கில எழுத்தாளன் உணர்ச்சிப் பெருக்கோடு வரைந்துள்ள வாசகங்களை பல முறை நினைத்துக் கொள்வதுண்டு.

ஆனால் நான்கு ஆண்டுளுக்கு முன் பாராளுமன்றத்தில் பிராங்க் அந்தோணி கொண்டு வந்த 'ஆங்கிலமும் இந்திய தேசிய மொழிகள் பதினான்குடன் ஒன்ருக வேண்டும்' என்ற தீர்மானத்தின்மீது பண்டித ஜவஹர்லால் நேரு பேச்சைப் படித்தபோது நிக்கலஸ் நேருவிடம் வெற்றி பெற்றுவிட்டான் என்ற எண்ணம் பதிந்தது.

நேரு அன்று பேசிய உரையின் சில வாசகங்களைக் கீழே பொறிக்கிறேன்,

"இந்தி பேசாத மக்களிடையே இந்தி கட்டாயமாகப் புகுத்தப்படாது.

ஆங்கிலம் காலவரையறையில்லாமல் மக்கள் விருப்பம் போல் நீடிக்கும் இந்தி படிப்பது குறித்து தென்னக மக்கள் பேரெதிர்ப்பு தெரிவிக்கின்றனர். கட்டாயத் திணிப்பு முறை வெறுப்பை உண்டுபண்ணுகிறது. வலுக்கட்டாயமாகத் திணிக்கும் எல்லா முறைகளும் ஒழிய வேண்டும் இன்னும் ஒருபடி அதிகமாகவே சென்று சொல்லுகிறேன். தென்னக மக்களுக்கு இந்தி கற்க விருப்பமில்லா விட்டால் அவர்கள் இந்தி கற்கத் தேவையுமில்லை. இந்தி பேசுபவர்களையும், தென்னக மக்களையும் ஒன்று சேர்க்க அது தான் வழி.

இரும்புப் பலகைகளில் இரயில்வே போர்டுகளில் எழுதுவதால் இந்தி தழைத்துவிடாது. இதயத்தில் மலரும் மென்மையான மலராக அமைய வேண்டும்.

தேவ நகரி லிபி தேவையில்லை. அகிலமுழுதும் அறியும் ரோமன் லிபி இருக்கலாம்.

ஆங்கிலம்தான் விஞ்ஞானம், நுண்கலை ஆகியவற்றிற்கு திறவுகோல்.

அந்தப் பலகணியை அடைத்துவிட்டால் இருட்குகையிலே நாம் அவதிப்பட வேண்டியதுதான்.

"ஆங்கில மொழி, கால வரையின்றி, இந்தி யல்லாத மொழி பேசும் மக்கள் விருப்பம் போல் நீடிக்கட்டும்"

நேருவின் இந்த உரைக்கும் இந்தி திணிப்பு மசோதாமீது அண்மையில் ஆற்றிய உரைக்கும் எவ்வளவு பெரிய இமாலய வீழ்ச்சி! என்னுடைய வாக்குறுதி எப்படி சர்க்காரின் வாக்குறுதியாகும் என்று காலையிலும் வாக்குறுதியை மசோதாவில் சேர்ப்பது புதிய மரபை சிருஷ்டிப்பதாகாதா என்று மாலையிலும், எத்தனை நாளைக்கு ஆங்கிலம், என்ருவது இந்தி வந்துதானே தீர வேண்டும் என்று இரவிலும் பேசும் விந்தை மனிதராக மாறிவிட்டார் நேரு பிரான். சுருங்கச் சொன்னல் இந்தி வெறியர்களின் சிறைக் கைதி நேரு.

இப்போது நிறைவேறியிருக்கும் மசோதா வராமல் 1965-ம் ஆண்டு முதல் இந்திதான் அரசுக்கட்டில் மொழி என்று கூறியிருப்பார்களானல் தமிழ் மக்கள் கண்களாவது திறந்திருக்கும். இந்த மசோதா மூலம் தமிழ்த் தாயின் மார்பிலே கட்டாரியைப் பாய்ச்சுவதற்கு பதில், வர்ணம் நிறைந்த கோப்பையில் விஷத்தைக் கலந்து, பழரசம் என்று தட்டிலிலே வைத்துள்ளனர்.

கடந்த ஆண்டு வடகிழக்கு எல்லையில் சீனக்காரன் நுழைந்தபோது, இந்தப்பெரும் உபகண்டத்தில் ஓர் ஒற்றுமைச் சக்தி உருவாகியது, சீனக்காரனை மலைக்க வைத்தது நமது ராணுவ பலமல்ல. படையெடுப்பு என்றுசொன்னவுடன் தென்னகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், அரசுக்கு எதிராக அமளியை உண்டுபண்ணும், கம்யூனிஸ்டுகள் கலகம் செய்வர் முஸ்லீம் மக்கள் விரோதமாக கிளம்புவர். நாம் உள்ளே நுழைந்து விடலாம் என்று கருதினன். அவனது கற்பனையில் மண்ணைப் போட்டோம். இன்று இந்தி வெறியர்கள், அந்த ஒற்றுமைச் சக்திக்கு உலைவைக்கும் தோரணையில் ஈடுபடும்போக்கைப்பார்த்தால் அவர்களில் சிலர் சீனக்காரனின் உளவாளிகளாகவும் ஒற்றர்களாகவும் ஆகிவிட்டார்களோ என்று நாம் பலமாக சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இந்திதான் வேண்டும் என்று இந்தி வெறியர்கள் விரும்புவார்களானல் அவர்களுக்கு ஓர் வழியுள்ளது. இந்தி பேசும் மாநிலங்கள் நம்மிடமிருந்து பிரிந்து, பாகிஸ்தான் என்பது போல், திராவிட நாடு என்பது போல் "**இந்திஸ்தான்**" என்ற நாட்டை நிர்மாணித்துக் கொள்வதுதான் அவர்களுக்கும் நல்லது. நமக்கும் நல்லது. நேருவோ, சாஸ்திரியோ இந்திஸ்தான் நாட்டுத் தலைவராக இருக்கட்டும். நமது அண்ணை அவர்களையே அனுப்பி அதன் ஆரம்ப விழாவில் ஆசீர்வாதம் செய்யச் சொல்வோம்.

அவர்கள் தூதரகம் இங்கே இருக்கட்டும். நமது தூதரை அங்கு அனுப்புவோம். அதை விடுத்து ஆதிக்க நினைவோடு இந்தியை நயத்தாலோ பயத்தாலோ திணிப்பதை ஒரு போதும் தென்னகம் ஏற்றுக் கொள்ளாது. கடைசித் தமிழனின் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் இந்திக்கு எதிரான போராட்டம் நீடித்தே தீரும்.



போராட்டம் என்று பொதுக்குழு முடிவெடுத்துச் சொன்னவுடன் - சர்வாதிகாரம் கொண்ட இந்த சர்க்கார் அண்ணா அவர்களைக் கைதுசெய்து நீண்ட நாள் சிறை வைத்துவிட்டால் அருமைத் தோழர்களே! அவர்தம் தம்பியரே நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்கள் கருத்தை கட்டுரையாகவோ - கவிதை வடிவிலோ எழுதி அனுப்புங்கள்.

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

வருணிக்கும் அடக்கமில்லாத தான்தோன்றிபெண்ணைபோல, தமிழகத்திலேயே இந்தியின் அருமை பெருமைகள் பேசப் படுவது, சரித்திரத்திலேயே கார்த்தேஜ் நகரத்தில் ரோமானியப் பண்பாடு உயர்வாகப் பேசப்பட்ட கொடுமைக்கு ஒப்பானதாகும்.

இந்தியால் ஏற்படப்போகும் பயன் என்ன? அது இல்லாவிட்டால் நேரப்போகும் இழப்பு என்ன?

இந்த கேள்விகளுக்கு விவாத ரீதியான பதிலைக் கேட்க நாட்டின் நடுத்தர வர்க்கத்திற்கே அதிகப் பொறுப்பும் அவசியமும் இருக்கிறது. ஏனெனில் ஜனநாயகம், நடுத்தர வர்க்கத்தின் நிழலில்தான் கோலோச்சும் பலம் படைத்ததாகும். ஜனநாயகத்தை சீராகக் கடைபிடிக்கும் எந்த நாடுகளிலும், நடுத்தர வர்க்கத்தின் விழிப்புணர்வும் கண்காணிப்பும்தான் அரசியலை இயக்கிச் செல்கின்றன. இந்தக் காரணத்தால் தான், இந்தி, பாமரமக்களின் பிரச்சினை அல்லவென்று, மிகத் துணிச்சலாக இந்தநாடு அதிகார வெறியர்களால் சொல்லப் படுகிறது. இதனல்தான். ''பாட்டாளி மக்களின் சாம்ராஜ்யத்தை'' எப்பாடு பட்டாவது, எந்தத் துரோகத்தைக் கையாண்டாவது ''ஸ்தாபிக்க'' நினைக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியும் மொழிப் பிரச்சினையில் ஆதிக்க வாதிகள் பக்கமே இருக்கிருர்கள். ஆட்சிமொழி என்பது நடுத்தர வர்க்கத்தின் வாழ்வை சீரான எடையில் வைத்திருக்கும் துலாக்கோல் போன்றதாகும். இந்த வர்க்கத்திற்கு காங்கிரஸ் பிறவி எதிரியாக மாறிவிட்டதென்பது உலகம் அறிந்த சேதி. கம்யூனிஸ்டுக் கட்சி எந்தக் காரணத்தைக் கொண்டும் நடுத்தர வர்க்கத்தை ஊக்குவிக்காது. அவர்கள் வாழ்வில் நிம்மதி சேர்வதைச் சகிக்காது. ஏனென்ருல் தற்போதைய கம்யூனிஸ்டுக்களின் பிறவிஎதிரி. முதலாளித்துவம் அல்ல; விழிப்படைந்த நடுத்தர வர்க்கமே. வயிற்றுப் பசியைக் காட்டிலும் வாழும் நெறியே நடுத்தர வர்க்கத்தின் குறி. இதுதான் காங்கிரஸ் கட்சியைக் கைதூக்கிவிட்டது. தி. மு. கழகத்தைத் தற்போது நம்பியிருக்கிறது. தேசியமும் சோசலிசமும் எங்கும் இருக்கவேண்டும் என்பது எல்லோருடைய ஆசையுமாக இருக்குமானல், அதற்கு முதற்படியாக நடுத்தர வர்க்கத்தின் நியாயமான ஆசைகளை நிறைவேற்றி வைத்தல் வேண்டும்; அதனுடைய உண்மையான பிரதிநிதித்துவ அமைப்புகளின் யோசனைக்குச் செவிமடுக்க வேண்டும். உண்மையான ஜனநாயகவாதி முடியாட்சியை ஆதரிக்க மாட்டான் என்பது எத்தகைய உண்மையோ, அத்தகைய உண்மையுடன் நடுத்தர வர்க்கமும் அரசியலில் பங்கு பெற்ருகவேண்டும் என்று போராடுவான்.

நேரு இதற்காகப்போராடத் தயாராக இருக்கிருரா? இல்லை அவர் ஜனநாயகத்தையும் மக்களாட்சியையும் புகழ்பாடிக் கொண்டே, மனிதனின் அடிப்படை உரிமைகளான ஐந்தாறு உரிமைகளில் குறைந்தது நான்கு உரிமைகளையாவது பறித்துச் சட்டம் இயற்றும் கொடுங்கோன்மைக்கு வழிவிடுபவராகவே அவர் இருக்கிருர். அவர் இந்திபற்றிப் பேசும் போது சொல்வதெல்லாம் ''ஒருமைப்பாட்டுக்கு ஒரே மொழி தேவையல்லவா?'' என்பதுதான். ஜனநாயகம் மலர்ந்த இத்தனை ஆண்டுகளில் ஜனநாயக ஆட்சியைப்பற்றி அக்கரை காட்டிய எவரும், ஒரு மொழிதான் ஒருமைப்பாட்டுக்கு உகந்தது என்று சொல்லவே இல்லை. இட்லர்கூட ஜெர்மானிய இனக்கலப்பு - மொழிக் கலப்பு படைத்தவர்கள் எங்கிருந்தாலும், அந்த இடம் ஜெர்மானியப்பேரரசுக்குட்பட்டதாகவே கருதப்படுதல் வேண்டும் என்றுதான்சொன்னன். நாஜிசவெயின் பேரால்அவன் ஆக்கிரமித்த நாடுகளைக்கூட அந்தந்த இனங்களின் தனித்தன்மையை அழிக்காமல் இருந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. போலந்துக்காரர்கள் ஜெர்மானியர்களைக் காட்டிலும் கீழ்ப் பிறவி மக்கள் என்று சொல்வதற்கு அவன் நா கூசவில்லை. ஆனல், போலந்தியர்கள் போலந்தியர்களாகத்தான் அவனுக்குப் பட்டார்களே தவிர. இந்தித் திணிப்பின் மூலம் செய்வது போல் இனத்தின் தனித்தன்மையே பாழ்பட்டுப் போகவேண்டுமஎன்று கருதிக்கொண்டிருக்கவில்லை. இதனல் இட்லர் நல்லவன் என்று சொல்வதாக ஆகாவிட்டாலும், சர்வாதிகாரத்தின் பேராலும் அவன், நேருவின் அளவுக்குத் துணியவில்லை என்பது முக்கியம்.

ஜனநாயகத்தின் மேலான தன்மைகள் இன்னும் நேருவிடம் ஒளிவிடுகின்றன என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கையின் பேரால் கேட்க விரும்புவதெல்லாம் இவைதாம்.

இந்தியா, பல்வேறு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தேசியமாநிலங்களைக்கொண்ட கூட்டாட்சி அல்லவா?

இங்கிலாந்து, பிரான்சு, இலங்கை போன்றுஒரே ஆட்சி உருவம் படைத்ததா?

ஒரே ஆட்சிமுறைபடைத்த கனடா, பெல்ஜியம் ஸ்விட்ஸர்லாந்து போன்ற நாடுகளிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சி மொழிகள் இல்லையா?

(24-ம் பக்கம் பார்க்க)

வீங்குகிற தோளுக்கு விருந்து

கவிஞர் முடியரசன்

மணம்பரப்பும் பூங்காவுள் கள்ளிக் கூட்டம்
வளரவிடப் பார்ப்பதுண்டோ? வாழைத் தோப்பில்
கணங்கணமாய் மந்திபடை எடுத்து வந்தால்
களிப்போடு வரவுரைப்போர் கண்ட துண்டோ?
உணவாகும் நெல்வயலுள் உதவாக் காளான்
உறுகளைகள் படருவதை விடுவ துண்டோ?
இணையில்லாத் தமிழ்வழங்கும் தமிழர் நாட்டில்
இந்திமொழி புகவிடுதல் கண்டோம் கண்டோம்.

அரியேறு பலகுழுமி வாழும் காட்டில்
அஞ்சிவரும் நரியாட்சி செலுத்தல் உண்டோ?
விரிகுரலின் கோட்டானை அழைத்து வந்து
விரும்புமிசைக் குயிலினத்தை ஆள்க என்று
சுரிகைமுடி சூட்டுவதைக் கண்ட துண்டோ?
தொன்னூல்கள் பலதொகுத்த பெட்ட கத்துள்
சிறியதொரு அந்துக்கும் ஆட்சி யுண்டோ?
செந்தமிழை ஆளவரும் இந்தி கண்டோம்.

மூன்ரும்நாள் முளைத்துவரும் இந்திப் பெண்ணே!
முனைகின்ருர் உன்புகழைப் பரப்பிக் காக்க;
ஈன்ருளைக் காப்பதுவோர் கடமை யாகும்;
எங்களையும் ஈன்றெடுத்த ஒருத்தி யுண்டே!
ஆன்ரேரும் சொலற்கரிய காலங் கண்ட
அன்னையையும் காப்பதெங்கள் கடமை யன்ரே?
சான்ரேர்கள் பழிக்கும்வினை செய்ய வேண்டாம்;
தடுமாறும் நின்புதல்வர்க் கிதனைக் கூறு!

புன்மக்கள் பெற்றெடுத்தாய் பழிசு மந்தாய்!
பொதுமகளாய் உனையாக்கத் துடித்தல் காணுய்!
நன்மைக்கே சொல்கின்றேன் கற்பைக் காக்க
நாடுவதே முறைமையாகும்; தீமை வந்த
பின்னுக்கு வருந்துவதிற் பயனே இல்லை;
பேசாதார் தலைவாசல் நுழைதல் நன்ரே?
நன்மக்கள் மனம்வருந்த நடக்க வேண்டா;
நாடுகின்ற கடைவாசல் நாடிச் செல்க.

முன்னமிரு முறைநீயே வந்த போது
முழுமூச்சாய்த் தமிழரெலாம் எதிர்த்து நின்ருர்;
என்னினத்தார் இருதோழர் உயிர்கள் தந்தார்;
ஏந்திழையார் துயருழந்தார்; குருதி சிந்திப்
பன்னரிய கொடுஞ்சிறையுள் வீரர் புக்கார்
பைந்தமிழைத் தாய்மொழியைக் காத்து நின்ருர்;
இன்னுமிங்கு வன்முறையால் நுழைவா யென்ருல்
எதற்கெடுத்தோம் இவ்வுடலம்? ஒருகை பார்ப்போம்.

தூங்குகிற தமிழ்ப்புலியை இடறி வீழ்ந்த
துணைவிழியும் இல்லாதான் நிலைமை போல
ஏங்குகிற வடவர்தமக் கொன்று சொல்வேன்
என்னினத்தார் மொழிவெறியில் சளைத்தா ரல்லர்;
வீங்குகிற தோள்களுக்கு விருந்து வைக்க
விழைவீரேல் மொழிப்போரைத் தொடர்க;- போரைத்
தாங்குகிற வலிமையுண்டு. வீரம் உண்டு,
சாவதற்கும் அஞ்சுகிலோம் தமிழைக் காப்போம்.

அறப்போரைத் தொடங்குதற்குக் காஞ்சிச் செம்மல்
அண்ணுதம் முரசொலியை முழக்கி விட்டார்;
வரப்போகும் மொழிப்போரில் அணிவ குக்கும்
வயப்புலிகள் கூட்டமொரு கடலை மிஞ்சும்;
இறப்போர்கள் சிந்துகின்ற குருதி வெள்ளம்
எழுந்தெழுந்து தலைகளுடன் அலைகள் வீசும்,
சிறப்போடு வருமிந்தி அதனுள் சிக்கிச்
சீரிழந்து நாணிழந்து சிதறி ஓடும்.

வீடென்ன மனையென்ன மக்க ளென்ன
வீணுக்கு வாழ்வென்ன பதவி என்ன?
நாடென்ன மொழியன்னை நலியும் போது;
நாமென்ன மரமென்ன நினைந்தார் கொல்லோ?
ஓடென்ன மெலிந்தென்ன? நரம்பி லெல்லாம்
ஓடுவது புண்ணீரோ? செந்நீர் வெள்ளம்;
ஈடென்ன கண்டதுண்டு தமிழ்மொ ழிக்கே
ஈந்திடுவோம் நம்முயிரை; வாகை கொள்வோம்.

படிக்காத மேதையே பதில் சொல்லுவீரா?

இந்தி பேசாத மாநிலத்து மக்கள் பேராபத்தில் சிக்கித் தவிக்கிருர்கள் என்பதை ‘டெக்கான் எரால்டு’ என்னும் ஏடு இப்படிச் சித்தரித்துக் காட்டுகிறது.



இந்தித் திணிப்பு—இந்தி பேசாத மக்களின் உயிரைப் பலி வாங்க வரும் கட்டாரியைப் போன்றது என்று விளக்கிச் சொல்லுகிறது ‘சுயராஜ்யா’ ஏடு.

நேரு இந்தி வெறியர்களுக்கு அடங்கி—அவர்கள் காட்டும் வழியில் கோழைத்தனமாக நடந்து செல்லுகிருர் என்பதை ‘மெயில்’ ஏடு இப்படிச் சித்தரிக்கிறது.



நேரு கொடுத்திருந்த உறுதிமொழியில் சாஸ்திரியார் நெருப்பு வைத்துவிட்டார் என்று படம் போட்டுக் காட்டுகிறது ‘ஆந்திர சசித்திரா’ என்னும் தெலுங்குப் பத்திரிகை.



இந்தித் திணிப்பு வெறித்தனம் டெல்லி சர்க்காரையே கவிழ்த்து விடப் போகிறது என்று எதிர்கால உண்மையை சித்திரமாய்த் தீட்டிக் காட்டுகிறது ‘சங்கர்ஸ் வீக்லி’.

மானத்தைவிட மந்திரிப் பதவி முக்கியமா?



பாமரரே! படிக்காத மேதையே! பச்சைத் தமிழரே! “இந்திக்கு எதிர்ப்பு தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறது. அதுவும் தி.மு. கழகம் மட்டும்தான் கூச்சல் போடுகிறது” என்று போகிற இடமெல்லாம் போலீசாரின் துணையோடு தைரியமாகப் பேசி வருகிறீரே—மேலே உள்ள கருத்துச் சித்திரங்களைப் பாரும், அவை யாவும் தி. மு. கழக பத்திரிகைகளில் வெளிவந்தவையா?

அந்தப் பத்திரிகைகள் அத்தனையும் தமிழ்நாட்டிலிருந்துதான் வெளிவருகின்றனவா? படிக்காத மேதையே பதில் சொல்லும். இந்தித் திணிப்பை எதிர்த்து துணைக் கண்டமே துடித்துக் கொண்டிருக்கும் பொழுது நீர் மட்டும் இந்தி வெறியர்களுக்குக் கால் பிடித்துக்கொண்டிருக்கிறீரே? மானம் போகவில்லையா? மந்திரிப்பதவி என்ன அத்தனை சுகமா?



அடிமைத்தளையை உடைத்தெறிவோம்

கி. மனோகரன் எம்.ஏ



இந்தி வெறிபிடித்தோர்களின் ஏஜண்டாகத்தான் இன்றைய தினம் இந்திய சர்க்கார் பணியாற்றி வருகிறது. இந்தி வெறியர்கள்தான் தங்கள் மொழி ஆதிக்கம் பெற வேண்டும் என்பதற்காக இந்தி ஆட்சி மொழியாக வேண்டுமென்று கூக்குரலிடுகிறார்கள்.

ஆட்சிமொழி யாவதற்குரிய தகுதி நிச்சயமாக இந்திக்கு இல்லை.

ஆங்கிலம் இலக்கிய வளத்தையும்—தொழில் நுணுக்க விஞ்ஞானப் பெருமைகளையும் பெற்றிருக்கிறது. உலகத்தின் எந்தக் கோடியில் எது நடந்தாலும் நமக்கு 24 மணி நேரத்தில் அறிவிக்கிற வாய்ப்பையும் அது பெற்றிருக்கிறது. இத்தகைய வளமும், பெருமையும் வாய்ப்பும் இந்திமொழி பெற்ற பிறகு ஆங்கிலம் தேவையா என்று கேட்டால் பொருள் இருக்கிறது.

இதை மொழிபற்றி ஆராய்ந்த கேர் கமிஷனே ஒத்துக் கொள்ளுகிறது. விஞ்ஞானத்தில்முன்னேறியுள்ள ரஷ்யாவிலும், ஜப்பானிலும் ஆங்கிலம் இன்னும் கட்டாயப் பாடமாகத்தான் உள்ளது. எந்த நாடும் ஆங்கிலத்தை வெறுக்கவில்லை.

ஆங்கிலேயன் இருந்த காலத்தில் ஆங்கில ஆதிக்கம் என்றால் நமக்குப் புரியும். யாரும் இப்போது ஆங்கிலத்தை நம்மீது திணிக்கவில்லை, திணித்த வெள்ளைக்காரன் போய்விட்டான். அந்த மொழி வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்வது நாம்தான்! எனவே ஆங்கிலம் ஆதிக்க மொழியாக இருக்கவில்லை-இணைப்பு மொழியாக—வசதியான மொழியாக மத்திய சர்க்கார் அளவில் அது இருக்க வேண்டும் என்கிறோம்.

நாடுகளுக்குள் ஒப்பந்தம் எழுதும்போது பிரஞ்சு மொழியால் எழுதினார்கள். ஏனெனில் பிரஞ்சுச் சொற்களுக்கு 10 விளக்கங்கள் கிடையாது, ஒரே விளக்கம்தான். விளக்கங்களுக்கு ஒப்பந்தம் இரையாகக் கூடாது என்பதற்காக பிரஞ்சு மொழியைப் பயன்படுத்தினார்கள். விளக்கவுரையில் அந்தப் பிரஞ்சு மொழிக்கு அடுத்த இடம் ஆங்கிலத்திற்குத்தான்! அத்தகைய ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அந்த பீடத்தில் அமர இந்திக்கு என்ன தகுதி இருக்கிறது? ஆட்சி பீடத்தில் இந்தி அமர்ந்து விட்டால் என்ன ஆகும்?

● பாராளு மன்றத்தில் இந்தியில் மட்டுமே நடவடிக்கை இருக்கும்!

● மசோதாக்கள் இந்தியில் இயற்றுவார்கள்!

● சட்டங்களும் இந்தியில் வரும்!

● பிறகு நீதிமன்றங்களிலும் இந்தி நுழையும்.

கேர் கமிஷன் ஒரு ஆட்சி மொழிக்கு இருக்க வேண்டிய தகுதிகளைச் சொல்லுகிறது. 1. சுத்தம் தெளிவு, 2. சுருங்கக் சொல்லுதல், 3. குழப்பமின்மை! இந்தத் தகுதிகளற்ற இந்தி நீதி மன்றங்களில் நுழைந்தால் என்ன ஆவது?

இந்தியில் வளம் உண்டா? சொற்கள் உண்டா? தொழில் நுணுக்கம் உண்டா? இல்லை! நேருவே ஒத்துக் கொள்ளுகிறார்! "பின்னர் ஏன் இந்தி வேண்டும் என்கிறீர்கள்" என்றால்—"அது இணைப்பு மொழி அதனால்தான்" என்று கூறுகிறார்.

இந்தி வெறியர்களிடம் பேசியதிலிருந்து நான் ஒன்றைப் புரிந்துகொண்டேன். இந்தி ஆட்சிமொழியானாலும் இந்தி வெறியர்கள் ஒரு போராட்டம் நடத்தப் போகிறார்கள்.

"இந்தி ஆட்சிமொழியாயிற்று; சரி! அவதி இந்திக்கு என்ன மதிப்பு? என்ன இடம்? பிரஜ் பாஷா இந்திக்கு என்ன மதிப்பு? என்ன அந்தஸ்து?" என்று கேட்டுப் போராட்டம் துவங்கப் போகிறார்களாம்.

வளமற்ற இந்தியை மற்றவர்கள்மேல் திணிப்பதில் பெரும் அல்லல் படுகிறார்கள் ஆட்சியாளர்கள். அதற்குத் துணை போகின்றவர்கள் காங்கிரஸ் எம். பி.க்கள். தனியாக எங்களிடம் பேசுகிறபோது இந்தச் சட்டம் வந்தால் இந்தி அல்லாத வேறு மொழிகள் சிதையும் என்கிறார்கள். ஆனால் பாராளு மன்றத்தில் பேசுகிற பொழுது அழுகுரல்தான் கிளப்பினார்கள். வெளியே வந்து—"ஏன் பேசினீர்கள்? சட்டத்தை எதிர்த்திருக்கக் கூடாதா?" என்றால் "கட்சிக் கட்டுப்பாடு" என்கிறார்கள்! கட்டுப்பாடு காரணமாக தாய் மொழியைக் கல்லறைக்கு அனுப்புகிற காங்கிரஸ்காரர்கள் யாரானாலும் அவர்கள் நாட்டைக் காட்டிக்கொடுக்கிற கங்காணிகள் தான்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஹிரேன் முகர்ஜி, இந்த மொழி மசோதா வருவதற்கு முன்பு என்னை அழைத்து "இப்படியே இந்தி வெறியர்களை விட்டுவிடாதீர்கள்! நீங்கள் தான் இந்தி எதிர்ப்பாளர்கள் என்று முத்திரை போட்டுக் கொண்டுள்ளீர்கள்! நீங்கள்

(12-ம் பக்கம் பார்க்க)

குற்றவாளி !



கங்கை ஓடுகின்ற நாட்டில் பிறந்தவர்
கல்லைச் சுமந்த கனகனின் வழியிவர்
காவிரி நாட்டினர் அன்பினைப்
பெற்றவர்
காந்திக் கடுத்த காங்கிரஸ் தலைவர் !
ஆயிரம் சீடர்கள் இவர்க்கு உண்டு
பாயிரம் பாடவும் பலபேர் உண்டு
உலக நாடுகள் ஒன்றுவிடாமல்
பழகி வந்தவர்! பண்டித நேரு என்பது இவர்
பெயர் !

இன்று இவர்நிலை மெத்தப் பரிதாபம்
இந்தி வெறியர்கள் உருட்டிடும் பொம்மை !
எதிர்த்துப் பேச இயலாத அடிமை !
தென்னக மக்களுக் கிவர் செய்த் துரோகம்
மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம் !

தாகூர் சொல் கேளீர்

எப்படிப் பிறந்தபொழுது தாயின் மடியில் தவழ்ந்து வளர்ந்தோமோ, அதைப்போல கலாச்சாரத்திலும் தாய் மொழியிலும் தான் நாம் வளர முடியும். இந்தியாவில் தற்பொழுது நமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள ஆங்கிலம்உதவியாக இருக்கிறது. ஆனால் இந்தப் பணியை மற்றொரு மொழிக்குத் தர வேண்டுமெனச் சிலர்கூக் குரல் எழுப்புகிறார்கள். ஆனால் விரும்புகிற ஒற்றுமையை இந்த முயற்சி உண்டாக்காது. ஏனென்றால் கட்டாயப்படுத்திக் கொண்டு வரும் இத்த முயற்சி உண்மைக்குப் புறம்பானது. இயற்கைக்கு மாறானது. மிகப் போலியானது. —தாகூர்.

மரமண்டைகளே ! மறைமலை அடிகளின் வாய்மொழி கேளீர்!

எல்லா மொழிகளிலும் எல்லாச் சிறந்த நூல்களையும் தன் கண் மொழி பெயர்த்து வைத்து அவற்றின் பொருளை அவை வேண்டுவார்க்கு எளிதில் ஊட்டுந் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆங்கில மொழியை நம்மனோர்க்குப் பொது மொழியாக்காமல், இந் நலங்களில் ஒரு கடுகளவும் இல்லா இந்தி மொழியை பொதுமொழியாக்க முயலல் அறிவுடையார் செயலாகுமா? ஆகாதே!

ஆதலால் நம் தமிழ் நாட்டவர் ஆங்கிலத்தையும் தமிழையுமே நன்கு பயின்று நலம் பெறுவாராக.

—மறைமலை அடிகள்.

எந்த நாவு?

● சி. பி. சிற்றரசு ●



நான் நினைத்ததை நான் சார்ந்திருக்கும் அரசாங்கத்திற்குச் சொல்ல முடியுமானுல் என் சொந்த நாவால் சொல்ல விரும்புகிறேன். அந்த என் விருப்பமும் மக்களாட்சி முறைக்கான சட்டங்களின் உத்திரவாத முத்திரைப் பெற்றிருக்கிறது என்று நம்புகிறேன். அவர்கள், அவர்களென்ருல் ஆள்வோரைத்தான் குறிப்பிடுகிறேன். ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் ஏற்படும் புனித ஒப்பந்தத்தின் வாயிலாகக் கிடைக்க வேண்டும். கிடைத்திருக்கிறது, இதோ பாருங்கள். இந்திய யூனியன் குடியரசுச் சட்டங்களை என்றனர். நம்பினேம். நந்தவனத்தில் நாகம் மறைந்திருப்பதை யறியாமல் ஏன் நம்பினீர்கள் என்று கேட்கக்கூடும். அவர்கள் நமது அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். நம்புவதே தவறென்ருல், நம்பாமலிருப்பதற்கு என்ன பெயரோ?

பனிரெண்டு சீடர்களையும் நம்பினுர் இயேசுபிரான். அவர்களில் தன்னைக் காட்டிக் கொடுக்கும் ஒரு ஜூடாஸ் இருப்பான் என்று எப்படி அவருக்குத் தெரியும். அடிமைகள் விடுதலையில் ஆர்வம் காட்டாதவர்கள் யார் என்றுதான் நினைத்தார் ஐக்கிய அமெரிக்காவின் தலைவர் ஆப்ரகாம் லிங்கன். அவர் பிறந்த நாட்டிலேயே தன்னை வீழ்த்த ஒரு வில்லியம் பூத் என்பவன் இருப்பான் என்று அவருக்கு எப்படித் தெரியும். ரோம்நகரத் தலைவாயிலிலே கொண்டு வந்து சேர்க்கும் புகழை இகழ்வார் இந்த ரோமாபுரியில் யார் என்று கேட்டான் மத்திய தரைக் கடல் மேட்டில் ஏழு குன்றங்களின் இடையிலே எதிரிகள் புகவே முடியாது என்று வீர வேங்கை என நடைபோட்டான் ஜெகமஞ்சப் போரிட்ட ஜூலியஸ் சீசர். அந்த வேங்கையின் வாயில் ரத்தம் கசிய உடல்முழுதும் குருதி கொப்பளிக்க பாம்பேயின் சிலைக்கடியிலே சாய்த்தானே புருடஸ்—அவனை நம்பாமலிருந்தாஞ — ஏதன்ஸ் எல்லா வகையாலும் ஏற்றம் பெறவேண்டும். சிந்திக்காமல் எதையும் ஒப்புக்கொள்ளக் கூடாது என்றுன். தன் சொந்த வாழ்க்கையை எண்ணுமல் வறுமையை விரும்பி யேற்று 72 ஆண்டுகள் உழைத்தானே சாக்ரடீஸ். மெலிடர், அனிடஸ், லைகோன் எனும் பாவிகளே தன்னை சாகடிக்க நஞ்சளிப்பார்கள் என்று எண்ணியிருப்பாஞ—முடிதுறந்த சார்லஸ் மன்னனுக்கு இரணகளத்தில் முடிசூடவேண்டுமென்று தன் பதினருவது வயதில் கிளம்பிய வீரமங்கை ஜோனுக்கு பர்கண்டி மாகாணத்தாரே தன்னைக் காட்டிக் கொடுப்பார்கள் என்றுஅவளுக்கு எப்படித்தெரியும். எல்லாருக்கும் சுதந்திரம் வாங்கித் தந்து விட்டோம் என்று அமைதி கொண்டார் அண்ணல் காந்தியார். அவரைக் கும்பிட்டே கொலை செய்ய விஞயக தாமோதர கோட்சே என்பவன் ஒருவன் இருக்கிருன் என்றுஅவருக்கு எப்படித் தெரியும்? ஜாக் ஹேஸ், ஜான் விக்லிப், சபனரோலா என்ற சீர்த்திருத்தவாதிகளுக்கெல்லாம் நாம் ஒரு சண்டாள உலகத்தில் தான் நடமாடுகிருேம் என்று எப்படி அவர்களுக்குத் தெரியும். இவர்கள் சோகமிக்க சம்பவங்கள் எல்லாம் நமக்கு வழிகாட்டிகளாக யிருந்தாலும், நமக்கு அது தவிர வேறு பாதை இல்லை என்பதாலல்ல. மேற்சொன்ன நிகழ்ச்சிகள் எல்லாம் கிருத்துவுக்கு முன் நான்காவது நூற்ருண்டிலே தொடங்கி கி. பி. இருபதாம் நூற்ருன்டின் இடை வரையிலும் நடந்தவைகளாகும். கால மாறுதலில், வளர்ந்து வரும் பண்பாட்டால், சிறந்தோங்கும் நாகரீகத்தில் இவைகள் சிறுகச் சிறுக மறைந்துவிடும் என்று மனமார நம்பினேம். ஆனல் இது மாறவில்லை. இன்னும் இருக்கின்றன.

சுதந்திரம் வாங்கித் தந்தோம் என்ற பொய்யுரிமையின் பேரால் அதற்குக் கைம்மாருக நம் நாவைக் கேட்கிருர்கள். நம் தாய் தன் நாவால் நம் நாக்கையசைத்தாளோ அந்த நாக்கை வெட்டித் தரும்படிக் கேட்கிருர்கள். நாம் குழந்தையாயிருக்கும் நம் நாவில் அழுக்குச் சேராமல் அடிக்கடி தடவிக் கொண்டிருந்தாளே அந்த நகக்கை, அவள் கன்னத்தை நம் நாவால் சுவை பார்த்தாளே அந்த நாக்கை, ஆசான் எழுத்தேற்றி சுழள் ஓசையேற்றிஞளே அந்த நாவைக் கொய்து தரும்படி கேட்கிருர்கள். நாவற்றபின் உயிர் எதற்கு?

ஆகவே நாவைத் தருவதிலும் உயிரையே தருகிருேம் என்கிறது கழகம். இந்தியத் துணைக்கண்டம் சுமார் ஐநூறு நாவுகளோடு (மொழி) இயங்குகிறது. இதில் ஒரு மொழி இலக்கிய இலக்கணமில்லாத மொழி. ஆடையோ அணிகலனே இல்லாத மொழி, இப்போது தோன்றிய மொழி. உருது வடமொழி, பாரசீகம் ஆகியவைகளின் கதம்பமொழி, ஆள நினைக்கிறது. அதற்குள்ள ஒரே ஒரு தகுதி அது ஈன்ற மக்கள் ஆள்கிருர்கள் என்பார்கள் தவிர வேறென்றுமில்லை, அதனலே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ருல்; ரணகளம் செல்வோம். நாம் மொழி இழந்துவிட்டால் வெளி நாட்டான் காரி உமிழ்வான். பண்டை மொழியாம் தமிழ். இலக்கண இலக்கிய சுவை மிகுதியாம். என்றும் எந்நாட்டவரும் ஏற்றுக்கொள்ளும் பொதுமறையாம் திருக்குறள் தமிழ்ப் பெரியோன் அளித்ததாம். இறவா இலக்கியங்களாம், அதை வளர்த்த முச்சங்கமாம். கபாடபுரமாம், சேர சோழ பாண்டியர்கள் ஆண்டார்களாம், பல்லவராம் புலிகேசியாம், இமயத்தில் கொடியேற்றியோன் சந்ததிகளாம், கங்கையைக் கொண்டவனும், என்றெல்லாம் பெருமை பேசிக் கொண்டிருந்தவர்கள், தன் தாயைத் தன் கண்ணெதிரே ஒருவன் கற்பழிக்க. ஜே, ஜே என்று வாழ்த்தியவர்கள் என்று வையகம் பேசவா. ஐயோ நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது. ஒருநாளும் அது நடக்காது. இந்த நாவைத் துண்டிக்க எந்த நாவு படையெடுத்தாலும், துண்டிக்கப்படுவது எந்த நாவு என்பதை வரலாறு எழுதாமல் போவதில்லை. அதுவரையில் சாகின்றவர்கள் போக, சாகாதிருப்பவர்களே, செத்தோரின் கல்லறை முன்னுல், 'இதோ இங்கு நீங்கா துயிலுருகின்ருனே, இவன் தமிழ்த் தாயின் புதல்வன். மொழிக்கு உயிர்கொடுத்து தன் பெயரை அலைபோல் வரும் பல தலைமுறைகளுக்குச் சொந்தமாக்கிவிட்டான், என்று பேசட்டும்'.

"He belongs to the ages"

தில்லி அரசே! ஜாக்கிரதை!

இந்தியைத் திணித்தால் தி. மு. க. வளரும்

நம்பூதிரிபாத் எச்சரிக்கை!

இந்தி வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மட்டும் கைக்கொண்டு, மற்றைய மொழிகளை துச்சமென மதிக்கிறது இந்திய அரசாங்கம். ஆட்சி நடத்துவதற்கும், கல்வி போதிப்பதற்கும் தகுதியுள்ளனவாக பிராந்திய மொழிகளை ஆக்குவதில் மத்திய அரசு சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை என்பதுமட்டுமல்ல—அவமதிப்பையும் ஏற்படுத்துகிறது. இந்தி பேசுபவர்களுக்குத்தான் வசதிகளும், வாய்ப்புகளும் பெருகத்தக்க வகையிலான ஒரு தத்துவத்தை டில்லி கையாண்டு வருகிறது. இதஞல் தென்ஞட்டிலும், வங்கத்திலும் இந்திக்கு எதிரான ஒரு மனநிலை தீவிரமாக உருவாகி வருகிறது.

குறிப்பாகத் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புஉணர்ச்சி மிகவும் பயங்கரமாக உருவெடுத்துள்ளது. திராவிடர் கழகம், திராவிடமுன்னேற்றக் கழகம் முதலிய கட்சிகளின் அரசியல் அடித்தளமே, இந்தி எதிர்ப்பாகும். இந்த ஆண்டு சுதந்திர தின விழாவின்போது சென்னையில் சுற்றுப் பயணம் செய்த குடியரசுத் தலைவருக்கு எதிராகக் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கும், அதைத் தொடர்ந்து மாநில அடிப்படையில் போராட்டம் நடத்துவதற்கும் தி. மு. க. செய்த முடிவு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பினும் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு இன்னும் இருந்து வருகிறது. இதனை அலட்சியப் படுத்திவிடமுடியாது.

இந்திநீங்கலாக மற்றமொழி பேசுவோரின் மொழிப்பற்றை 'மொழி வெறி' என்று தள்ளிவிடுகிற நிலையைக் கைவிடுவதற்கு ஆளுங் கட்சி தயாராகாவிட்டால் மற்றைய மாநிலங்களிலும் இந்தி எதிர்ப்பு பரவி சக்தி பெறும்.

—இந்தி ஆதிக்கம் பற்றி "கம்யூனிஸ்ட்" என்ற பத்திரிகையில் மேற்கண்டவாறு நம்பூதிரிபாத் எழுதியுள்ளார்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலங்களின் வசதிக்காக மத்திய ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது மத்திய ஆட்சிக்குட்பட்ட மாகாணங்களாக மாநிலங்கள் இருக்க வேண்டுமா?

இவைகளுக்குத் தெளிவான பதில் சொல்வதற்கு நேரு அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால், அது இந்தியைப் புகுத்துவதற்கு எத்தகைய நியாயத்தையும் சொல்வதற்கியலாத பதிலாகவே இருக்கும். துணைக் கண்டத்தில் 14 தேசியமொழிகளில் ஒன்றுதான் இந்தி. தேசிய மொழிகளின் பட்டியலிலேயே இடம் பெறவும் தகுதியற்ற மொழியான இந்தி, அந்தப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டதற்கான காரனமே, அதுசரியாகவோ தவருகவோ மொத்தமக்களில் 20 சதவிகிதத்தினற்கு பேச்சு மொழியாக இருக்கிறது என்பதால்தான். மொழி என்பதற்கான இலக்கனமே, அதில் தனது பண்பாட்டை - பழக்க வழக்கத்தை மக்களின் மனோபாவத்தைத் தெளிவாகத் தெரிவிக்கும் சக்தி படைத்ததாக இருத்தல் வேண்டும் என்பதுதான். இந்த இலக்கணப்படி இந்தி ஒரு பொதுமொழியே அல்ல. அதில் கவிதைகள் கிடையாது: இலக்கியம் கிடையாது; பால்வேற்றுமைகள்கூட அதற்குப் பழக்கமில்லாதவை; அனைத்துக்கும் மேலாக நாகரிகத்திற்கு மேலும் பொலிவு சேர்க்கும் திறம்படைத்த கடற்கரையோரத்து மொழியே அல்ல அது. தேசிய மொழிகள் பட்டியலில் இந்தியைச் சேர்ப்பதற்கு நாம் விட்டுக்கொடுத்த வாதத்தையே, இந்தியை நம் மீது திணிப்பதற்கு அவர்கள் காட்டுகிருர்கள்.

உலகச் சரித்திரத்தில் எந்தப் பக்கத்தைப் புரட்டிப் படித்தாலும்,கடல் தொடர்பற்ற இவைகள், மனித முன்னேற்றத்தின் எதிரிகளாக-நாகரிக வளர்ச்சியின் தடைக்கற்களாக-படிப்பறிவின் பகைவர்களாக இருந்திருக்கின்றன.

மலைக் குகைகளுக்கிடையில் உருவாகப்பெற்ற ரோமானிய ஆட்சி. உலகப் பண்பாட்டை அழித்திருக்கிறதே தவிர, வளர்க்கவே இல்லை. கலை—இலக்கியங்களைப் பொறுத்தவரைரோமஏகாதிபத்தியத்தின் காலம் இருட்காலமே ஆகும். கலையழகு வாய்ந்த கட்டிடங்கள், மனித முன்னேற்றத்தை துரிதப்படுத்தக்கூடிய இலக்கியச் செல்வங்கள், மனித குலத்திற்குத்தேவையானமேதைகள் ஆற்றல் அத்தனையும் அழிக்கப்பட்ட சோகமயமான சேதிகள், மங்கோலியப் படையெடுப்பு, தைமூர் -நாதர்ஷா கொள்ளை—கடலுக்கு வெகு தொலைவில் உருவான மத்தியக்கிழக்கு அரசுகள் ஆகியவைகள் எழிச்சி வீழ்ச்சிகளில்தான் தெளிவாகத் தெரியமுடியும். இத்தகைய சாம்ராஜ்யங்கள் அமைந்த பகுதியைப் போன்றதே இந்திப் பகுதியும். இந்தப் பகுதி இதுவரை பண்பாடுவளர்த்துக் கொடுத்த பாரம்பர்யத்தைப் பெற்றதே இல்லை. அதற்கென ஒரு பண்பாடே கிடையாது. தமிழகத்தின் நாடோடிப் பாடலொன்றைக் காட்டிலும் மிக மட்டமான — மிகக் கொச்சையான துளசிதாஸ் இராமாயணத்தை மட்டும் சொந்தம் பாராட்டிக்கொண்டு, மற்ற இலக்கியங்களுக்கு எஜமானுக இந்தியால் ஒருக்காலும் ஆகமுடியாது.

"இந்தியா" என்ற ஒரு தனி நாடு இல்லை என்பது எவ்வளவு உண்மயோ, அவ்வளவு இந்தி என்பது ஒரு மொழியல்ல என்பதும். மகா புரட்டனை நியூனெஸ்பால்போ என்பவன், பசிபிக் கடலில் இலட்சக் கணக்கான சதுர மைல்களை ஸ்பெயின் நாட்டுக்கு எழுதி வைத்ததைப் போல, இமயம் முதல் குமரிவரை இடையருத நிலப்பரப்புகொண்ட பகுதி, அனைத்தும் "இந்தியா"என்றும் இந்தியின் ஏகபோக ஆதிக்கத்திற்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று சொல்வது எதிர்காலச் சரித்திரம் ஏற்க முடியாத ஒன்று. ஒருமைபாட்டுக்கும் ஒரே மொழி என்பதற்கும் சம்பந்தமே இல்லை. வேண்டுமானல்,இந்தியை எப்படியாவது ஒரு இலக்கணம் நிறைந்த மொழியாக ஆக்கிக்கொள்வதற்கு தமிழகம் எல்லா வகையிலும் உதவி புரியலாம். அதை விடுத்து, தனது மதிப்பை குறைத்துக்கொண்டு இந்தியை வளர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேணடிய அவசியமே இல்லை.

ஒருமைப்பாட்டுணர்வின் உண்மையான அம்சத்தைக் காணவேண்டுமானல், அதனைத் தென்னகத்தின்— குறிப்பாகத் தமிழகத்தின் பண்பாட்டில்தான் காணமுடியும். "தமிழகத்தின் கடற்படை பலவீனமுற்ற காரணத்தால் தான், இந்தியத் துணைக்கண்டத்தில் அந்நியரின் ஆதிக்கம் நுழைவதற்கு இடமேற்பட்டது" என்று நேரு அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிருர். அந்நியரை எதிர்த்து நின்று, இப்போது இந்திக்காரர்கள் பீத்திக் கொள்ளும் உண்மையான "இந்தியப் பண்பாட்டை" பாதுகாத்து வந்தது, இந்தத் தமிழகந்தான். இத்தகைய தமிழகத்தில் ஒரே மொழி எனும் பேரால், நஞ்சு கலக்க வேண்டாம். தமிழகத்தின் கடற்படை பலவீனமுற்றதாலேயே, அந்நியர் வர முடிந்தபோது, அதன் பண்பாடு பலவீனமுற்ருல் என்ன நடக்கும் என்பதை

(17-ம் பக்கம் பார்க்க)

புறப்படுவோம் களம் நோக்கி

புலவர் பொன்னி வளவன்

தென்னுடா? திறந்திருக்கும் வீடா? இந்தித்
தெருநாய்போல் சொறிநாய்போல் நுழைய லாமா?
என்னுடா! உங்களுக்குக் கேடா? என்று
இடுப்பொடிக்க முடியாதா நம்மால்? தண்டப்
பன்னுடை மொழிதன்னைத் தலையில் கட்டப்
பார்க்கின்ருர். திராவிடனே! இந்த நாடு
உன் நாடு! உன்மொழிதான் உனக்குத் தேவை!
உதவாத ஒழிசல்மொழி உனக்கெ தற்கு?

நாய்மானம் இல்லாமல் அலையும்; ஆனுல்
நாம்மானம் இல்லாமல் இருக்க லாமா?
தேய்மானம் நிலவுக்கு உண்டு. அந்தத்
தேய்மானம் நமக்கெதற்கு? வடக்கு நாட்டார்
மாய்மால வார்த்தைகளால் இந்தி தனனை
மறுபடியும் திணிக்கின்ருர். இதனுல் உன்றன்
தாய்மொழிக்கும் ஆபத்து! போர்தொ டுக்கத்
தயங்காமல் மயங்காமல் கிளம்பு வோம்வா!

எத்துகின்ருர் நமையெல்லாம்! இந்தி நாய்க்கு
எத்தனையோ உதைவிழுந்தும் வலிக்க வில்லை!
கத்துகின்ருர் வடநாட்டு சாஸ்திரி! அந்தக்
கத்தும்வாய் கிழிப்போம்நாம்! என்ருல் நம்வாய்
பொத்துகின்ருர் இங்குள்ளோர்! மானம் கெட்டார்
பூச்சாண்டி காட்டுகின்ருர். நமது வாழ்வைக்
கொத்துகின்ருர் அவர் என்ருல் மூளை கெட்டோர்
கும்பிடுகின் ருர்அவரை! நியாயம் தானு?

வலைபோட்டால் மீன்கிடைக்கும்; வடவர் சேர்ந்து
வரிபோட்டால் பணம்கிடைக்கும். அப்ப ணத்தில்
தொலைக்கின்ருர் இன்றுபல லட்ச ரூபாய்
தூய்மையற்ற இந்திக்கு! ஏது மற்ற
நிலையற்ற இந்தியினுல் ஆட்சி செய்ய
நிச்சயித்து சூழ்ச்சியினைத் தொடங்க லாமா?
தலையாலே நடக்கின்ற முயற்சி வேண்டாம்.
தலைகீழாய் நடப்பதனுல் உடையும் மூக்கு!

ஏங்கியதும் தூங்கியதும் போதும் தோழா!
இனம்காப்போம்! மொழிகாப்போம்! வடக்கின் தொல்லை
தாங்கியதும் தவித்ததுவும் போதும்! இன்றே
தன்மானம் காத்திடுவோம்! திட்டு வார்த்தை
வாங்கியதும் வதங்கியதும் போதும்! மக்கள்
வாழ்வுக்கு வழிசெய்து புகழால் இங்கே
ஓங்கியதும் உயர்ந்ததும்நம் கழகம் என்ற
உண்மைதனை நிலைநாட்ட ஒன்று சேர்வோம்!

கொட்டட்டும் போர்முரசு இன்றே! எங்கும்
கொடுக்கட்டும் நம்மவர்கள் குரல்மு ழக்கம்!
எட்டட்டும போராட்டச் சேதி எங்கும்
எழுந்தோடி வரட்டுமடா வீரர் கூட்டம்!
வெட்டட்டும் இந்தியின்வால்! இந்தி தன்னை
விரட்டட்டும் நம்கூட்டம்! நமக்கு வெற்றி
கிட்டட்டும்! அண்ணுவின் ஆணை இன்றே
கிடைக்கட்டும்! புறப்படுவோம் களத்தை நோக்கி!

நாடகக் கலைஞர்களே

தமிழ் வாழத் தலை கொடுப்போம்

கே.ஆர்.ராமசாமி

எந்தத் தகுதியுமற்ற இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கிடும் மசோதா, டெல்லி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது! இது நமதுவாழ்வுக்குகொரு அறைகூவலாகும்.

நாம் மொழியால் தமிழர்கள்; இனத்தால் திராவிடர்கள். என்றாலும், இனி நம் எல்லோரையும் சேர்த்து ஆளப்போகிற ஆட்சி மொழி - அரசாங்கப் பொது மொழி-தமிழல்ல, தெலுங்கல்ல, கன்னடமல்ல, மலையாளமல்ல; வடநாட்டு வெறியரின் வளமற்ற இந்தி!

ஆட்சி மொழிச் சட்டத்தின் மூலம் இந்தி ஆளுகின்ற மொழியாகவும், மற்றவை ஆளப்படுகின்ற மொழியாகவும் ஆக்கப்பட்டுவிட்டன. ஆகவே இந்திக்கு நமது மொழிகள் அடிமையாக்கப்படுகின்றன. மொழியை அடிமைப்படுத்துவதன் மூலம், மொழிக்குரிய தனித் தன்மை, வரலாறு, பண்பாடு, கலைகள் எல்லாம் அடிமையாகிவிடுகின்றன. தனி மதிப்பை இழந்துவிடுகின்றன.

பொது மொழி இந்திக்கு முதல் இடம்; பிரதேசமொழிக்கு அடுத்த இடம்! சட்டத்திற்கு முன்பே இந்த நடைமுறை வந்தாயிற்று. போராட்டங்கள் பொருட்படுத்தப்பட வில்லை. நாம் பயன்படுத்துகிறஅரசாங்க நாணயங்கள், கார்டு, கவர்கள், பார்க்கின்ற அரசினர் அலுவலகப் பெயர்கள், போர்டுகள், கட்டளைகள் எல்லாவற்றிலும், எத்தனையோ துறைகளில் இந்திக்கு முதன்மை சிறப்பிடம் கொடுத்துவிட்டார்கள். சட்டம் வருவதற்கு முன்பே அப்படியென்றால், இனிமேல் என்ன நடக்கும், எப்படி நடக்கும்என்பதை எண்ணிப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது! எப்படி வாழ்வாளோ என தரும் தமிழ்த்தாய்?

ஆளுகின்ற இந்திக்கு நமது மொழிஅடிமையென்றால், நாமும் அடிமைகள்தான்: நமது கலைகள் யாவும் அடிமைக் கலைகள்தான். இதில் ஐயமே தேவையில்லை.

இந்நாள் வரை சுதந்திரத் தோடும், தன்மான உணர்வோடும், பகுத்தறிவுப் பண்போடும் நாம் வளர்த்து வந்த நாடகக் கலைக்குப் பெரியதொருஅதிர்ச்சி— ஆபத்துவரக் காத்திருக்கிறது!



ஆட்சிமொழிச் சட்டத்திற்கு மூல காரணமாகச் சொல்லப்படும் தேசீய ஒருமைப்பாடு என்றதிரைமறைவில் அதுஉருவாகி வருகின்றது. விரைவில் பாயத் தொடங்கும்.

தனித் தமிழ், தனிப் பண்பாடு, தனிக் கலை, தனிக் காவியம், தனி வரலாறு, தனிப் பெருமை, தனியுரிமை, எல்லாமே தனியரசுக் கோரிக்கையை வலுப்படுத்துவதாகும் என்ற கருத்து என்ற பொருமை-இன்றல்ல; என்றுமே வடவர் நெஞ்சில் வளர்ந்து கிடப்பதாகும். அந்தக் கருத்தைச் சட்டமாக்கவும், கட்டளையாக்கவும் இன்று அவர்களால் முடிகிறது; செய்து முடிக்கிறார்கள்; காரணம் ஆட்சி அவர்கள் கையில் இருப்பதுதான். அவர்கள் ஆளுகிறவர்கள்; நாம் ஆளப்படுகிறவர்கள், அவர்கள் மொழிஆட்சி மொழி; நமது மொழி அடிமை மொழி; அவர்கள் ஆண்டவர்கள்: நாம் அடிமைகள்; இந்த நிலைமை நீடிக்கவே பிளவுபடாத பாரதத்தை, தேசீய ஒருமைப் பாட்டை, ஒரு தனி ஆட்சிமொழியை வற்புறுத்திச் சட்டம்செய்கிறார்கள். மானமற்ற நம்மவருமே ஒத்துழைக்கிறார்கள்; பின் விளைவுபற்றிச் சிந்தியாமல்.

'சேரன் செங்குட்டுவன்' நாடகத்தை நடத்திக் காட்டுவதன் மூலம் நமது பரம்பரைவீரத்தை மக்களுக்கு உணர்த்துகிறோம். மக்கள் வரவேற்கின்றனர்; ஆளவந்தவர்களோ, கனக விசயர் தலையில் கல்சுமக்க வைப்பது தேசீய ஒருமைப்பாட்டுக்கு ஊறுசெய்வது என்று தடுக்கலாம். தமிழனின் தனி வீரத்தை மக்கள் கண்ணிலே படாது மறைக்கலாம்! நடக்காதா?

"தமிழ் வாழத் தலைகொடுத்தான்" நாடகம் நடத்துகிறோம். குமண வள்ளலின் வலிவார்ந்த மொழிப் பற்றினை எடுத்துக்காட்டிப் புத்துணர்வு ஊட்டுகிறோம்; பொதுமக்கள் பூரிப்படைகின்றனர்.ஆளவந்தாரோ காஞ்சனை என்ற வடமொழி விறலியை வட நாட்டுக்கு விரட்டுவது, மொழி வெறியைத் தூண்டுவதாகும் என்று கூறி நாடகத்தைத் தடுக்கலாம். தமிழனின் தனிப் பெரும் கொடைவாழ்வை மேடையினின்றும் விரட்டலாம்; செய்யமாட்டார்களா? இதைப் போன்ற தமிழ் இனத்தின் தனித்தன்மை, தனிப் பெருமை காட்டுகின்ற நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் தேசீய மொழி ஒருமைப்பாட்டின் பகைக் கலன்களாக்கப்பட்டு அடக்கப்படுவதற்கான புதியஅதிகாரங்களைப் படைத்துக் கொண்டார்கள் ஆளவந்தார்கள். பறிக்கப்படப் போகின்றன கலையுலக உரிமைகளைப் பார்க்கத்தான் போகிறீர்கள்.

நாடகக் கலைஞர்களே! நண்பர்களே! நமது தனித்தன்மை, தனிக்கலை, தனியுரிமை களை அடக்குகின்றகையோடு, நாடக மேடையில் தேசீய ஒருமைப்பாடு, மொழிப்பற்று, சமரச ஞானம் வளர்ப்பதற்காக இந்தி நாடகம், இந்திமெட்டு, இந்திப் பாட்டு, இந்திப் பெருமை, இந்தியின் அவசியம் பற்றிய நாடகங்கள் கலை நிகழ்ச்சிகள்வளர்ப்பார்கள். அரசாங்க ஆதரவோடு நடத்திக் காட்டுவார்கள். பரிசு கொடுப்பார்கள். பட்டம் பதவி அளிப்பார்கள், அதற்கும் ஆயத்தமாவார்கள் இங்குள்ள ஆஞ்சனேய-விபீஷணர்கள் சிலர்!

இந்தி மொழியின் பலாத்கார ஆதிக்கத்தால் எத்தனையோ துறைகளில் ஏற்படவிருக்கின்ற மாபெருங்கேடுகளையும், சீரழிவுகளையும் தடுத்து நிறுத்துவதற்கான நீண்ட காலப் போராட்ட முறைகளை உருவாக்கிவருகிறார்கள் நமதருந்தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள். நாட்டு மக்கள், நல்லிளம் காளையர், பல துறைப் பெருமக்கள்போராடச் சித்தமாகி வருகிறார்கள்.

கருத்தற்று, கண் மூடிநடந்த நாடகத் துறையின் கண்களைத் திறந்து, புத்தொளி காட்டியவர் புதிய மறுமலர்ச்சி நாடகத் தந்தை அறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கறிவார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் நாடகங்களும், திரைப் படங்களும் விளைத்த கருத்துப் புரட்சியும், தமிழ் வளர்ச்சியும் இன்று மட்டுமல்ல; பல்லூழிகாலம் தமிழகத்திற்கு தனிப் பெரும்சிறப்பளிக்கக் கூடியவை. தமிழனது பரம்பரை படித்தும், நடித்தும், நினைத்தும், பார்த்துப் பார்த்துப் பெருமைப்படத் தக்கவை.

(27-ம் பக்கம் பார்க்க)

தம்பி

தெளிந்தபின் முடிவு

கழகத் தோழர்களுக்கு நான் தெளிவாகச் சொல்கிறேன். நாம் போய்க் கொண்டிருக்கிற பாதையில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கிறது.

ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னால், உள்ளபடி நான், மற்றவர்களைவிடப் பல தடவை யோசிப்பவன். பலதடவை யோசிப்பது மட்டுமல்ல — பயந்து பயந்து யோசிப்பவன்; பயந்து பயந்து யோசிப்பவன் மட்டுமல்ல—தயக்கப்பட்டு தயக்கப்பட்டு யோசிப்பவன்.

இது நடக்குமா; நடக்காதா? முடியுமா; முடியாதா?—என்று கேட்டுக் கேட்டுத்தான் காரியங்களைச் செய்வேன்.

மெதுவாக நான் காரியத்தைச் செய்துகொண்டு போகிற இந்த நிலையிலேயும்—நான் எதிர்பார்த்ததை விட முன்னேற்றக் கழகத்தினுடைய வளர்ச்சியும், அந்த வளர்ச்சியிலே நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய பலனும், நல்லபடி கிடைத்துக் கொண்டு வருகின்றதென்பதை ஒளிமறைவு இல்லாமல் உங்களுக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

புறப்படு போருக்கு

"நாம் நீண்ட காலப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும். நம்மை அவர்கள் பிடித்தால் பிடித்ததுதான். அடைத்தால் அடைத்ததுதான். சில மாதங்கள் அல்ல. சில ஆண்டுகள் நம்மைச் சிறைச்சாலையில் வைத்திருப்பார்கள். நம்மைச் சிறைகளில் தள்ளிவிட்டு-ஆட்சியாளர் பல ஆண்டுகள் நிம்மதியுடன் - நம் தொந்தரவு இல்லாமல் இருக்கலாமென நினைக்கிறார்கள்."

"மக்கள் அனைவரும் கிழக்கு மேற்கு பார்க்காமல் மாமியார் வீட்டுக்குப் போகும் புதிய மாப்பிள்ளை போல்— போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும்."

"நமது பிள்ளைகளின்—எதிர்காலச் சந்ததிகளின் அடிமை வாழ்வு ஒழிந்து, சுதந்தர மக்களாக வாழ-எதிர்கால மக்கள் சுயமரியாதை வீரர்களாக வாழ-சிறைச்சாலைகளுக்குச் செல்லப் போகிறோம். ஆதலால், மக்கள் அனைவரும் சிந்தித்து நல்ல முடிவுக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட முன்வர வேண்டும்."

திக்கெட்டும் போர்க்குரல்

என்.வி.நடராசன்

இந்தியத் துணைக் கண்டத்தை உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், மக்களின் நல்வாழ்வுக்குரிய முக்கியப் பிரச்சினைகள் பலவற்றில் தீர்வு காண இயலாத நிலையிலும், தீர்வு கண்ட திட்டங்களை இனிதே நிறைவேற்ற முடியாத நெருக்கடியிலும் இந்திய அரசு சிக்கித் தவித்து வருகிறது.

இந்நிலையில் வம்பை விலைக்கு வாங்குவது என்பார்களே அது போல, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு இன-மொழி-கலாச்சாரப் பண்பாட்டைக் கொண்ட மக்கள் இடையே விரோத உணர்ச்சியும், குரோதமும், அமைதியின்மையும் ஏற்படும் வகையில் இந்திய அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது வருந்தத்தக்கதாகும்.

இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்றெல்லாம் ஓயாது உபதேசம் செய்பவர்களே, அந்த ஒருமைப்பாட்டின் வளர்ச்சியை சீர்குலையச் செய்துவருவதென்றால், இந்தியத் துணைக் கண்டத்திற்கு இதைவிட பேராபத்து இருக்கமுடியாது.

இந்தியாவுக்கு எதிரிகள் என்பதாக எந்த நாடும் இருந்ததில்லை. இப்போது துள்ளுகிற சீன ஆக்கிரமிப்பாளர்களைத் தவிர! இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், இந்திய அரசு காலத்தை வீணாக்காமலும், விவேகத்துடனும் நடந்திருந்தால், காஷ்மீர் விவகாரத்தில் தக்க முடிவு கண்டு, இந்தியா-பாகிஸ்தான் உறவையும் வளர்த்திருக்கலாம். பாகிஸ்தானின் பிடிவாதத்தையும் தளர்த்தச் செய்திருக்கலாம்.

ஆக இப்போது ஏற்பட்டுள்ள சீன ஆக்கிரமிப்பைத் தவிர இந்தியாவுக்குத் துரோகமிழைக்கவேண்டும், இந்திய ஒற்றுமைக்குக் கேடு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் உலக நாடுகளிடம் இல்லையென்றே கூறலாம்,

ஆனால் இந்திய மக்களின் ஒன்றுபட்ட தன்மைக்குத் தெரிந்தோ தெரியாமலோ கேடு விளைவிப்பவர்கள் இந்தி வெறியர்கள்தான் என்று கூறினால் தவறாகாது என்று எண்ணுகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் நாற்பது கோடி மக்களது வாழ்வுப் பிரச்சினை, அதற்கான திட்டங்கள் அனைத்தும் நிறைவேறிவிட்டதைப் போலவும், இனி மொழிப் பிரச்சினை ஒன்றுதான் மீதமிருப்பது போலவும், அந்தச் சிக்கலும் தீர்ந்துவிட்டால் பரிபூரண சுயராஜ்யத்தை அடைந்து விட்டதாக ஆகும் என்பதைப்போலவும், மிக அவசர அவசரமாக இந்தியாவுக்கு ஒரு பொது மொழி தேவை – அதுவும் உடனே தேவை. இல்லையெனில் எல்லையிலே தொல்லை தரும் சீன ஆக்ரமிப்பாளன் திரும்பிப் போகமாட்டேன் என்கிறான்-காஷ்மீர் சிக்கல் தொடர்ந்து தொல்லை தருவேன் என்கிறது. இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி என்று சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட்டால் மேலே குறிப்பிட்ட தொல்லைகள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்று உலக நாடுகள் சபை உத்திரவாதம்அளித்ததைப் போலவும் எண்ணமிட்டு, இந்தியை ஆட்சி மொழியாகத் திணித்திருக்கிறார்கள் என்றால் இந்திய அரசின் இப்போக்கினை எதற்கு ஒப்பிடுவதென்றே தெரியவில்லை.

நாட்டின் முன்னேற்றத்திற்கான எவ்வளவே திட்டங்களும், சிக்கல்களும் எதிர்நோக்கியிருக்கும் இந்த நேரத்தில், அதிலும் சீன ஆக்ரமிப்பாளர்கள் ஒருபுறம் மிரட்டிக் கொண்டிருக்கும் இக்கட்டத்தில் இந்தியாப்பிரதமர் தாம் இந்திய அரசின் சார்பில் உலகறிய கொடுத்த வாக்குறுதியை மீறி, இந்தி திணிக்கப்படுகிறதென்றால், உண்மையிலேயே ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் கேடு விளைவிப்பவர்கள் இவர்களைவிட வேறு யாராக யிருக்கமுடியும்?

இந்தித் திணிப்பை எதிர்த்து விரட்டியடிக்கும் மகத்தான பணியில் தென்னகம் குறிப்பாகத் தமிழகம், *1938*-ம் ஆண்டிலிருந்து முனைத்து நின்று-அறப்போர் தொடுத்து, அன்று வெற்றியும் கண்டிருக்கிறது என்பதை தமிழக அரசியல் வரலாறே விவரித்துக் கூறும்.

1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்பு அறப்போர், எனது அரசியல் வாழ்வில்—பொது வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்றுங் கூறுவேன். அன்றுவரை காங்கிரஸ் தொண்டனாக யிருந்து வந்த யான் *1938*-ம் ஆண்டுக் கட்டாய இந்திச்சட்டத்தால் வெறுப்புணர்ச்சி கொண்டேன். **அறிஞர் அண்ணா** அவர்களின் பெருந்துணையால் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபடவும், எனது குடும்பமே சிறை செல்லவுமான நிலை பெற்றேன். இது குறித்து விவரிப்பது தற்புகழ்ச்சியாகுமோ என்று அஞ்சி விடுகின்றேன்.

1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்பு அறப்போர் நாடெங்கிலுமுள்ள என்னைப் போன்ற சில காங்கிரஸ் தோழர்களுக்கு எழுச்சியையும். உற்சாகத்தையும் ஊட்டிற்று என்றும் கூறுவேன். அன்று என்னைப் போலவே சில காங்கிரஸ் தோழர்கள் காங்கிரசிலிருந்து விலகி, இந்திப்போரில் ஈடுபட்டனர். அந்த கடமை உணர்ச்சி இன்றைய காங்கிரஸ் தோழர்களிடம் இல்லையே என்று வருந்துகிறேன்.

பர்மிட், லைசென்ஸ், பதவி ஆகியவைகளைக் காட்டி காங்கிரஸ் தோழர்களின் மனசாட்சியையே அடிமையாக்கப்பட்டு வருகிறது. காங்கிரஸ் தலைமைப் பீடத்தால், குறிப்பாக இந்தி ஆதிக்க முகாமினரால்! இந்த மயக்கத்திலிருந்து காங்கிரஸ் தோழர்கள் தெளிவு பெற வேண்டும் என்று அடிக்கடி **அறிஞர் அண்ணா** அவர்கள் கூறிவருவதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்,

1938-ம் ஆண்டு, இந்தியைக் கட்டாயப் பாடத் திட்டமாகக் கொண்டு வந்தவர் ஆச்சாரியார் அவர்கள்தான். அந்த உத்திரவை எதிர்த்து நான் காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் கொண்டுபோய் வோட்டுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றதின் பின்னரே, நான் காங்கிரசிலிருந்து வெளியேறி, இன்றுவரை கழகத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையில் தொண்டாற்றி வருகிறேன். எனது அரசியல் வாழ்வில் நான் பொதுத் தேர்தலுக்கு (வடவர்கள் பெரிதும் வாழக்கூடிய தொகுதியில்) இருமுறை போட்டியிட்டும் வெற்றி பெற்றேனில்லை. அது சமயம் எனக்குவருத்தம் ஏற்படவில்லையென்று கூறும் வரட்டு ஜம்பம் எனக்கில்லை. வருத்தப்பட்டேன்.

ஆயினும் எனது பொதுவாழ்வில் நான் பெற்ற ஒரு மகத்தான வெற்றியை எண்ணியெண்ணி அந்த வருத்தத்தை அறவே மறந்துவிட்டேன்.

எந்த ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சரா யிருந்தபோது *1938*-ல் கட்டாய இந்தியைக் கொண்டுவந்து, நான் காங்கிரசிலிருந்து வெளியேறுவதற்கு காரணமாயிருந்தாரோ, அதே மதிப்பிற்குரிய ஆச்சாரியார் அவர்கள் இன்று இந்தித் திணிப்பை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்புவதும், 'இந்தி ஆதிக்கத்தை வீழ்த்துவதே

(27-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலேயனை விடக் கொடுமையானவர்கள் காங்கிரஸ்காரர்கள்

ஆனந்தவிகடனின் கருத்து

"ஒரு நாட்டிலே அதிக செலாவணியில் இருக்கும் பொருள்களின் பெயர்கள் அவர்கள் சொந்த மொழியிலேயே இருக்க வேண்டும். 'நயாபைசா' என்ற பெயர் தமிழல்ல. அதில் தமிழிலும் ஒன்றும் குறிக்கப்படவில்லை. ஆங்கிலேயர் ஆண்டபோது கூட நமது காசுகள் சிலவற்றில் தமிழ் இருந்ததே! அடிமை நீங்கி சுதந்திரம் அடைந்தபின் அந்தச் சலுகைகூட இல்லையே என்று வருந்துவது இயற்கை."

"அரியணையில் தமிழ்த்தாய் அமர்ந்த இவ்வருஷம் நமது நாணயத்திலும் தமிழ்மொழி இடம்பெறத்தான் வேண்டும். ஹிந்திப் பித்து இந்த அளவுக்கு வேண்டியதில்லை. கார்டிலே ஹிந்தி; கவரில் ஹிந்தி; மணியார்டர் பாரத்தில் முழுக்க முழுக்க ஹிந்தி; இவைகளைத் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கும்பொழுது அவர்களுடைய மனதில் கொஞ்சம் சிரமம் உண்டாவது இயற்கை."

"ஹிந்தியை நன்றாகப் பரப்பட்டும். வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. அதற்காக எல்லாவற்றிலும் அதையே போட்டுத் தொலைப்பது கண்டிக்கவேண்டிய விஷயம்தான்."

"நாடு நம்முடையது. அரசு நம்முடையது. நம் நாட்டைத் 'தமிழ்நாடு' என்றே அழைப்போம்."

—ஆனந்தவிகடன்,
14-4-57.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

எனது கடமை' என்று அவர் முழக்கமிடுவதும் கண்டு நான் மிகமிகப் பெருமிதம் கொள்கிறேன். அதாவது, நான் அன்று கொண்ட கொள்கை சரியானது நியாயமானது என்பதை ஆச்சாரியார் அவர்களே ஒப்புக்கொண்டார் என்றால் இதைவிட எனக்குப் பொது வாழ்வில் பெருமை என்ன இருக்க முடியும்?

அதுபோலவே நமது மதிப்பிற்குரிய அறிஞர் அண்ணா அவர்களின் அன்பு உள்ளத்திற்கு ஒருவளவாகிலும் உரிமையுடையவனாக இருந்து வருவதை எனது வாழ்வின் இன்பமாகக் கருதி வருகிறேன்.

எனவே, இன்று காங்கிரஸ் முகாமில் இருந்துகொண்டு, இந்தியை எதிர்க்கவேண்டும் என்ற உணர்ச்சி யிருந்தாலும் எதற்காகவோ அச்சப்பட்டுமனசாட்சிக்கு விரோதமாகநடந்துவரும் காங்கிரஸ் தோழர்களே, நீங்கள் தாய்மொழிக்குத் துரோகம் செய்யும் அநீதிக்கு ஆளாகாதீர்கள்; பண்டித நேருவின் அன்பைவிட, காமராசரின் தயவைவிட தமிழன்னையின் தன்மானம் கோடிபெறும்.

நீங்கள் உங்கள் கடமைகளை மனசாட்சியுடன் செய்தால் அதாவது இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடினால், நாளை முதலமைச்சர் காமராசரே, பண்டித நேருவே உங்கள் முடிவுதான் நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் வகையில் இந்தித் திணிப்புச் சட்டத்தை திருத்துவதோடு, இடையே ஏற்பட்ட விரும்பத்தகாத சம்பவங்களுக்கு மனமார வருந்தும் நிலை ஏற்படும்.

ஆச்சாரியார் அவர்களே அதற்கு எடுத்துக்காட்டாக, முன்மாதிரியாக இருக்கிறார்கள்—எனவே காங்கிரஸ் தோழர்களே இந்தித் திணிப்புப் பிரச்னையிலாகிலும் நீங்கள் தமிழ் நாட்டுக்குத் தாய் நாட்டுக்கு ஆற்றவேண்டிய கடமையை ஆற்ற வாரீர் என்று அழைக்கின்றேன்.

காங்கிரஸ் தோழர்களோ அல்லது மற்ற கட்சித் தோழர்களோ மொழி உரிமைக் காக்கும் உணர்ச்சியைப் பெற்றாலும் பெறாவிட்டாலும், கழகத் தோழர்களே, ஆதரவாளர்களே இந்தித் திணிப்பைத் தகர்த்தெறிய நமது அண்ணா அவர்களின் வழிநின்று கடமையாற்ற அரசினர் அடக்கு முறை நம் மீது ஏவப்பட்டால் ஆயிரக்கணக்கில் சிறை செல்ல அணிவகுத்து வாரீர்! வாரீர்! என்று பணிவோடு வேண்டுகிறேன்.

இறுதியாக இந்தித் திணிப்பாளர்களுக்கு 'ஒன்று கூறுவேன். இந்தித் திணிப்புச் சட்டம் திரும்பப் பெறுதவரையில், இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதி நிலவாது. தமிழகம் மட்டுமின்றி ஆந்திரம், கருநாடகம், கேரளம், வங்கம்உள்ளிட்ட பல மாநிலங்களில் இந்தித் திணிப்பை எதிர்த்து போர்க் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது. எனவே இந்தியத் துணைக் கண்டத்தின் மக்களிடையே கூடுமான அளவு தோழமை உணர்ச்சி நிலைபெற வேண்டுமானால் இந்தித் திணிப்புச்சட்டத்தைத் திரும்பப் பெறுவீர், பிரதமர் நேரு சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்.

அதுதான் விவேகமும் அரசியல் அறமுமாகும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தையும், இந்தித்திணிப்புச் சட்டத்தையும் நிறைவேற்றியவர்கள்தான் சாரதா சட்டத்தையும், மதுவிலக்குச் சட்டத்தையும் நிறைவேற்றி வைத்தவர்கள். பயனற்ற சட்டங்களைச் செய்து பொது மக்களின் வெறுப்புக்கு ஆளாகாமல் இருப்பது ஆட்சி புரிபவர்களுக்கு நல்லது.

மொழி ஒருவனுக்கு 'விழி; விழி இழந்த வாழ்வு எப்படி வாழ்வாகாதோ அப்படியே மொழி இழந்த வாழ்வும் வாழ்வாகாது· மொழியை இழந்து வாழ்வதுதான் சுதந்திர வாழ்வு என்றால், தமிழனுக்கு அத்தகைய வாழ்வு தேவையில்லை.

முடி ஆட்சியிலிருந்து குடி ஆட்சிக்கு வந்த நாடுகளிற் பல இராணுவ ஆட்சிக்குப் போய்விட்டன. இன்னும் சில நாடுகள் இராணுவ ஆட்சிக்குப் போய்க்கொண்டிருக்கின்றன· இந்தியாவும் அத்தகைய வழியில் போகாதிருக்கவேண்டும் என்று நாம் ஆசைப்பட்டுப் பயனில்லை. ஆட்சிபுரிபவர்களுக்கும் அத்தகைய ஆசை உண்டாக வேண்டும். இன்றேல் இராணுவ ஆட்சி இந்தியாவை விரைந்து தழுவிவிடும்.

வாழிய செந்தமிழ்!
வாழ்கநற் றமிழர்!

கலைஞர் மு. கருணாநிதியின் நூல்கள்

• தறலோவியம்	1.25
• மணிமகுடம்	1.75
• உதயசூரியன்	1.50
• தேனலைகள்	1.50
• கருணாநிதியின் சிறுகதைகள்	1.50
✱ முரசொலி மாறன். M.A; தீட்டிய	
• நாளை நமதே	1.50
• ஏன் வேண்டும் இன்பத்திராவிடம்	1.50
• அபாய விளக்கு	1.50
✱ சிந்தனைச்சிற்பி சி.பி.சி. தீட்டிய	
• ரோம் நாட்டு வீரன்	1.50
✱ சொர்ணம் எழுதிய	
• விடை கொடு தாயே	1.75
✱ ரா. வேங்கடசாமி எழுதிய	
• உயிரை வாங்கிய உயில்	1.25

வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.
முன் பணம் அனுப்பி வேண்டுவன பெறவும்.

முத்துவேல் பதிப்பகம்.
த.பெ. எண்: 719 .... சென்னை-6.

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

முத்தமிழ் வித்தகர் அறிஞர் அண்ணா அவர்கள் 1938-ல் நடந்த முதல் மொழிப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள்.

இரண்டாவது 1948-ல் தனது பங்கை நிறைவேற்றி வேற்றினர்கள்.. மூன்றாவதாக நடைபெறப் போகும் மொழியுரிமைப் போரை மாபெரும் போராக நடத்தி, திராவிடனின்- தமிழனின் - தன்மானத்தைப் பாதுகாத்து வாழவைப்பதில் முனைந்துள்ளார்கள். நமது கடமைபற்றியும், உரிமை பற்றியும், நமது பிற்காலச் சந்ததியின் கலை வாழ்வு, மொழியுரிமை, வாழ்வுரிமை பற்றியும் நாம் கொண்டிருந்த கருத்துக்களை வலியுறுத்தவும், செயற்படுத்தவும் காலம் வந்துவிட்டது. பேச்சு வேண்டாம்; இனி செயல் வேண்டும்!

நாடகக் கலைஞர்களே! நண்பர்களே. கட்டாய இந்தில் திணிப்பால் நமது மொழிக்கு ஏற்படுகின்ற ஊனம், கலை வடிவங்களை முடமாக்க வல்லது. எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் நடிப்புச் சுதந்திரங்களை நயவஞ்சகமாகப் பறிப்பது. கலைத் துறையை வடவர்க்கு அடிமையாக்குவது. இந்தி ஏகாதிபத்திய வெறிச்செயலால் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புகள், நாடகங்கள் மட்டுமே பாதிக்கப்படும் என்று கருதாதீர்கள். முற்போக்குக் கருத்தும், மொழிப் பற்றும்கொண்டு தமிழ் வாழத் தமிழன் உயர்ந்து, தமிழ் நாடு செழித்துக் நாடகக் கலை செழிக்கவேண்டும் என்பதை இலட்சியமாகக்கொண்ட எந்த நாடகமும் பாதிக்கப்படும். எவரது நாடகமும் தடுக்கப்படும், திருத்தப்படும், அழிக்கப்படும். தமிழன் பெருமைக்குப் புறம்பான நாடகங்கள்-தமிழனை இழிவுபடுத்தும் நாடகங்களை வேண்டுமானால் நடத்தலாம்! அரசினர் ஆதரவு கிடைக்கலாம்! ஈனப்பிழைப்பு!

ஆட்சிமொழிச் சட்டத்திற்கும் நாடகக் கலைக்கும் சம்பந்தம் ஏதுமில்லை என்று கருதுகிறவர்கள், இந்த இருபதாம் நூற்றாண்டு, மக்களாட்சி யுகத்தில் வடக்குச் சீட்டுக்கும் மந்திரி சபைக்கும் சம்பந்தமில்லை என்று கருதுகின்ற "மாமேதை"களாக இருக்க வேண்டும்! அல்லது, காசுக்கும் கலைக்கும் மட்டும் சம்பந்தம் ஏற்படுத்துகின்ற 'கலைமேதை'களாக இருக்க வேண்டும்!

நாடகக் கலைஞர்களே! நண்பர்களே! கருத்துள்ள கலை, மனிதனை உயர்த்துவது; கன்னித் தமிழர் மொழி, கலையை வளர்ப்பது! நமது கலை, நமது மொழி இரண்டுக்கும் சேர்த்து இந்தி என்னும் பெருந்தீயால் ஆபத்து வந்திருக்கிறது. காப்பாற்றக் கைகொடுங்கள்'

Regd No: M 7640

இந்தி எதிர்ப்பு மலர்

தென்னகத் தலைவன்

ஆசிரியர்: தினகரன்

கல்லாலே அடி

தமிழ்த் துரோகிகளுக்குத் தண்டனை.

தூக்கிலே போடு.

கழுவிலே ஏற்று.

கழுதை மேல் ஊர்வலம்.

தமிழ் மன்னர்களின் அமைச்சரவை யும்-மக்கள் மன்றமும் தாய்மொழித் துரோகிகளுக்கு அளித்த தண்டனை இப்படித்தான் இருக்க முடியும்.

நெருப்பிலே வாட்டு.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஸி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.